

கல்கி

KALKI
12.8.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

குடும்பத்துடன் படிக்க...

முதல்வர் சிதம்பரம்!
-காங்கிரஸ் கலகல



தமிழ்நாட்டுக்கு ஓர் அஜண்டா?

Team Health Shoppe
For Wellness

சென்னையில், டீம் ஹெல்த் ஷாப்பின் 4வது கிளை - புரசைவாக்கத்தில்

பாரம்பரியமான அழகு சாதன மற்றும் உணவு பொருட்களை இயற்கையான முறையில் வழங்குகிறோம். வாருங்கள், வாழ்க்கைக்கு மேலும் மெருகேற்றுங்கள்.



ஸ்பெஷல் ஆஃபர்*
அனைத்து ஆலோவிரா தயாரிப்புகளுக்கும் 5 முதல் 10% தள்ளுபடி. இச்சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே

*Conditions apply



- Team Energy Herbal water
- Aloe vera based beauty products
- Natural Health Products

TEAM EUBIO CARE (Division of CAL)

வண்டலூர்: டீம் ஹவுஸ், ஜி.எஸ்.டி. ரோடு, சென்னை - 48. போன்: 2275 0502

அண்ணாநகர்: பிளாட் 1200, Z பிளாக், 6வது அவென்யு, (லேபர் ஆபிஸர்ஸ் குவார்ட்டர்ஸ் அருகில்) 24A, பஸ் ரூட், போன்: 4269 3332

இந்திரா நகர்: 3வது அவென்யு, எண்.26, தரைதளம், கார்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், போன்: 4269 5115

புரசைவாக்கம்: 238, கீழ்தளம், பிரின்ஸ் டவர், (அபிராமி மால் எதிரில்), புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 010. போன்: 4542 8898

For bulk requirements, Contact : Team House - GST Road, Vandalur, Ch - 48
Fax : 22750860 (or) E-mail: teamhealthshoppe@drraoholdings.com

www.teamhealthshoppe.com | OPEN ON ALL DAYS

குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதிபாவுக்கும், ஷெகாவத்துக்கும் எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்தி, ஜனநாயகத்தின் மாண்பைக் காக்காத மூன்றாம் அணி, தோன்றலின் தோன்றாமை நன்று என்ற எண்ணத்தைத் தோற்றுவித்த தலையங்கம் மிக உண்மை!

மதுரை - இரா.சக்கரபாணி,
தேனி - பாலசுப்ரமணியன்,
குடந்தை- கே.வெங்கடேஷ்

கிரீடம் படம் வந்த சூட்டோடு சூடாக வந்தது விமர்சனம். க்ளைமாக்ஸில் அஜீத்தின் இன்னொரு பரிமாணம் வெளிப்பட்டதென நீங்கள் விமர்சித்த அதே நாளில் தியேட்டரில் க்ளைமாக்ஸை மாற்றி விட்டனரே!

சென்னை - 78, மல்லிகா அன்பழகன்

வட்டமேஜை



சரியான நெத்தியடி!

'அசத்யமேவ ஜயதே!' அதிரடி கார்ட்டூன், சரியான நெத்தியடி!

இனாம் மணியாச்சி - ச.ஆ.கேசவன்,
பெங்களூரு - ப.மூர்த்தி
பொள்ளாச்சி - என்.சீதாலட்சுமி

சினிமா நடிகர்களுக்கு ரசிகனாக இருப்பவன் முட்டாள் என்று டாக்டர் ராமதாஸ் சரியாகத்தானே சொல்லியிருக்கிறார். சினிமா பைத்தியம் பிடித்து அலைகிற தமிழகத்தில் இப்படி ஒரு கருத்தைச் சொல்வதற்கே நெஞ்சுரம் வேண்டும்!

மயிலாடுதுறை, இரா.இராஜேந்திரன்

அரசின் கட்டுப்பாடும், பல்கலைக் கழகத்தின் சட்டதிட்டங்களும் இல்லாமல் சிறந்த அறிவாளிகளுக்கு அவர்கள் விருப்பம் போல் கல்விமுறையில் பரிசோதனைகள் செய்வதற்கு சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று மூதறிஞர் இராஜாஜி கூறியது நிதர்சனமான உண்மை.

உறையூர், எஸ்.சுந்தரவடிவு

சினிமா என்பது பொது மக்களின் பொழுதுபோக்கு அம்சம். அதைப் பார்ப்பதும் பார்க்காமல் இருப்பதும் அவரவர் இஷ்டம். சினிமாவைப் பற்றியும் சினிமா பார்ப்பவர்களைப் பற்றியும் விமர்சிக்கும் டாக்டர் ராமதாஸ் சிந்தித்துப் பேச வேண்டும்.

த.முருங்கப்பட்டி, எஸ்.கே.வாலி
பள்ளப்பட்டி, த.அசாருதீன்

'கண் சிமிட்டிய விண்மீன்' மொழி பெயர்ப்புக் கட்டுரை மனதைத் தொட்டது. இதுபோன்ற உள்ளம் கவரும் மொழி பெயர்ப்புகளை இருகரம் கூப்பி வரவேற்கிறோம்.

குட்டலாடம்பட்டி, கொ.மூர்த்தி

அப்துல் கலாமின் நம்பிக்கை நம் எல்லோருக்குமே நம்பிக்கையூட்டுகிறது.



அவருடைய கனவு நனவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அதுவரை காத்திருப்பது நம் கடமை.

கூத்தப்பாக்கம் - மூர்த்தி
சென்னை - ரொசாரியோ ரவிச்சந்திரன்

'**க**ல்கி'யைப் பார்க்க வந்த 'கல்கி' கற்பனை எனினும் உள்ளத்தை பரவசப்படுத்தியது உண்மை.

சேதுநாராயணபுரம் - ஜி.பாலசுப்ரமணியன்,
திருச்சி - சாத்தூர் சபாபதி, மதுரை-ஆர்.பிருந்தா,
திருவாரூர் - சரவண பவன்

பிரதிபா பாட்டில் மீது தற்பொழுது எந்தக் குற்றவியல் நீதிமன்றத்திலும் எந்தக் குற்றச்சாட்டும் நிலுவையில் இல்லை. அவர் மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு யாதொரு அடிப் படை ஆதாரமும் இல்லை. இந்நிலையில் கல்கி தலையங்கம் அதன் நடுநிலையைச் சந்தேகிக்க வைக்கிறது.

கோவில்பட்டி, ஜெ.மகேஷ்குமார்,
(மாநில பொதுக்குழு உறுப்பினர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி)

ஆண்டு மலர், மனதுக்கு நிறைவைத் தந்தது. பல புதிய பகுதிகள், பயனுள்ள தகவல்கள் ஆகியவற்றுடன் சிறப்பு தரும் விதமாக மீண்டும் 'பார்த்திபன் கனவை'த் தொடங்கி விட்டீர்கள்!

பாளையங்கோட்டை, கே.மோகனசுந்தரம்

நாட்டில் வன்முறையாளர்கள், தீவிரவாதி கள், நக்சலைட்டுகள் உருவாவதன் மூலக் கனல் எதுவென்பதை முதல் பரிசு பெற்ற 'தூர்த்தும் நிழல்' சிறுகதை படம்பிடித்துக் காட்டியது.

எம்.தூசிமுத்து
சென்னை - 11.

பாலியல் கட்டுரைத் தொடரைப் பிரசுரிக் கும் இதழைக் கண்டித்து எழுதிய ஆசிரியர் கடிதம் பாராட்டுக்குரியதே! ஆனால், அதைத் தட்டிக் கேட்க இதுவரை ஒருவரும் முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கண்டித்து எழுதும் வாசகர் கடிதங்கள் கண்டுகொள்ளப்பட்டால்தானே!

இராயப்பேட்டை, அய்யாறு எஸ்.வாசுதேவன்

ஸ்பீடு போஸ்ட்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

ஆசிரியர் குழு :
சா.ஜெயராஜ், ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

தினசரிகளில் இப்போதெல்லாம் 'கனிமொழி கருணாநிதி' என்றே குறிப்பிடுகிறார்கள். தமது சுய அடையாளம் குறித்து பெருமைபட்டுக் கொள்ளும் இயல்புடைய கனிமொழி, இதை எப்படி எடுத்துக் கொள்கிறார்?

''பள்ளி, கல்லூரியில் என் அதிகாரபூர்வமான பெயர் கனிமொழி கருணாநிதி தான். இத்தனை காலமாக இது போன்று குறிப்பிடாத பத்திரிகைகள், இப்போது குறிப்பிடுவது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. கவிதை என்பது ஆத்மார்த்தமான ஒரு விஷயம் என்பதால் 'கவிஞர்' என்றுகூட அடைமொழி கொடுக்க வேண்டாம் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன்'' என்கிறார் . அவருடனான சந்திப்பிலிருந்து...

தினமும் நாளிதழ்களில் உங்களைப் பார்க்க முடிகிறது... மீடியா உங்களை ஓவராக வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக நினைக்கிறீர்களா?

''மீடியா என்னைப் பற்றி வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகச் சொல்லப்படுவதுகூட, நான் சமீப காலங்களில் அதிகமாக பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதன் காரணமாகத்தான் என்றே நினைக்கிறேன். நான் என்றைக்கும் மீடியாவை அணுகியது கிடையாது. ''

உங்கள் களம், இலக்கியம். முற்றிலும் சம்பந்தமே இல்லாத ஒரு துறைக்கு (அரசியல்) வந்துவிட்டதாக நினைக்கிறீர்களா?

''நிச்சயமாக இல்லை. அரசியல் சூழல், போராட்டங்கள் என்பது நான் நினைவு தெரிந்த நாளிலிருந்தே பார்த்து வளர்ந்த விஷயம். திராவிட இயக்கச் சிந்தனைகள், சமூக நீதி ஆகியவை பற்றிய புரிதலை குடும்பச் சூழலே சொல்லிக் கொடுத்தது. சுருக்கமாகச் சொன்னால் என்னைச் சுற்றி அரசியல் இருந்தது; அதில் நானும் இருந்தேன்.''

நீங்கள் அரசியலுக்கு வந்ததே திணிக்கப்பட்ட நிகழ்வுதான் என்று சொல்லப்படும் கருத்து பற்றி...

''எதுவும் என் மேல் திணிக்கப்படவில்லை. சில விஷயங்கள் என்னிடம் எதிர்பார்க்கப்பட்டபோது, அதற்கு நான் தயாராக இருந்தேன் என்பதே நிஜம்.''

தயாநிதி மாறன் பிரச்னைக்குப் பிறகு நீங்கள் ஏன் களமிறக்கப்பட வேண்டும்? முன்னரே உங்கள் அரசியல் பிரவேசம் நிகழ்ந்திருக்கலாமே?

''தயாநிதி அவர்கள் தொடர்ந்து அதே நிலையில் நீடித்திருந்தால்கூட நான் அரசியலுக்கு வந்திருக்கலாம். தயாநிதி பிரச்னை வருவதற்கு முன்பேயேகூட 'நான் அரசியலுக்கு வருவேன்' என்று ஊடகங்கள் ஆரூடங்கள் கூறி வந்தனவே.''



தயாநிதிக்கு நீங்கள் மாற்று என்பதை திட்டவட்டமாக மறுக்கிறீர்களா?

'' இரண்டு பேருக்கும் அரசியல் குடும்பப் பின்னணி என்பதுதான் ஒரே ஒற்றுமை. மீடியா, வர்த்தக உலகப் பின்னணியில் வந்தவர் தயாநிதி. அவருடைய அரசியல் நம்பிக்கை, அனுபவங்கள் என்பவை வேறு. கலை, இலக்கியம் பின்னணியுடன் வந்த என்னை அவரோடு ஒப்பிடக் கூடாது. தி.மு.க. போன்ற மாபெரும் இயக்கத்தில் குறிப்பிட்ட ஒருவருக்கு மாற்றாக, தலைவர் குடும்பத்திலிருந்துதான் வர வேண்டும் என்பது கிடையாது. தகுதியுள்ளவர்கள் இங்கே நிறையவே இருக்கிறார்கள்.''

ஒரு ராஜ்ய சபை உறுப்பினரின் கடமையாக எதைக் கருதுகிறீர்கள்?

''இதுவரை அதிகம் பேசப்படாத, மக்களுக்குத் தேவையான விஷயங்களை விவாதத்துக்குக் கொண்டு வர வேண்டும். பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடுக்கு என் குரல் ஓங்கி ஒலிக்கும். மற்றபடி தி.மு.க. முன் வைக்க விரும்பும் விஷயங்களை என் குரலும் எதிரொலிக்கும்.''

தமிழக மக்களுக்கு உங்களின் பங்களிப்பு என்னவாக இருக்கும்?

'''இருக்கும் கட்டமைப்புக்குள் என்ன மாற்றங்களைக் கொண்டு வர முடியுமோ, அதைச் செய்ய முயற்சி செய்வேன். என் வேர்கள் தமிழகத்தில்தான் இருக்கின்றன. நான் சார்ந்திருக்கும் இயக்கக் கொள்கைகள் வழிகாட்ட, என்னால்



> "தி.மு.க.வின் டெல்லிப் பிரதிநிதியாக பொறுப்பு வகிக்க எனக்கு அனுபவமும் இல்லை. அது இருப்பதாக நினைத்துக் கொள்ள நான் முட்டாளும் இல்லை!"

தமிழ்நாட்டுக்கு ஓர் அஜண்டா?



முடிந்ததை தமிழக மக்களுக்குச் செய்ய, தமிழகத்தின் பிரதிநிதியாய் டெல்லி செல்கிறேன்.''

உங்களைப் பற்றிய தமிழக மக்களின் எதிர்பார்ப்பை எப்படி பூர்த்தி செய்யப் போகிறீர்கள்?

''என்னால் முடிந்த அளவு உண்மையாகவும், நியாய மாகவும், எதிர்பார்ப்பு ஏதுமின்றியும், மனப்பூர்வமாகவும் மக்களுக்குத் தொண்டாற்றுவேன்.''

அரசியல் பணியால் உங்கள் இலக்கியப் பணிகள் பாதிக்க வில்லையா?

''பாதிக்கவிட்டால்தானே பாதிக்கும். தனிநபர் சரியான திட்ட மிடுதல் மூலம் பலவகையான பணிகளைச் செய்துகொள்ள முடியும். இதற்குச் சரியான உதாரணம் என் தந்தை. அவரது இலக்கியப் பணிகள் அரசியலால் பாதிக்கப்படுவதேயில்லை.''

ஒரு தந்தையாக - அரசியல்வாதியாக உங்களுக்கான கலைஞரின் அறிவுரைகள் என்ன?

''முக்கியமாக என் தந்தை எனக்குச் சொன்னது 'எப்போதும் எதிர் கருத்துக்கள் என்னவென்பதை தெரிந்துகொள்' என்பதுதான்.''

அமைச்சராவதற்கு முதல்கட்டமாகத்தான் எம்.பி. பதவி தரப்பட்டதா?

''எத்தனையோ எம்.பிக்கள், எம்.பிக்களாகவே இருந்து விடுகிறார்கள். சிலருக்கு நேரடியாக அமைச்சர் ஆகும் வாய்ப்பே கிடைக்கிறது. எனவே முதற்கட்டம், இரண்டாவது கட்டம் என்றெல்லாம் ஏதுமில்லை. எல் லாம் அவசியத்தைப் பொறுத்தது. எனக்குத் தெரிந்து அதுபோன்ற யோசனை எதுவும் பரிசீலனையில் இல்லை.''

முரசொலி மாறன், தயாநிதி மாறன் என்று கலைஞர் குடும் பத்துக்கு நெருக்கமானவர்கள்தான் டெல்லிப் பிரதிநிதியாக இருந்தார்கள். அந்த வரிசைக்குத்தான் தாங்கள் தயாராவதாகப் பேச்சிருக்கிறதே!

''டெல்லிப் பிரதிநிதியாக இருக்கப் பல தகுதி வாய்ந்த ஸீனியர் தலைவர்கள் தி.மு.க.வில் இருக் கிறார்கள். எனக்கு அந்த பொறுப்பு வகிக்க அனு பவமும் இல்லை; அது இருக்கிறது என்று நினைத்துக் கொள்வதற்கு நான் முட் டாளும் இல்லை!''

ஜனாதிபதி தேர் தலில் தங்கள்





கட்சியினர் வோட்டளித்தது தமக்குத் தெரியாது என்று ஜெ. கூறியது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

''இந்த ஜனாதிபதி தேர்தலை ஒரு நகைச்சுவை என்று வர்ணிக்கத் தொடங்கி, பிறகு தாமே அதில் ஓர் உச்சகட்ட நகைச்சுவைக் காட்சியை நடத்தி முடித்திருக்கிறார் ஜெயலலிதா...''

கூட்டணிக் கட்சிகள் தி.மு.க.வை விமர்சிக்கத் துவங்கி விட்டனவே!

''ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மூலம் ஆட்சித் தேரை ஓட விடுங்கள். முட்டுக்கட்டை போடாதீர்கள் என்று முதல்வரே மிக அழகாகச் சொல்லியிருக்கிறாரே!''

தேர்தலுக்குத் தேர்தல் முன்னேறி வரும் விஜயகாந்த் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

''இது ஜனநாயக நாடு; யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். மக்கள் யாரை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதுதான் முக்கியம். மக்களுக்கு நல்லது செய்யும் பட்சத்தில் வாழ்த்துக்கள்.''

உங்கள் வளர்ச்சியில் உங்கள் அம்மாவின் பங்கு?

''தாயாக மட்டுமல்லாமல் பல விஷயங்களில் எல்லா விதங்களிலும் எனக்கு உறுதுணையாக இருக்கிறார். சரியாகச் சொல்வதென்றால் வார்த்தைகளில் அடக்கி விட முடியாத அளவுக்கு என் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு இருக்கிறது.''

சமீபகாலமாக பெண் சிசுக் கொலை பற்றிய செய்திகள் மீண்டும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்னையில் ஒரு பெண்ணியவாதியாக - சமூக ஆர்வலராக - அரசியல்வாதியாக என்ன செய்யப் போகிறீர்கள்?

''சட்டம் போட்டெல்லாம் இந்தக் கொடுமையை ஒழிக்க முடியாது. பிரச்னையின் ஆணிவேரை அறுக்க வேண்டும். பெண்களைப் பெற்றால் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாகத் தடுமாற வேண்டும் என்ற நினைப்புதானே இதுபோன்ற கொடுமைகளுக்கு வழிவகுக்கிறது. எனவே, கல்வி, விழிப்புணர்வின் மூலம் இது போன்ற கொடுமையை ஒழிக்க முடியும். 'பெண் குழந்தையைக் காப்பாற்றுவோம்' என்ற இயக்கத்தில் என் பங்கு சிறிய அளவில் இருக்கிறது. இன்னமும் அதிக கவனம் செலுத்துவேன்.''

- ப்ரியன்

அட்டை மற்றும் படங்கள்: பொள்ளாச்சி சுந்தரம்



வலிப்பு நோய்கிது

“வலிப்பு நோய் என்பது ஒருவரது வாழ்க்கை முறையையே மாற்றி விடும். இதன் தாக்கங்களை அரசாங்கம் முழுவதுமாக உணர்ந்து, வலிப்பு நோயால் தாக்கப்பட்டவர்களுக்குச் சில நிவாரணங்களை அளிக்க வேண்டும். இது தொடர்பாக அரசுக்குச் சில ஆலோசனைகளை அளிக்கத்தான் வலிப்பு நோய் குறித்த இந்த விழிப்புணர்வு மாநாடு'' என்கிறார் டாக்டர் பிரவீணா ஷா. மும்பையைச் சேர்ந்த நரம்பியல் நிபுணர். இந்திய வலிப்பு நோய்க் கூட்டமைப்பின் தலைவர். அண்மையில் சென்னை வந்திருந்தவரைச் சந்தித்தோம். வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை எப்படிப் புரட்டிப் போடப்படுகிறது என்பதை நம்மிடம் விவரித்தார்...

''விழித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் வலிப்பு நோய் மீண்டும் நம்மைத் தாக்காமல் இருக்க வேண்டுமே என்று செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் நோயாளியின் மனது, மேலும் நோகும்படியான பல சூழல்களை இந்தச் சமுதாயம் உருவாக்குகிறது.

பல பள்ளி விண்ணப்பங்களில் 'வலிப்பு நோய் உண்டா?' என்ற கேள்வி இடம்பெறுகிறது. 'ஆமாம்' என்று விடை அளிப்பவர்களை பள்ளிகளில் சேர்த்துக் கொள்வது இல்லை.

பள்ளியில் ஏற்கெனவே சேர்ந்த ஒரு மாணவன் வலிப்பு நோயினால் தாக்கப்பட்டால், சில பெற்றோர்கள் அவனைப் பள்ளியிலிருந்தே நிறுத்தி விடுகிறார்கள். பள்ளியில் தொடர்ந்தாலும் அவன் தன் நண்பர்களை இழந்து விடுகிறான். 'வலிப்பு நோய் வந்தவனோடு நெருங்கிப் பழகாதே' என்று பிற மாணவர்களின் பெற்றோர்கள் எச்சரிப்பதும் ஒரு காரணம்.

படித்து முடித்தாலும் வேலை கிடைப்பதில் சிக்கல். இயந்திரங்களை இயக்குவது போன்ற சிரமமான சில வேலைகளை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிப்பது ரிஸ்க் எனக் கருதி, இது போன்ற பல வேலைகளை அவர்களுக்கு அளிக்க யாருமே முன்வருவதில்லை. எனவே, வேலைவாய்ப்புகள் கணிசமாகக் குறைகின்றன.

வலிப்பு நோய் கண்ட பெண் என்றால் வேறுவிதமான பிரச்னைகள் தலை தூக்குகின்றன. முக்கியமாக அவளுக்குத் திருமணமாவது மிகக் கடினம்.

நீரிழிவு நோய், ஆஸ்துமா போலவே வலிப்பு நோயையும் கட்டுப்பாட்டில்தான் வைத்துக்கொள்ளலாம். குணப்படுத்த முடியாது. ஆனால், முதல் இரு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைவிட வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மிக அதிகமாக மனச்சோர்வு அடைகிறார்கள்'' என்கிறார்.

"இதற்கெல்லாம் அரசு என்ன செய்ய முடியும்?" என்று கேட்டால்,

"நிறையச் செய்யலாம். வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மருந்து எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த மருந்துகளின் விளைவால் ஓரளவாவது இவர்களின் சுறுசுறுப்புத் தன்மை குறைகிறது. அதிக பலனளிக்கக் கூடிய மருந்துகள் அறிமுகமானது உண்மை தான். ஆனால், தொடர்ந்து இவற்றை வாங்கும் பொருளாதார நிலை இங்கு பல குடும்பங்களுக்கு இல்லை. இதையெல்லாம் கூடாது என்று சட்டங்கள் உள்ளன. நம் நாட்டிலும் இதை அறிமுகப்படுத்தலாமே" என்கிறார் பிரவீணா ஷா.

வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் திருமணம் செய்வது குறித்தும் டாக்டர் பிரவீணா நடைமுறைக்கேற்ற சில யோசனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

"வலிப்பு நோயை மறைத்துவிட்டுத் திருமணம் செய்து கொடுக்க வேண்டாம். இப்படி நிறையப்பேர் செய்கிறார்கள். இதனால் பெண்களை பிறந்த வீட்டுக்கே

வருமான வரிச் சலுகை?



மனதில்கொண்டு இவர்களுக்குப் போக்குவரத்துச் செலவில் சலுகை காண்பிக்கலாம் அல்லது வருமான வரிச் சலுகை அளிக்கலாம். குறைந்த பட்சம் வலிப்பு நோய்க்கான மருந்துகளுக்கு அரசாங்கம் மானியம் அளிக்கலாம். ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் வலிப்பு நோயைக் காரணமாகக் கொண்டு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அனுமதி மறுக்கப்படக்

அனுப்பிவிடும் உதாரணங்கள் ஏராளம்.

நல்ல கல்வியறிவு, ஆளுமை, சிறப்புகள் உள்ள பெண்களை எல்லோரும் மதிக்கிறார்கள். இத் தகுதிகளை வளர்த்துக் கொண்டால் வலிப்பு நோய் உள்ள பெண்கூட ஜெயித்துக் காட்ட முடியும்" என்கிறார் டாக்டர் பிரவீணா ஷா.

- ஜி.எஸ்.எஸ்.





* தம்மில் இருவர்!



* காதலின்...



* சுவாரஸ்ய...



* புறக்கணிப்புப் புகார்!



* ... விளிம்பில்!



* ... மோதல்!

நீங்கள் கேட்டவை

● **மல்லிகா அன்பழகன், சென்னை - 78**

? **துணை ஜனாதிபதி தேர்தலுக்கு, எல்லா கூட்டணிகளுமே முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது ஏன்?**

! அதுக்குப் பேர்தான் மைனாரிட்டி அரசியல்!

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? **டாடா டைட்டானியம் டையாக் ஸைட் நிறுவனத்துக்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு வைகோ எதிர்ப்பு கூறியுள்ளாரே..?**

! அந்த ஆட்சேபணையை முறையாக ஏற்று, திட்டத்தை முதல்வர் மறுபரிசில னைக்கு உட்படுத்தியிருப்பது வரவேற்புக் குரியது. மக்கள் நலன் பாதிக்கப் படாத வகையில் தொழில் வளர்ச்சி நடைபெற வேண்டும்.

● **பி.சிவா, பாளையங் கோட்டை**

? **அண்ணா பல்கலையில் அப் துல் கலாம் தங்கியிருந்த பங்களா வில் பவர்கட் ஆனது பற்றி?**

! ராஷ்ட்ரபதி பவனில் தமது அறையில் மழை நீர் ஒழுகியது குறித்தே அதிகம் அலட்டிக்கொள்ளா மல் இரவெல்லாம் பொறுத்திருந்து, உரிய அதிகாரியிடம் தெரிவித்தார் கலாம்... இதற்கா அலட்டிக் கொள்வார்..? எல்லோ ருக்கும் நேர்வதுதான் நமக்கும் நேர்கிறது என்று புரிந்துகொண்டிருப்பார்.

● **உஷா சுதர்ஷன், திருச்செங்கோடு**

? **ஒரு பெண்மணி குடியரசுத் தலை வராகப் பொறுப்பேற்கும் நேரத்தில், தகுதி, திறமை, சீனியாரிட்டியைக் கருத் தில் கொள்ளாமல், தம்மைவிட ஜூனிய ரான அதிகாரியை டெல்லி போலீஸ் கமிஷனராக நியமித்ததை கிரண்பேடி ஆட்சேபித்து, பிரதமரிடமே புகார் கூறியுள்ளாரே...?**

! தகுதியற்ற ஒரு பெண்மணி குடியரசுத் தலைவராகும்போது, தகுதியுள்ள ஒரு பெண்மணி பதவி உயர்வில் புறக்கணிக்கப் படுவது ஆச்சர்யம் தரவில்லை. நமது அரசியலே அப்படி ஆகிவிட்டது.

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி**

? **தலைமை நீதிபதி மீண்டும் நியமிக்கப்பட்டதால், பதவி விலகும்படி முஷாரஃபுக்கு ராணுவ அதிகாரிகள் யோசனை தெரிவித்துள்ளனராமே?**

! அது ரொம்ப நல்ல யோசனை. தாமாகவே முன் வந்து, ஜனநாயகத்தை

தராசு



* விளையாள விளையாட்டு!

மலரச் செய்து ஒதுங்கிக் கொண்டாரானால் நல்ல பெயர் வாங்குவார். ஆனால், சர்வாதிகாரிகள் அப்படி நடந்து கொள்வதில்லை. கடைசிவரை பிடிவாதம் பிடித்துக் கெட்டழிவதுதான் அவர்கள் இயல்பு.

● ஜி.குப்புசுவாமி, சங்கராபுரம்

? மஞ்சு விரட்டு என்கிற பாரம்பரிய விளையாட்டை உச்சநீதிமன்றம் தடை செய்துவிட்டதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

! முழு மனத்தோடு. வீர விளையாட்டு என்ற பெயரில் மனிதன் விலங்குகளுக்குக் கொடுமை இழைக்கலாகாது. தன்னையும் தேவையற்ற ஆபத்துக்கு உட்படுத்திக் கொள்ளலாகாது. வீரம், அரக்க சுபாவமாக மாறிவிடக் கூடாது.

● ஆர்.வஸந்தா, சென்னை - 28

? என்றோ மறைந்த பண்டிட் நேருவுக்கும் மௌண்ட்பேட்டனின் மனைவிக்குமிடையே உறவு இருந்தது என்கிற தொனியில் மௌண்பேட்டனின் மகள் பமீலா ஒரு நூலில் எழுதியுள்ளாரே?

! நேருவுக்கும் மௌண்ட்பேட்டன் மனைவிக்கும் இடையில் இருந்த ஆழ்ந்த நட்புணர்வு, காதலின் எல்லையைத் தொட்டிருக்கலாம். ஆனால்,

90,000 பள்ளிகளில் கரும்பலகை இல்லையாமே...?

அதில் காமத்தின் சந்தேகம்கூட படிந்த தில்லை என்று பமீலா அழுத்தந்திருத்த மாகக் கூறியுள்ளார். அந்த நட்புணர்வு நேருஜியின் சிந்தனையையும் செயலையும் பாதித்ததா என்பதுதான் சர்ச்சைக்குரியதாகி யிருக்கிறது. நேருஜியிடம் ஒரு கருத்து மாறுபாடு ஏற்பட்டிருந்தாலும், அது விவா தத்தின் விளைவான உன்னத தெளிவாகத் தான் இருந்திருக்கும்; திருமதி மௌண்ட் பேட்டனின் ஆளுமைக்குக் கட்டுப்பட்ட தால் அல்ல என்பதே எனது ஆழமான நம்பிக்கை.

● எம்.சிவகுருநாதன், தஞ்சை

? இந்தியாவில் 90,000 பள்ளிகளில் கரும்பலகைகூட இல்லை என்று செய்தி வந்துள்ளதே?



! நமது நாட்டில் கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் எத்தகையது என்பதற்குச் சோகமான உதாரணம். அஸ்திவாரம் சரியாகப் போடாமல் பொருளாதார வளர்ச்சிக் கட்டடம் எழுப்புகிறோம்!

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? 'சினிமாவில் நிறைய திருமணக் காட்சிகளில் நடித்துவிட்டதால் எனக்குத் திருமண ஆசையே போய்விட்டது' என்கிறாரே நடிகை சினேகா?

! அடக் கடவுளே! புடைவை விளம்பரங்களில் நடிப்பதால் புடைவை ஆசை போய்விடுகிறதா? நடிப்புக்கும் நிஜத்துக்குமான வேறுபாடு உணராதவர்கள் சிறந்த நடிகர்களாக முடியாது.

● அகிலா அன்புமணி, ஈரோடு ❒

? கோவாவில் ஆட்சி அமைத்த ஐம்பது நாட்களுக்குள் காங்கிரஸ் அரசு ஆட்டம் காண ஆரம்பித்துவிட்டதே?

! ஆட்டம் கண்ட நிலையிலும் நாடக மாடி நம்பிக்கை வோட்டு பெற்றுவிட்டதாகச் சேட்டை பண்ணுறாங்களே! ஜனநாயகம் பலம் பெறுவது எண்ணிக்கை அடிப்படையில் அல்ல; சத்தியத்தின் அடிப்படையில் என்பதை நமது அரசியல்வாதிகள் என்றுதான் உணர்வார்களோ!

● என்.சீதாலட்சுமி, பொள்ளாச்சி ★

? புனிதமான கோயிலுக்குள் 'குரூப் டான்ஸ்' 'லவ் சீன்' என சினிமா ஷூட்டிங் எடுக்க அனுமதிக்கலாமா?

! கூடவே கூடாது. இக்காட்சிகளைப் படம் பிடிக்க எத்தனையோ லொகேஷன்கள் கொட்டிக் கிடக்கின்றன. பூஜை இல்லாத, இடிபாடடைந்த புராதனச் சின்னங்கள் எனில் பாதகமில்லை.

● நாகை சந்திரா, நாகப்பட்டினம்

? தமிழக முதல்வரும் பா.ம.க. தலைவரும் அடிக்கடி வார்த்தைகளில் மோதிக்கொள்வது அருமையான பட்டிமன்றம் போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது இல்லையா?

! பட்டிமன்றங்கள் ராமதாஸ் - கருணாநிதி மோதல் போல் அவ்வளவு சுவாரஸ்யமாக உள்ளனவா என்ன? ●

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
அகிலா அன்புமணி, ஈரோடு

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
என்.சீதாலட்சுமி, பொள்ளாச்சி

✱ விடைபெற்ற ஆசை!



கல்கி

2007 ஆகஸ்ட் 12
சர்வஜித் ஆடி 27
மலர் : 66
இதழ் : 2



தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா


— பாரதியார்


முரட்டு ஆட்சி; முட்டுக்கட்டை அரசியல்!

"நந்திகிராமில் காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்குப் பொறுப்பேற்று வங்காள கம்யூனிஸ்ட் அரசு ராஜினாமா செய்ததா, என்ன? முடிகொண்டா கிராமத்துத் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்காக நாங்கள் ஏன் ராஜினாமா செய்ய வேண்டும்?" - இது ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி கம்யூனிஸ்ட்களுக்குக் கொடுத்த பதிலடி!

ஆகக்கூடி, முடிகொண்டாவில் கட்டவிழ்ந்து செயல்பட்ட தொண்டர்களைத் தடுத்து, வன்முறையின்றிப் போராட வழி காட்டும் அக்கறை கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு இல்லை; மக்களின் உயிர் பலியாயிற்றே என்ற வேதனை ராஜசேகர ரெட்டிக்கு இல்லை! இரு தரப்பினரும் மக்களின் கண்ணீரை மறந்துவிட்டு, பரஸ்பரம் சேற்றைப் பூசிக்கொள்ளும் யுத்தம்தான் நிகழ்ந்து வருகிறது.

இதே ரீதியான, பழி சுமத்தும் அரசியல்தான் தமிழ்நாட்டிலும் நடக்கிறது. தூத்துக்குடி - திருநெல்வேலி பகுதியில் டாடா நிறுவனம் துவங்கவுள்ள டைட்டானியம் டையாக்ஸைடு தொழிற்சாலைக்கு அரசு எவ்வாறு அனுமதி அளிக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் சீறிப் பாய்கின்றன. இத்தொழிலகத்தினால் சுற்றுச்சூழல் மாசுபடும் என்பதுடன் ஏராளமான மக்களின் விவசாய நிலம் பறிபோகும் என்கிற கவலையைக் காட்டிலும் திட்டத்தை எதிர்த்து, ஆளுங்கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கமே அதிகமாகத் தென்படுகிறது. இல்லையேல், 'இத்திட்டத்தை நிறுத்தாவிட்டால் இங்கே இன்னொரு நந்திகிராம் விவகாரம் வெடிக்கும்' என்று வைகோ கூறுவாரா? தமிழக மக்கள் பேரில் உண்மையான அபிமா





ணம் இருப்பின், அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, இத்திட்டத்தை எப்படியாவது மக்கள் நலனுக்கு அபாயமின்றி நிறைவேற்றத்தான் வழி தேடுவாரேயொழிய, டைட்டானியம் டயாக்ஸைடு தொழிற்சாலையே கூடாது என்று வன்மையாக எதிர்க்க மாட்டார்.

முதல்வர் கருணாநிதியும் மக்கள் நலனைக் கருதியிருந்தால் டாடாக்களுடன் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போடும் முன்பே அப்பகுதி மக்கள் உள்பட அனைத்துத் தரப்பினரையும் கலந்தாலோசித்து, இத்திட்டம் அபாயமற்றதா, பாதிக்கப்படும் மக்களின் மறுவாழ்வு உறுதி செய்யப்படுகிறதா என்று கவனித்து, வெள்ளை அறிக்கை மூலம் அத் தகவல்களை அனைவரும் அறியும்படி செய்திருக்க வேண்டும். ஆனால் அவரோ, ஒப் பந்தத்தைக் கையொப்பமிட அதீத அவசரம் காட்டிவிட்டு, இப்போது எதிர்ப்பு கிளம்பி யிருக்கிற நிலையில், மக்கள் கருத்தைக் கேட்க முடிவெடுத்துள்ளார்! டைட்டானியம் டையாக்ஸைடு தொழிற்சாலை திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இத்தனையும் நடந்த பிறகு, தமது ஆட்சியில் வளர்ச்சிப் பணிகளுக்கு முட்டுக்கட்டை போடப்படுவது குறித்து முதல்வர் வருத்தப்பட்டுப் பேசுவதுதான் வேடிக்கை!

'அரசுப் பொறுப்பில் இருந்தால் எதிர்ப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல், யாருக்கு வேண்டுமானாலும் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் ஒதுக்கலாம்; கையகப்படுத்தலாம்; எந்தத் திட்டத்தையும் தொடங்க கையெழுத்திடலாம்' என்பது ஆளுங்கட்சி நியதியாகி விட்டது.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவருக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கில், எதிர்ப்பு தெரிவிக்க எவ்விதப் போராட்டத்திலும் வன்முறையிலும் ஈடுபடலாம் என்பது எதிர்கட்சி நியதியாகிவிட்டது.

மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பதுபோல், பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களுக்குத்தான் நீதி கிடைப்பதே இல்லை! இரு துருவ அரசியல் தீவிரவாதத்திலிருந்து அவர்களுக்குக் கதிமோட்சம் பெற்றுத்தர, கட்சி அரசியலைக் கடந்து மக்கள் நலனைச் சிந்திக்கும் உத்தம தலைவர்களால் மட்டுமே முடியும்! ●

''மக்கள் மாற்றம்


* ஜெ.வே.

''சீரியல் தயாரிப்பாளர்கள் மத்தியில் ஒரு நெருக்கம், இணக்கம் எல்லாம் இல்லாமத் தான் இருந்தது. ஆனா, இப்போ மாறிட்டோம். சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கம் எங்க எல் லாரையும் இணைச்சுடுச்சு'' என்கிறார் தமிழக சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கத்தின் வைஸ் பிரஸிடெண்டும், அபிநயா கிரியே ஷன்ஸ் நிர்வாகியுமான ஜே.கே. சன் டி.வியில் ஒளிபரப்பாகி வரும் 'செல்லமடி நீ எனக்கு' மெகா தொடரின் தயாரிப்பாளரும் இவரே.

''சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கம் ராதிகா மேடம் தலைமையில் பல ஆக்கபூர்வ மான பணிகள்ல இறங்கியிருக்கு. யாரையும் எதிர்த்துப் போராட தொடங்கப்பட்டதல்ல இந் தச் சங்கம். எங்கள் உரிமைகளை நிலைநாட்ட உண்டானது. சின்ன பிரச்னை லேர்ந்து பெரிய பூகம்பம் வரை எல்லாத்துக்கும் இங்க தீர்வு உண்டு'' என்று திட மாகப் பேசியவரிடம், ''சன் டீ.வி. தொடங்கின காலத்திலிருந்து இன்று வரை அபிநயா சீரியல் பண்ணிட்டிருக்கு. எந்தவித முட்டல், மோதல் இல்லாம எப்படி உறவை சுமுகமாக தொடர முடியுது...' என்றோம்.

''நான் அனாவசியமா யாரையும் நெருக் குறதில்ல. எனக்கு என்ன வேணுமோ கேட் பேன். கொடுத்தா சந்தோஷம். இல்லையா, கவலையில்ல. நான் பாட்டுக்கு என் வழில போயிட்டே இருப்பேன். அடுத்தவங்களைப் பார்த்துப் பொறாமைப்படுறது, கெடுதல் செய்ற தெல்லாம் எனக்குப் பிடிக்காத விஷயம்.''

'பல வருடங்களாகியும் அபிநயா கிரியே ஷன்ஸுக்கு ஏன் சன் டீ.வி. இன்னும் ப்ரைம் டைம்ல இடம் தரல?' என்றால்,

''நமக்கு எது கிடைக்கணும், எப்போ

கிடைக்கணும்னு இருக்கோ, அது நேரம் வரும்போது கிடைச்சே தீரும்'' என்று சிரிக்கிறார் ஜே.கே.

'சீரியல் பிரியர்கள் மனசுல வில்லனா பதிவான நடிகர் அஜயை உங்க சீரியல்ல ஹீரோவாக்கினது எந்த தைரியத்துல?'

''செல்லமடி நீ எனக்குல அஜய்க்கு டபுள் ரோல். ஒருத்தன் நல்லவன், இன்னொருத்தன் கெட்டவன். யார் சரியா இருப்பாங்கன்னு யோசிச்சப்போ, எனக்குப் பட்டுனு மனசுல தோணினது அஜய் முகம் தான். புக் பண்ணிட்டோம்''

'டி.ஆர்.பி ரேட்டிங்ல நம்பிக்கை இருக்கா?'

''இல்லைதான். ஆனா, அதுதான் இன்னைக்குச் சின்னத்திரை

புறக்கணிச்சா வரும்!''



* 'செல்லமடி நீ எனக்கு' தொடரில் அஜய், கிருத்திகா...

மார்க்கெட்டை ஆட்டிப் படைச்சிட்டிருக்குங்கறதுதான் உண்மை. பலரும் அதைத்தான் நம்பறாங்க. என்ன பண்றது, நல்லதுக்குக் காலம் நாள் கழிச்சித்தான் வரும்.''

'முடிஞ்சும் சில சீரியல்கள் ஜவ்வு மாதிரி இழுக்கப்படுதே...?'

''கண்டிக்கப்பட வேண்டிய விஷயம் இது. ஆனா, அபிநயா கிரியேஷன்ஸ் ஒரு நாளும் இப்படிச் செய்யாது. அதே நேரத்துல மத்தவங்களும் ஏன் செய்றாங்கன்னு நாம யோசிக்கணும்? மக்கள் பார்க்கறாங்கன்னுதானே! ஏன் ஆதரவு தர்றாங்க? புறக்கணிக்கச் சொல்லுங்க. சீரியலும் முடிக்க வேண்டிய இடத்துல முடிஞ்சி மாற்றம் வரும்!''

'இன்னைக்குப் பல சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சினிமா எடுக்க வந்துட்டாங்களே... அபிநயாவும் அடுத்து முயற்சிக்குமா...?'

''வாய்ப்பு இல்லாம இல்ல. ஆனா தயாரிப்பாளர்கள் காக்கப்படணும்ங்கற நிலை என்னைக்கு வருதோ அன்னைக்குத்தான் அபிநயா அடியெடுத்து வைக்கும்''

'ஏன் இன்னைக்கு அந்த நிலைமை இல்லையா?'

''நிச்சயமா இல்லை. ஒரு நாள் என் காதுபடவே ஒரு இயக்குநர் இன்னொருத்தர்கிட்ட சொன்னார்... 'படம் எடுத்துடலாம் கவலைப்படாத. ஏதாவது இளிச்சவாய் புரொடியூசர் மாட்டாமலா போயிருவான், கருட்டிரலாம்'னு. நிலைமை இப்படியிருக்கும்போது நல்ல படம் எப்படி எடுக்கப்படும், தயாரிப்பாளர்கள் எங்கிருந்து உருவாவாங்க? ஆனா, நிச்சயம் சூழல் மாறும். அப்போ அபிநயாவோட என்ட்ரி மிகப் பிரமாண்டமா இருக்கும்'' - அழுத்தமாகச் சொல்கிறார் ஜே.கே.

– மனஸ்வினி

படம்: பொள்ளாச்சி சுந்தரம்



கலையும்

துணை நடிகைகளைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? கூட்டத்தோடு கூட்டமாய் நின்றுவிட்டு, ஷூட்டிங் முடிந்ததும் காசு வாங்கிச் செல்பவர்கள் என்று எண்ணியிருந்தால், உங்கள் எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொள்ளுங்கள். தினம் தினம் தங்களைச் சுற்றி நடக்கும் சந்தோஷங்கள், வேதனைகள், சோதனைகள் எல்லாவற்றையும் எதிர்கொண்டு போய்க் கொண்டே இருக்கும் இவர்களின் வாழ்க்கைப் பயணம் முழுக்கக் கரடுமுரடானதுதான்.

''துணை நடிகைகன்னா எல்லோரும் சாதாரணமா நினைக்கிறாங்க. ஆனா அவங்க இல்லைன்னா ஒரு படம் சிறப்பா வருமான்றது சந்தேகம்தான். ஒவ்வொரு ஃப்ரேமுக்குமே ஏதோ ஒரு விதத்துல அவங்களோட பங்கு தேவையா இருக்கும்'' என்கிறார் ஜெயா. சென்னை வடபழனியில் குடியிருக்கும் இவர், கடந்த பதினைந்தாண்டுகளுக்கும் மேலாகத் துணை நடிகையாக இருந்து வருகிறார்.

''நாளைக்கு ஷூட்டிங்னா ஏஜெண்ட்டுங்க இன்னைக்கே போன் பண்ணி சினிமாவா, சீரியலா, எத்தனை மணிக்கு, எங்க இருக்கணும், என்ன சீன், என்ன காஸ்ட்யூம்னு எல்லா விவரத்தையும் சொல்லிடுவாங்க. பல நேரங்கள்ல காலைல ஆறு மணிக்கே ஷூட்டிங் ஸ்பாட்ல இருக்க வேண்டியது வரும். வண்டியெல்லாம் ஏற்பாடு பண்ணமாட்டாங்க. நாமதான் பஸ்ஸோ, ஷேர் ஆட்டோவோ பிடிச்சு, காலைல நாலு, அஞ்சு மணிக்கே எழுந்து ஓடணும். துணை நடிகைகள்லயே பல வெரைட்டி இருக்கு. அழகான, சின்ன வயசுடைய பெண்களை 'ரிச் கேர்ள்ஸ்'னு சொல்வாங்க. இவங்களுக்குச் சம்பளமும் அதிகம். காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் கெட்டப்ல வர்றது பெரும்பாலும் இவங்கதான். இன்னொரு பிரிவினர் இருக்காங்க - நடுத்தர வயது ஆட்கள். இவங்கள கும்பல்ல நிக்க வெப்பாங்க. ஓரளவு அழகும் முப்பது வயசுக்குள்ள இருக்கறவங்கள ஏதாச்சும் ஒண்ணு ரெண்டு சீன்ல தலைகாட்ட விடுவாங்க.

காலைல போய்ட்டோம்னா நாமளேதான் நமக்கு மேக்கப் போட்டுக்கணும். எங்ககிட்டயே சின்னதா மேக்கப் பாக்ஸ் இருக்கும். கொஞ்சம் பவுடர், க்ரீம் போதும் ஓரளவு எங்கள அழகுபடுத்திக்க. எங்க சீன் வர்றவரை அப்படியே காத்திருக்கணும். கும்பல்ல நிக்கறது, ஹீரோ வீட்ல வேலைக்காரியா, ஹாஸ்பிட்





கனவுகள்!



★ ஜெயா

டல்ல நர்ஸா, ரோட்டோரமா நடக்கறவங்களாத்தான் பெரும்பாலும் வாய்ப்பு கிடைக்கும். தொடர்ச்சியா ஷாட் இருக்காது. அப்பப்போ வந்து நின்னா போதும்.


காலைல எட்டுக்குள்ள டிபன் தந்துடுவாங்க. திருப்தியா சாப்பிடுவோம். அப்புறம் நாங்க துணை நடிகைங்க குரூப்பா உட்கார்ந்து ஏதாச்சும் பேசிட்டு அரட்டை அடிச்சிட்டிருப்போம். ஷாட் வரும்போது ஓடிப் போய் நடிச்சிட்டு, திரும்ப வந்து அரட்டையைத் தொடருவோம். எங்க அரட்டைல பெரும்பாலும் சினிமா பத்திதான் பேசுவோம். அடுத்து யாரு, என்ன படம் பண்றாங்க, சம்பளம் ஒழுங்கா வந்துருச்சா, நேத்து பஸ் கிடைக்காம கஷ்டப்பட்ட கதைன்னு எல்லாம் ஓடும். ஏஜெண்ட்டுங்க அப்பப்போ வந்து ஆட்கள் சரியா இருக்காங்களான்னு பார்த்துக்குவாங்க. அவங்க வேலை அப்படி. ஷாட் ரெடியாகி ஒருத்தர் குறைஞ்சாலும் பாவம், டைரக்டர்கிட்ட திட்டு வாங்க வேண்டியிருக்கும்.

ஹீரோ, ஹீரோயின்தான் ஷாட்ல சொதப்பி டைரக்டர் டென்ஷனா வாருன்னு இல்ல... எங்களை மாதிரி துணை நடிகைங்க சரியா பண்ணலைன்னாலும் பயங்கரமா கத்துவாங்க. எத்தனையோ முறை பலர் இதுமாதிரி திட்டு வாங்கியிருக்கோம். கூட்டத்துல கோபமா பார்க்கச் சொன்னா அமைதியா நின்னிருப்போம், திடீர்னு போன் பேசிட்டிருப்போம்... இப்படி அவங்க திட்ட நாங்க வழியமைச்சுக் கொடுத்த சந்தர்ப்பங்கள் நிறைய. சில டைரக்டர்ஸ் பொறுமையா சொல்லுவாங்க. பலர் கடுமையான வார்த்தைகளை யூஸ் பண்ணி, எல்லார் எதிர்லயும் அவமானப்படுத்து

வாங்க. அப்பல்லாம் மனசு கொதிச்சுப் போயிடும். என்னதான் நாம தப்பா நடிச்சுட்டாலும் கண்டிக்கக்கூட ஒரு வரைமுறை இருக்கு இல்லையா! 'நூறு, இருநூறுக்காக வந்து இப்படிக் கேவலப் பட வேண்டியிருக்குதே...'ன்னு வருத்தப் பட்டாலும் அடுத்த வேளை சோத்தை நினைச்சு கஷ்டப்பட்டு ஜீரணம் பண்ணிட்டு தொடர்ந்து உழைப்போம்.

மதிய சாப்பாட்டுல பெரும்பாலும் சிக்கன் இருக்கும். சாப்பிட்டதும் கொஞ்ச நேரம் தூங்குவோம். சிலர் செல்போன்ல கேம்ஸ் ஆடுவோம். பாட்டு கேப்போம். இல்லைன்னா இருக்கவே இருக்கு அரட்டை. எவ்வளவு குடும்பக் கஷ்டம் னாலும் ஷூட்டிங் ஸ்பாட் வந்துட்டா நேரம் போறதே தெரியாது. மன பாரம் மறைஞ்சு வேற ஒரு உலகத்துல சஞ்சரிக்கிற மாதிரி இருக்கும். இதனாலேயே பல நாட்கள் 'எப்படா ஷூட்டிங் போவோம்'னு இருக்கும்.

துணை நடிகைங்க கடைசி வரைக்கும் துணை நடிகையாத்தான் காலம் தள்ளணும்!



சினிமான்னா சாயந்திரம் ஷூட்டிங் முடிய ஆறு, ஆறரை ஆயிடும். சீரியல்னா ஒன்பதுக்குக் குறையாது. யூனியன் மெம்பர்னா அதுக்கேத்த சம்பளம், நான்-மெம்பர்னா அதுக்கேத்த சம்பளம். சில சமயம் பணமா தராம 'பில்'லா தந்துடுவாங்க. பட கம்பெனி, துணை நடிகர்களுக்கான மொத்த சம்பளத்தையும் சங்கத்துல கட்டிடும். அங்க போய் நாம இந்த 'பில்'ல எக்ஸ்சேஞ் பண்ணிப் பணம் வாங்கிக்கணும்.

அப்பப்போ அவுட்டோர் ஷூட்டிங்கும் எங்களுக்குக் கிடைக்கும். மொத்தமா பத்து, இருபது நாள் போவோம். சமயங்கள்ல மாசக் கணக்குலயும் கிடைக்கும். அவுட்டோர்னா சம்பளம் கொஞ்சம் கூடக் கிடைக்கும். மீதி நடைமுறைகள்லாம் ஒண்ணுதான். லோக்கல்னா குடும்பத்தைப் பிரிய வேண்டியிருக்காது. அவுட்டோர்னா குழந்தை குட்டி, புருஷனை விட்டுட்டுப் பல நாட்கள் தனிமைல வாட வேண்டியிருக்கும். அதுவும் ஸ்கூலுக்குப் போற குழந்தைகள் இருந்தா ரொம்ப கஷ்டம். எனக்குத் தெரிஞ்ச ஒரு பொண்ணு அவுட்டோர் போனதால, குழந்தைங்க படிப்பே வீணாப் போயிடுச்சு. வீட்ல எல்லாரும் திட்டினதால இப்ப அவ ஷூட்டிங் வர்றதையே நிறுத்திட்டா.

துணை நடிகைங்க பெரும்பாலும் கடைசி வரைக்கும் துணை நடிகையாத்தான் காலம் தள்ளணும். டைரக்டர், புரொடியூசர், நடிகர், நடிகைங்க பழக்கம் கிடைச்சா, அவங்க மனசு வச்சா நமக்கு ஏதாவது துண்டு துக்கடா சீன் தருவாங்க. அப்படியே பிடிச்சுக்கிட்டு மேல வந்துடலாம். இல்லன்னா கடைசி வரைக்கும் கும்பல்ல நின்னுதான் குடும்பம் நடத்தணும்.

நாம ஒரே ஒரு சீன்ல நடிச்சிருந்தாலும் அதுதான் நமக்குப் பெருசா தெரியும்; தெரியணும். அதையே நினைச்சுக்கிட்டு படம் எப்படா ரிலீஸ் ஆகும்னு காத்துட்டிருப்போம். தியேட்டர்ல போய்ப் பார்த்தா நாங்க நடிச்ச சீனையே எடிட்டிங்ல தூக்கிட்டிருப்பாங்க! கனவு ஒரு நிமிஷத்துல கலைஞ்சு போயிடும். போய் யாரையும் 'ஏன் என் சீன் வரலை'ன்னு கேட்க முடியாது. அடுத்த வாய்ப்புக்காக தவமிருக்க வேண்டியதுதான்...'' என்கிறார் ஜெயா.

சந்திப்பு : மு.மாறன்
படங்கள் : ஸ்ரீஹரி

சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்

ஜோதிடத்தில் **50** வருட அனுபவம் கொண்ட

"ஜோதிட வாணி"

ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து, சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம், அனைத்தும் பார்க்கப்படும்.

அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

வெளியூரில் வசிப்பவர்கள் அதிகபட்சமாக 5 கேள்விகள் வரை கேட்க ரூ.500/- கட்டணத்தை முன்னதாகவே அனுப்பவும்.

V.சரோஜா, 45/18, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மேற்கு மாம்பலம்,
அயோத்யா மண்டபம் அருகில்,
பிள்ளையார்கோவில் அருகில் உள்ள தெரு.
Ph: 23716892, Cell: 9444230523, 9444684006, 9444506218

ANBAHAM REHABILITATION CENTRE

(Run by TERDOD A Regd. Public Charitable Trust)

Thirunilai Village, Vichur Post, Chennai - 600 103.

Phone : 25015165 / 9444009988, Website : www.anbaham.org.

அன்பகம்' சாலையோரத்தில் கவனிப்பாரற்று சுற்றித்திரியும் அனாதை ஆண் மன நோயாளிகளை காப்பாற்றி, அன்பகத்தில் தங்கவைத்து, மருத்துவ வசதி அளித்து, அவர்களை தங்கள் இல்லங்களில் கொண்டு சேர்க்கும் நல்லதொரு பணியினை செவ்வனே செய்யும், ஒரு தொண்டு நிறுவனம்.

45 நோயாளிகளைப் பராமரிக்கும் வசதி கொண்டது. கடந்த 7 ஆண்டுகளாக 375 மனநோயாளிகள்ளைக் காப்பாற்றி அவர்தம் இல்லங்களில் கொண்டு சேர்த்து உள்ளோம். பராமரிப்பு செலவு அனைத்தும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலமே நடைபெற்றுவருகிறது.

அன்பகத்திற்கு வரும் பொழுது



அன்பகத்திற்கு வந்த பிறகு



காலை சிற்றுண்டி	ரூ.	250/-
மதிய உணவு	ரூ.	500/-
இரவு உணவு	ரூ.	300/-
ஒரு நாள் உணவுக்கு	ரூ.	1,000/-
ஒரு நோயாளியை ஒரு மாதம் பராமரிக்க	ரூ.	1,500/-

மகத்தான மனித நேயப்பணி தொடர தாராள நிதி தாரீர், மனித நேயப்பணியில். நீவிரும் ஒருவராவீர் !

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு. **FCRA Regn. No. 075900916** தங்கள் நன்கொடையை **TERDOD** என்ற பெயரில் மேற்கண்ட முகவரிக்கு **Cheque/DD/ MO** தபாலில் மட்டும் அனுப்பி வைக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். ***[கொரியரில் அனுப்புவதைத் தவிர்க்கவும்]***



முதல்வர் ப.சிதம்பரம்!

- களைகட்டும்

தமிழ்நாடு காங்கிரஸ், கலகலப்பாகியிருக்கிறது. ''காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம் என்று சொன்னால் மட்டும் போதுமா? அதற்கான கட்டுமானத்தை உருவாக்க வேண்டாமா? திராவிட கட்சிகளின் தோள்களில் எவ்வளவு காலம்தான் சவாரி செய்வது?'' - இப்படி பல முறை எழுப்பப்பட்ட சலிப்பூட்டும் கேள்விகளுக்கு விடை காண தமிழகம் முழுவதிலுமிருந்து காங்கிரஸ் தோழர்களை அழைத்துப் பேசத் திட்டமிட்டனர் - கே.எஸ்.அழகிரி, கோபண்ணா, பி.வி.ராஜேந்திரன் போன்றோர். இவர்கள் கூடிப் பேசியபோது, சிதம்பரத்தைத் தொடர்பு கொண்டார்கள்.

''நீங்கள் பேசி முடிவு செய்யுங்கள்; தமிழ்நாட்டில் கட்சி வளர என்னால் முடிந்ததைச் செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டிருக்கிறார் ப.சி. இப்போது இவர்களுடன் கார்த்தி சிதம்பரமும் சேர்ந்து கொண்டார். தமிழருவி மணியன், கராத்தே தியாகராஜன், சிரஞ்சீவி போன்றோரும் இந்த முயற்சியில் பங்கெடுத்துக் கொள்ள, ஒரு வலிமையான முயற்சி உருவெடுத்திருக்கிறது.

உடனடியாக தமிழகம் முழுவதும் உள்ள 450 காங்கிரஸ் பிரமுகர்களுக்கு 'தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை அமைப்பு ரீதியாக



* கோபண்ணா



வலிமைப்படுத்தி, 2011-ல் காமராஜர் ஆட்சியை தமிழகத்தில் மீண்டும் கொண்டு வருவதற்கான கலந்தாய்வுக் கூட்டம் நடக்கிறது' என்று கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஆயிரம் பேர் கூட்டத்துக்கு வந்து அமைப்பாளர்களைத் திகைக்க வைத்திருக்கிறார்கள்.

அன்று கூட்டத்தில் பேசியவர்கள் யாரும் தனிப்பட்ட தலைவர்களைத் தாக்கிப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ப.சிதம்பரத்தின் பேச்சில், தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கட்சியை வளர்க்க வேண்டும் என்பதே அடிநாதமாக இருந்தது. கராத்தே தியாகராஜன் ''தகுந்த திட்டம் வகுத்துத் தாருங்கள், நாங்கள் வெளுத்துக் கட்டுகிறோம்' என்றார்.

கூட்டத்தில் கார்த்தி சிதம்பரம் சற்று முன்னிலைப்படுத்தப்பட, 'ப.சிதம்பரத்தைப் பலப்படுத்துகிற கூட்டமா?' என்று அமைப்பாளர்களில் ஒருவரான கோபண்ணாவிடம் கேட்டோம்.

''இந்தக் கூட்டத்தின் ஒரே லட்சியம், தமிழ்நாட்டில் காமராஜர் ஆட்சியை 2011-ல் கொண்டுவர வேண்டும் என்பதுதான். முதல்வர் பதவிக்குத் தகுதி வாய்ந்தவர் ப.சிதம்பரம் மட்டுமே. எனவே, 2009 பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு ப.சி. அவர்களை முன்னிறுத்த இருக்கிறோம்'' என்கிறார் கோபண்ணா. வாசன் தரப்பு ஆதரவாளர்கள் யாரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

''மக்கள் பிரச்னைகளை எடுத்துப் போராடாத வரை கட்சி மக்களிடம் செல்வாக்கு பெறாது. நான், கே.எஸ்.அழகிரி, கோபண்ணா, பி.வி. ராஜேந்திரன் ஆகியோர் மூப்பனாரின் உறுதியான ஆதரவாளர்களாகத்தான் இருந்தோம். பின்பு

"எம்.பி.ஆகவோ அமைச்சராகவோ இல்லாவிட்டால் கறுப்பு கவுனை மாட்டிக்கொண்டு நீதிமன்றத்துக்குப் போய் விடுவார் சிதம்பரம். கட்சிக்காரர்களை உற்சாகப்படுத்தும் வகையில் என்ன செய்திருக்கிறார்?"

காங்கிரஸ் 2011

பீட்டர் அல்போன்ஸ்



வாசன் கையை பலப்படுத்தினோம். ஆனால் கட்சி வளர்ப்பில் எந்த நாட்டமும், முனைப்பும் காட்டப்படாததால் இப்படி யொரு முயற்சியை நாங்கள் எடுக்க வேண்டியுள்ளது'' என்றார் திருச்சி முரளிதரன்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களோடு நூறு பேர் சோனியா காந்தியைப் பார்க்க டெல்லிக்குச் செல்ல விருக்கிறார்கள். காங்கிரஸை அடி மட்டத்திலிருந்து வளர்க்கும் விதமாக குமரியிலிருந்து சென்னை வரை ப.சிதம்பரத்தைப் பாதயாத்திரையாக அழைத்துச் செல்லும் யோசனையும் இவர்கள் பரிசீலனையில் இருக்கிறது.

இந்த கூட்டத்துக்கு வாசன் தரப்பிலிருந்து என்ன ரீ ஆக்ஷன் என்று அறிய முற்பட்டோம்.

''123 வருட பாரம்பரியமுள்ள காங்கிரஸ், இன்று தமிழ் நாட்டில் திக்குத் தெரியாமல் நிற்கிறது. ஆனால் பெரும் பான்மையோரைத் தள்ளி வைத்துவிட்டு கூட்டம் நடத்துவதன் மூலம், இன்னமும் நிலைமை சிக்கலாகி விட்டது. அடிப் படையிலிருந்து மேல் மட்டம் வரை உள்கட்சித் தேர்தல்களை நடத்தி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்பட்டால்தான் கட்சி வளரும்; காமராஜர் ஆட்சி வரும்'' என்றார் பீட்டர் அல்போன்ஸ்.

''பெரும்பான்மையோரை தள்ளி வைத்துவிட்டு கூட்டம் நடத்துவதன் மூலம் நிலைமை இன்னமும் சிக்கலாகி விட்டது!''



கராத்தே தியாகராஜன்

''எம்.பி.ஆகவோ, அமைச்சராகவோ இல்லாவிட்டால் கறுப்பு கவுனை மாட்டிக்கொண்டு நீதிமன்றத்துக்குப் போய் விடுவார் சிதம்பரம். இவர் நிதியமைச்சர் ஆகி மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. கட்சிக்காரர்களை உற்சாகப்படுத்தும் வகையில் என்ன செய்திருக்கிறார்?'' என்று சூடாகக் கேட்கிறார் மற்றொரு வாசன் ஆதரவு பிரமுகர்.

இதற்கிடையில் கட்சியைப் பலப்படுத்த 'தேசிய முரசு' என்ற பத்திரிகையை வெளியிட இருக்கிறார் கோபண்ணா.

காங்கிரஸ் மேலிடத்தின் கவனத்தைத் திருப்ப வேண்டு மென்றால், அதற்கு முதலில் செய்ய வேண்டியது ஒன்றுபட்ட முகத்தைக் காட்டுவதுதான் என்பதை தமிழக காங்கிரஸ் தலைவர்கள் எப்போதுதான் புரிந்துகொள்வார்களோ?

– ப்ரியன்



ஜி.கே.வாசன்

படங்கள் : **ராஜன்**



வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
ஆங்கில நாவல்களுக்கு இணையாக
THRILLERS IN தமிழ்
1930-களில்
தமிழகத்தை கலக்கி
தமிழ் வாசகர்களை அசர வைத்த
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார், பி.ஏ.,
எழுதிய நாவல்கள் – புதுப்பொலிவுடன்
ஆங்கிலத்தில் ஷெர்லாக் ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
தமிழகத்தில் அன்றும் இன்றும் என்றும்
திகம்பர சாமியார்
என்று போற்றப்படக் கூடிய, தரமான, த்ரில்லர்கள்
விறுவிறுப்பான துப்பறியும் கதைகள்
கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவிற்கு கட்டிப் போடும்.
உவகையூட்டும் நாவல்கள் வெளிவந்து விட்டன.
வரம்பு மீறல்கள், நயவஞ்சகம் சூழ்ச்சி ஆகியவற்றை பிரமிப்பூட்டும் வகையில்
முறியடிக்கும் திகம்பர சாமியார் மற்றும் பிற கதாபாத்திரங்கள்.
1. பூர்ண சந்திரோதயம் (5 பாகங்கள்) ..... ரூ. 650.00
2. கும்பகோணம் வக்கீல் (2 பாகங்கள்) ..... ரூ. 200.00
3. மாயா விநோதப் பரதேசி (3 பாகங்கள்) ..... ரூ. 365.00
4. மேனகா (2 பாகங்கள்) ..... ரூ. 250.00
5. மதன கல்யாணி (3 பாகங்கள்) ..... ரூ. 355.00
6. சௌந்திர கோகிலம் (4 பாகங்கள்) ..... ரூ. 460.00
7. பாலாமணி (அ) பக்காத் திருடன் (2 பாகங்கள்) ரூ. 170.00
8. வசந்த மல்லிகா ..... ரூ. 110.00
9. வித்யாசாகரம் ..... ரூ. 100.00
10. பன்னியூர் படாடோப சர்மா ..... ரூ. 150.00
11. திவான் லொடபடசிங் பகதூர் ..... ரூ. 40.00
12. திரிபுரசுந்தரி (அ) திகம்பரசாமியார் திடும்பிரவேசம் ரூ. 130.00
13. வசந்த கோகிலம் ..... ரூ. 90.00
14. தங்கம்மாள் (அ) தீர புருஷனின் தியாக கம்பீரம் ரூ. 75.00
அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை - 600 004. தொலைபேசி : 24641314
e-mail : www.alliancebook.com
visit us at : Srinivasan@alliancebook.com



அப்பாவுடன் ஒரு நாள்...

அப்புக்குட்டிக்கு ஜன்னல் ஓரத்தில் இடம் கிடைத்துவிட்டது. பேருந்தில் கூட்டம் ஒன்றும் அதிகம் இல்லை. ஜன்னல் ஓரத்தில் அவனை உட்கார வைத்துவிட்டு அப்பா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

பேருந்து வேகமாக ஓடும்போது சட்டைக்குள் புகுந்து குறுகுறுத்த காற்று அப்புக்குட்டிக்கு ஒருவித கிளர்ச்சியை உண்டாக்கிற்று. கையை எடுத்து அப்பாவின் தொடைமீது வைத்துக் கொண்டான். அப்பாவுடன் இப்படி நெருங்கி உட்கார்ந்து போவது அவனுக்குப் புதுவித அனுபவமாகவும் உணர்ச்சியூட்டுவதாகவும் இருந்தது.

அம்மாவும் தங்கச்சிப் பாப்பாவும் கூட வந்திருந்தால், இன்னும் நன்றாக இருந்திருக்கும். அதைவிட அப்பா எப்போதும் இப்படியே கூட இருந்தால் நன்றாக இருக்கும்.

''அப்பா நீ மறுபடியும் ஊருக்குப் போயிடுவியா?'' என்று கேட்டான் அப்பாவை அண்ணாந்து பார்த்தபடி.

அப்பா திடுக்கிட்டவரைப் போல அவனைத் திரும்பிப் பார்த்தார். ''ஏண்டா?'' என்று கேட்டார்.

''எங்க கூடவே இருப்பா.''

''இங்கேயே இருந்துட்டா எப்படிச் சாப்பிடறது? ஊருக்குப் போய் வேலை பார்த்தாதானே உங்களுக்காகச் சம்பாதிக்க முடியும்?'' என்றார் அப்பா, அவன் கன்னத்தை வருடியபடியே.

அவனுக்குப் புரியவில்லை. அவனது நண்பர்களின் அப்பாக்கள் வீட்டோடுதான்

வடுவூர் சிவமுரளி

இருக்கிறார்கள். சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள். அப்பா மட்டும் ஏன் இப்படி என்று யோசித்தான்.

ஆனால், அதற்குமேல் அவன் ஒன்றும் கேட்கவில்லை. அப்பாவுக்குத் திடீரென்று கோபம் வந்தாலும் வந்துவிடும். ஒவ்வொருமுறை அவர் ஊருக்கு வரும்போதும் அப்படித்தான் ஆகிவிடுகிறது. அம்மாவுடன் துவங்கும் வாக்குவாதம், இறுதியில் அம்மாவின் தலை முடியைப் பிடித்து இழுத்துச் சுவரில் மோதுவதில் முடிகிறது. கடைசியில் பெரிய சண்டையுடன்தான் ஊருக்குப் புறப்பட்டுப் போகிறார்.

ஆனால், இப்போது அப்பாவின் போக்கு அப்புக்குட்டிக்குப் பிடித்திருந்தது. கோபப்படாமல் பேசுகிறார்.

பிறகு அப்பா அவனுடைய படிப்பைப் பற்றிக்கூட விசாரித்தார். அப்புக்குட்டி தான் வாங்கிய மதிப்பெண்களைப் பெருமையுடன் கூறினான். பள்ளிக்கூட நண்பர்களைப் பற்றிக் கூறியதையும் ஆர்வமாகக் கேட்டார்.

பேருந்து நிலையத்தில் இறங்கியதும் அப்பா அவனது கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டார். அவர் வேகத்துக்கு அவனால் நடக்க முடியவில்லை. கூட்டத்துக்குள் வளைந்தும் நெளிந்தும் அவனை அழைத்துக்கொண்டு போனார். அப்புக்குட்டி இருபுறமும் வேடிக்கை பார்த்துக்கொண்டே போனான்.

ஒரு பெரிய ஜவுளிக் கடைக்குள் அவனை அழைத்துக்கொண்டு போனார். ஒவ்வொரு துணியாகக் காட்டி ''பிடிச்சிருக்கா?'' என்று கேட்டார். அப்புக்குட்டிக்கு எல்லாத் துணிகளும் நன்றாக இருப்பதாகவே தோன்றியது. எதை எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டி வைத்தான். கடைசியில் அப்பாவே அவனுக்குச் சட்டைக்கும் கால் சட்டைக்கும் துணிகள் எடுத்தார். அவை அவனுக்கு மிகவும் பிடித்தமாகவே இருந்தன.

பிறகு, ரெடிமேட் துணிகள் இருந்த பகுதிக்குப் போய் தங்கச்சி பாப்பாவுக்கு கவுன் வாங்கினார். புசுபுசுவென்று சுருக்கமெல்லாம் வைத்து நன்றாக இருந்தது. ''அளவு சரியா இருக்குமாடா?'' என்று கேட்டார். அப்புக்குட்டி தலையை ஆட்டி வைத்தான். பிறகு அம்மாவுக்கு ஒரு சேலையும் வாங்கினார்.

கடையை விட்டு வெளியே வந்த பிறகுதான் அப்பா தனக்கு எதுவும் வாங்கிக்கொள்ளவில்லை என்பது அவனுக்கு உறைத்தது. ''உனக்குத் துணி எடுத்துக்கலையா?'' என்று கேட்டான்.

''எனக்கு நிறைய இருக்குடா'' என்றார் அப்பா.

வழியில் செருப்புக்கடையைப் பார்த்ததும், ''ஏன்டா உனக்கு நல்ல செருப்பே இல்லையே'' என்றார்.

அப்புக்குட்டியிடம் செருப்பே இல்லை.

அவனை கடைக்குள் அழைத்துக்கொண்டு போனார்.

கடைக்காரர் அவனை நாற்காலியில் உட்கார வைத்து பல செருப்புகளைப் போட்டுப் பார்த்தார். கடைசியில் அளவு பார்த்து ஒரு நல்ல செருப்பை அப்பா வாங்கிக் கொடுத்தார்.

கடைக்காரர் அட்டைப் பெட்டியில் வைத்துக் கொடுத்ததை அப்படியே தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்து, ''ஏன்டா கையில் தூக்கிக்கிட்டு வர்றே? கால்ல போட்டுக்க'' என்றார்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு ரூ.7,500 பெறும் கதை



தாகூர்

அற்புதமான கவிப் புலமை வாய்ந்த வங்கத்துக்காரர். மேடைகள் தோறும் பாரத நாட்டின் பெருமையைக் கவிதைகளாய்ப் பாடி, 'இப்படிப்பட்ட நாடு ஆங்கிலேய ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கலாமா?' என்று கேள்வி எழுப்பி வந்தார் இரபீந்திரநாத் தாகூர்.

காந்தியடிகளை ஒரு சமயம் நேரில் சந்தித்தபோது, உபநிஷத்தில் வருகிற 'மஹாத்மா' என்ற புனிதச் சொல்லால் அவரை அழைக்க, அந்தப் பட்டப் பெயர் நிலைத்தது. நேருவும் காந்தியும் இவரை 'குருதேவ்' என்று அழைக்கும் அளவுக்கு அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்துக்கு அறைகூவல் விடுத்தபோது கவி தாகூரும் அதை ஆதரிக்கும் வகையில், பிரிட்டிஷார் தமக்கு அளித்த சிறப்புப் பட்டத்தைத் துறந்தார்.



செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து, ஆங்கிலேய கல்வியும், அயல் நாட்டில் மேல் படிப்பும் பெற்றவர் தாகூர். அத்தனை அறிவையும் தெளிவையும் கவிதைப் புலமையையும் நாட்டின் சிறப்புகளை எடுத்துச் சொல்லவே பயன்படுத்தினார். இவரது கீதாஞ்சலி சிலிர்ப்பூட்டும் அமர காவியம். நமது தேசிய கீதம் இவர் இயற்றியது என்பது தெரிந்ததே.

புதுச்செருப்பை மாட்டிக்கொண்டு நடப்பது அப்புக்குட்டிக்குப் பெருமையாக இருந்தது. அப்பாவின் பிடியிலிருந்து கையை விடுவித்துக்கொண்டு கம்பீரமாக நடந்தான்.

வழியில் அவனுக்கு சர்பத் வாங்கிக் கொடுத்தார். பாப்பாவுக்கும் அவனுக்கும் தின்பண்டங்களும் வாங்கிக் கொண்டார்.

பேருந்து நிலையத்துக்கு வந்ததும், ''கொஞ்ச நேரம் இங்கேயே நில்லு. இதோ வந்துடறேன்'' என்று கூறிவிட்டு ஒரு சந்துக்குள் போனார் அப்பா.

கொஞ்ச நேரம் வரை போகிற வருகிற மனிதர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான் அப்புக்குட்டி.

அப்பா திரும்பி வந்து, ''வாடா போகலாம்'' என்றார். இப்போது அவர் பேசும் போது வாயிலிருந்து புதுவித வாசனை வருவதை அவனால் உணர முடிந்தது.

நின்றுகொண்டிருந்த பேருந்துகளுக் கிடையே புகுந்து இருவரும் சென்றனர். அவர்கள் ஊர் வழியாகச் செல்லும் பேருந்து ஒன்று நின்றுகொண்டிருந்தது.

அதில் ஏறி காலியாக இருந்த இருக்கை ஒன்றில் உட்கார்ந்தார்கள். மற்ற இருக்கைகள் பெரும்பாலும் நிரம்பியிருந்தன இப்போது அப்பா ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டார்.

அப்புக்குட்டிக்கு ஜன்னல் ஓரமாக உட்கார ஆசை இருந்தும் அப்பாவிடம் கேட்க பயமாக இருந்தது. அவர் கண்கள் சிவந்து இருந்தன. முகமெங்கும் வியர்வை அரும்பியிருந்தது.

அப்பாவுக்கு அருகே இருந்த ஜன்னல் கண்ணாடி பாதிதான் திறந்திருந்தது. அப்பா அதை இழுத்துப் பின்னால் தள்ளப் பார்த்தார். முடியவில்லை. இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது.

''பஸ்ஸா வச்சிருக்கானுங்க பாரு பஸ்ஸு... ஓட்டை பஸ்ஸு'' என்று திட்டினார் அப்பா.

பஸ்ஸுக்குள் ஒரே புழுக்கமாக இருந்தது. பஸ் நகர்ந்தால் பரவாயில்லை என்று தோன்றியது.

''பஸ்ஸை எப்பத்தான் எடுப்பீங்க?'' என்று சத்தமாகக் கேட்டார் அப்பா.

முன்னால் டிக்கெட் கொடுத்துக் கொண்டிருந்த கண்டக்டர் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தார்.

புழுக்கம் மேலும் அதிகரித்தது. அப்பாவின் வாயிலிருந்து ஒருவிதமான சத்தம்

வந்தது. அது ஏப்பமா, விக்கலா, குமட்டலா என்று அப்புக்குட்டியால் அனுமானிக்க முடியவில்லை.

கண்டக்டர் டிக்கெட் கொடுத்துக் கொண்டே நெருங்கி வந்தார். டிரைவரைத்தான் இன்னும் காணோம்.

''யோவ், இன்னும் என்னய்யா பண்றீங்க? வண்டியை எடுப்பீங்களா, மாட்டீங்களா?'' என்று மீண்டும் சத்தம் போட்டார் அப்பா.

''யோவ்ங்கிற வேலையெல்லாம் வச்சுக்காத. உன் இஷ்டத்துக்கு வண்டியை எடுக்க முடியாது. டைமுக்குத்தான் எடுக்க முடியும்'' என்றார் கண்டக்டர் எரிச்சலுடன்.

''என்னய்யா டயம்... பொல்லாத டயம்... இங்க மனுசன் புழுங்கிச் சாவுறான்... டயமாம் டயம்...'' என்றார் அப்பா. இப்போது அவரது குரல் ஏறக்குறைய குழறலாக மாறியிருந்தது. சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லத் தொடங்கியிருந்தார்.

''யோவ்... சும்மா பொத்திக்கிட்டு உட்காருய்யா'' என்றார் கண்டக்டர் கோபத்துடன்.

''சர்தான் போய்யா... இந்த ஜன்னலக் கூடத் தொறக்க முடியல... என்னய்யா பஸ்ஸு வச்சிருக்க? பஸ்ஸாம் பெரிய பஸ்ஸு... பெரிசா பேச வந்துட்டே'' என்று கூறிக் கொண்டே ஜன்னலைக் கைகளால் குத்தினார் அப்பா.

''என்னய்யா குடிச்சிட்டு வந்து தகராறு பண்றியா... போலீஸ்ல புடிச்சுக் குடுத்துடுவேன் தெரியுமா?'' என்று உறுமினார் கண்டக்டர்.

அப்புக்குட்டிக்குப் பயமாக இருந்தது. இப்போது என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. அப்பாவின் தொடை மீது கைவைத்து அழுத்தி, ''சும்மா இருப்பா'' என்றான்.

அவனது கையைத் தள்ளிவிட்டார் அப்பா. ''நீ சும்மா இருடா. இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்'' என்றவர், ''பஸ்ஸை ஒழுங்கா வச்சுக்கத் தெரியல... பேச வந்துட்டானுங்க'' என்று விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கினார்.

அதற்குள் டிரைவர் ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்து கண்டக்டரின் விசிலுக்காக ஹாரன் அடித்தார்.

கண்டக்டர் கோபத்துடன் அப்பாவைப் பார்த்து, ''யோவ் குடிச்சிட்டு தகராறு பண்றதுக்காகவே வந்திருக்கியா? மொதல்ல எறங்குய்யா கீழே'' என்று அதட்டினார்.

அப்பா இப்போது எதுவும் பேசாமல் இருந்தார்.

''இறங்குய்யா'' என்று கையைப் பிடித்து இழுத்தார் கண்டக்டர். அப்பா கம்பியை இறுகப் பற்றிக்கொண்டு ''போய்யா... போய்யா'' என்றார்.

அப்புக்குட்டி ஏறக்குறைய அழும் நிலையில் இருவரையும் மாறி மாறிப் பரிதாபமாகப் பார்த்தான்.



கவிக்குயில் சரோஜினி

பன்னிரண்டு வயதிலேயே மெட்ரிக் பரீட்சை 'பாஸ்' செய்து இந்தியாவை அதிசயிக்க வைத்தார். மேல்படிப்புக்காக லண்டன் போனார். அங்குதான் கோவிந்தராஜுலு நாயுடுவுக்கும் இவருக்கும் காதல் அரும்பியது. சமூகச் சீர்திருத்தவாதி வீரேசலிங்கம் பிள்ளை தலைமையில் இருவருக்கும் திருமணம். சரோஜினி தேவி, சரோஜினி நாயுடு ஆனார். பெண்ணுரிமைப் பிரச்னைகளில் தீவிர ஈடுபாடு. ஆங்கிலேயர்களின் அநீதிகளையும் கண்டித்துப் போராட்டங்களில் கலந்து கொண்டார். தண்டியில் உப்பு சத்தியாகிரஹம். மஹாத்மா எடுத்த ஒருபிடி உப்பை முதன் முதலாக வாங்கிக் கொண்டார் சரோஜினி நாயுடு.

சுதந்திர இந்தியாவின் ஐக்கிய மாகாணத்துக்கு கவர்னராக நியமனமானார். இந்தியாவின் முதல் பெண் கவர்னர்! 'கவிக் குயில்' பட்டம் பெறுமளவுக்குச் சிறந்த கவிஞர்.



வைரவிழா சிந்தனை...

அருகில் இருந்த ஒருவர் ''சரிதான் விட்டுத் தள்ளுங்க... போறான் குடிகாரன். இந்தப் பையனைப் பார்த்தா பாவமா இருக்கு'' என்றார்.

கண்டக்டர் விசில் கொடுக்க, பஸ் நகரத் துவங்கியது. அவமானமும் துக்கமும் சேர்ந்து அப்புக் குட்டியின் தொண்டையை அடைப்பது போல இருந்தது.



அப்பாவின் சட்டைப் பையில் இருந்து பணத்தை எடுத்து அப்புக்குட்டியே டிக்கெட் எடுத்தான்.

அவமானமும் துக்கமும் சேர்ந்து அப்புக்குட்டியின் தொண்டையை அடைப்பது போல இருந்தது.

அப்பா முன் இருக் கையின் கம்பியில் தலையை முட்டுக் கொடுத்து சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்தார். அவ ரால் தலையை நிமிர்த்தவே முடியவில்லை. அவரது வாய் மட்டும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. இரண்டு மூன்று முறை ஏப்பம் விட்டார். அப்போது 'குப்'பென்ற நெடி அடித்தது. அப்புக்குட்டி முகத்தைக் திருப்பிக் கொண்டான்.

ஒரு திருப்பத்தில் பஸ் திரும்பியபோது அப்பா திடீரென வாந்தியெடுத்தார். சகிக்க முடியாத நாற்றத்துடன் பஸ்ஸுக்குள்ளேயே அவர் வாந்தியெடுத்ததும், முன் இருக் கையில் இருந்தவர்கள் திட்டிக் கொண்டே எழுந்தனர்.

கண்டக்டர் விசில் கொடுக்க பேருந்து நின்றது.

''நான் அப்பவே சொன்னேன். குடிச்சிட்டு வந்து பெரிய இவன் மாதிரி பேசினியே... இறங்குய்யா கீழே'' என்று அதட்டினார் கண்டக்டர்.

பக்கத்தில் இருந்தவர் களும் திட்டித் தீர்த்தனர்.

''யோவ் எறங்கிப்போய் மண் அள்ளிக்கிட்டு வந்து போடுய்யா'' என்ற கண்டக் டரின் குரல் அப்பாவின் காதில் ஏறியதாகவே தெரிய வில்லை. அவர் முன் இருக் கையின் கம்பியின் மீது தலையைச் சாய்ந்தவாறே அரைக்கண்களை மூடியபடி உட்கார்ந்திருந்தார். அப்புக்குட்டி கையில் வைத்திருந்த புதுத்துணிகள் அடங்கிய பையை இருக்கையின் மீது வைத்துவிட்டு மண் அள்ளுவதற்காக இறங்கி ஓடினான். ●

அரவிந்தர்

சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவுக்கு வழிகாட்டியது வங்கம். வங்கத்தின் வழி காட்டியாக விளங்கியவர் அரவிந்தர். வங்கப் பிரிவினைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து பெரும் போராட்டத்தை நடத்தியவரை பிரிட்டிஷ் அரசு கைது செய்ய முயன்றது. தலைமறைவானார் அரவிந்தர்! பயங்கரவாத இயக்கங் களுடன் தொடர்பு உண்டாயிற்று. ஆயுதப் புரட்சி மூலமே இந்தியா சுதந்திரம் அடைய முடியும் என்று பிரசாரம் செய்யலானார். காங்கிரஸில் திலகரின் தளபதியாக உருவானார்.



அலிபூர் வெடிகுண்டு வழக்கில் சிக்க வைக்கப்பட்டு கைதான அரவிந்தரை, சித்தரஞ்சன் தாஸ்தான் வாதாடி நிரபராதி என நிரூபித்து விடுவித்தார்.

வங்கத்தைவிட்டு 1910-ல் புதுவை வந்தார் அரவிந்தர். அங்கு வ.வே.சு. அய்யர், பாரதியார் தொடர்பு ஏற்பட்டது. இளைஞர்கள் பலரை உத்வேகமூட்டி விடுதலை இயக்கத்தில் ஈடுபடுத்தினார். ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டு ஆசிரமம் நிறுவி பல்லாயிரம் பேர் பயன்பெற வகை செய்திருக்கிறார்.



வைரவிழா சிந்தனை...



"உங்க மனைவி ஒரு நிமிஷத்துல புடைவையை செலக்ட் பண்ணிட்டாங்களே... அதுவும் ரொம்பவும் குறைஞ்ச விலையில.."

"அது எங்கம்மாவுக்குங்க."

- ஆர்.புஷ்பா

சிரமப்பட்டுச் செய்ய வேண்டாம்!



"அத்தே! நான் உங்ககிட்டே சண்டைக்கு வராமலிருக்கிறது உங்க கையில்தான் இருக்கு!"

"என் கையில் என்ன இருக்கு?"

"நாலு வளையல் இருக்கே... அதைக் கழட்டிக் குடுத்துட்டீங்கன்னா சண்டைக்கு வரமாட்டேன்!"

- லீலாஜி



"மூச்சு விட ரொம்ப சிரமமா இருக்கும்மா!"

"சிரமப்பட்டு எந்தக் காரியத்தையும் நீங்க செய்ய வேண்டாம் அத்தே!"

- லீலாஜி

"எங்கம்மா தலையில் எப்படி அடிபட்டுச்சு... அவங்ககிட்டே சண்டை போட்டியா?"

"சேச்சே... இனிமேல் சண்டையே போடமாட்டேன்னு அவங்க தலையில அடிச்சு சத்தியம்தாங்க பண்ணேன்."

- லீலாஜி



கிரேஸியைக் கேளுங்கள்

★ அ.கஹைறல் ரஹ்மான்,
திருச்சி

? நிஜ சிங்கம் சிங்கிளாக வராதாமே...?

யாம் அறிந்து சிங்கிளாக வந்த ஒரு சிங்கம்... ஸாரி அரை சிங்கம்... நரசிங்கம்!

★ கே.ஆர்.ரவீந்திரன்,
சென்னை

? நான்கு வரியில் குழப்பமான ஒரு கதை சொல்ல முடியுமா...?

ஒரு கதை என்ன... ரெண்டு கதைகளைக் கலந்து கட்டி கூடுதலாகக் குழப்புகிறேன். நரி, காகத்தை பாடச் சொன்னது. அப்போது அங்கு வந்த முயல், நரி பார்ப்பதற்குள் காகம் வாயிலிருந்து விழுந்த வடையைக் கவ்விப் புதருக்குள் பதுங்கியது. பின்னால் வந்த ஆமையைச் சந்தேகப்பட்டு, நரி அதைத் துரத்தியது. நரிக்குப் பயந்து தலைதெறிக்க ஓடிய ஆமை, போட்டியில் வென்றது. **பி.கு:** அந்த வடையைத்தான் ஆமை வடை என்கிறோமோ...?

★ ரேவதிப்ரியன், ஈரோடு

? அசடு வழிதல் பற்றி ஒரு விளக்கம் தர முடியுமா...?

ஒருமுறை செக்கை மாற்றிப் பணம் எடுக்க என் மனைவி வங்கிக்குள் சென்றாள். அன்று மனைவிக்கு டிரைவர் உத்யோகம் பார்த்த நான், வங்கி வாசலில் எனது பால்ய நண்பனை யதேச்சையாகப் பார்த்தேன். மனைவி வரும் வரையில் பொழுதைக் கழிக்க நினைத்த நான், பால்ய நண்பனைப் பிடித்து வைத்து பழைய கதைகள் பேசி, அவன் பிராணனை வாங்கினேன். அறுவை தாங்காத அவன், ஒரு கட்டத்தில் 'உன் பேச்சு கா' சொல்லிவிட்டு வங்கிக்குள் ஓடினான். சிறிது நேரத்தில் வங்கியிலிருந்து வெளியே வந்த என் மனைவியிடம் 'என்னம்மா... ஒரு செக்கை மாத்த இவ்வளவு நேரமா...? வரவர பாங்குல கஸ்டமர் சர்வீஸ் ரொம்ப மோசமாயிடுச்சு' என்று கத்த, பதிலுக்கு என் மனைவி, 'சும்மா பாங்கை தப்பு சொல்லாதீங்க... கவுண்ட்டர்ல இருக்க வேண்டிய கேஷியரை யாரோ ஒரு கழுத்தறுப்பு பிடிச்சு வச்சுண்டு சாவடிச்சுட்டானாம். நீங்க வெளில தானே இருந்தீங்க, யாருங்க அந்த ஆஸா...' என்று கேட்க, நான் பதில் சொல்ல முடியாமல் அசடு வழிந்தேன்.



★ ஜெயந்தி, பெங்களூரு

பில் கேட்ஸ், பின் லேடன்... என்ன வித்தியாசம்?

பில் கேட்ஸ் Soft ware... பின் லேடன் Hard ware...

★ பி.சிவா, பாளையங்கோட்டை

? திருமணத்துக்குப் பின் பழைய காதலியை நலம் விசாரிக்கலாமா...?

தாராளமாக நலம் விசாரிக்கலாம்... நெருக்கமாகப் பழகலாம்... ஏன், குழந்தைகூட பெத்துக் கொள்ளலாம். உங்களுக்கு இல்லாத உரிமையா...? அப்புறம் சார், அது என்ன பழைய காதலி... அதான்

பழைய காதலியை நலம் விசாரிக்கலாமா?

திருமணம் ஆகிவிட்டதே. புது மனைவி என்று சொல்ல வேண்டியதுதானே...

★ **கல்யாணி ராமசந்திரன்,**

திருநெல்வேலி

உங்களுக்கு எந்த வாத்தியம் வாசிக்கத் தெரியம்...?

வீணை, வயலின், மிருதங்கம், தபேலா, கிடார் இப்படி எந்த வாத்தியமாக இருந்தாலும் பேப்பரில் எழுதிக் காட்டினால் பார்த்து கடகடவென்று ஸ்பஷ்டமாக 'வாசித்துக்' காட்டுவேன்.

★ **டாக்டர் எஸ்.ஆர்.கௌசிக்,**

பெங்களூரு

மொபைலுக்குத் தமிழாக்கம் என்ன...?

'கை பேசி' என்கிறார்கள். நான் பார்த்த வரையில் பாதி பேர் செல்ஃபோனில் 'சாரி, நான் இப்ப டிராஃபிக்ல வண்டி ஓட்டிக்கிட்டிருக்கேன்...' 'சாரி, இப்ப ஒரு மீட்டிங்குல இருக்கேன்...' என்று சரளமாக ரீல் விடுகிறார்கள். இதைப் பார்க்கும்போது 'பொய் பேசி' என வைத்திருக்கலாமோ என்று தோன்றுகிறது.

★ **என்.சண்முகம்,**

திருவண்ணாமலை

? படிக்கும்போது ஆசிரியரிடம் அடி வாங்கிய அனுபவம் உண்டா...?

தமிழாசிரியர் 'விழாப் பல்... இதற்கு இலக்கணக் குறிப்பு என்ன' என்று என்னைக் கேட்டார். தயங்கியபடி நான் 'ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் சார்' என்றேன். என்னைக் கட்டித் தழுவிய அவர், 'எப்படி கண்ணா கரெக்டா சொன்னே?' என்று கேட்க, நான் குஷாலாக 'சார், ஈறு கெட்டு போச்சுன்னா பல் விழும். விழாப் பல் எதிர்மறை. பல் வாய்க்குள்ள இருக்கறதால எச்சம். அதனால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்' என்று கூறி முடிக்க, அவர் என் கன்னத்தில் அறைய, என் பல் ஒன்று விழுந்தது. ●



வாக்காளர் அடையாள அட்டை இன்றைக்கு அத்தியாவசியத் தேவையாகிவிட்டது. ரேஷன் கார்டு போல் பல்வேறு பயன்பாடுகளுக்கும் உதவும் இதனைப் பெறுவது எப்படி?

★ ஓர் இந்தியக் குடிமகன், இந்தியாவின் எந்த ஒரு பகுதிக்கும் சென்று நிரந்தரமாக வாழும்போது, வாக்காளராகவும் தன்னைப் பதிவு செய்து கொள்ள முடியும். சென்னையைப் போன்ற பெரு நகரங்களில் மாவட்டத் தேர்தல் அதிகாரியாக இருப்பவர் மாநகராட்சி ஆணையாளர்; மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்.

★ சென்னையில் வசிக்கும் வாக்காளர், பதிவு, முகவரி மாற்றம், தவறுகளைத் திருத்துதல், புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை பெறுதல் ஆகிய தேவைகளுக்கு மாநகராட்சியின் மண்டல அதிகாரிகள், உதவித் தேர்தல் அதிகாரிகளை அணுக வேண்டும். மாவட்டங்களெனில் உங்கள் எல்லைக்குட்பட்ட கோட்டாட்சியர், வட்டாட்சியரை அணுகலாம்.

★ புதிய வாக்காளராக உங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றால் படிவம் 6-ஐப் பூர்த்தி செய்து, புகைப்படம் ஒட்டிக் கொடுக்க வேண்டும். இத்துடன் முகவரிக்கான அத்தாட்சி, வயதுச் சான்றிதழையும் இணைக்க வேண்டும்.

★ முகவரி அத்தாட்சிக்கு ரேஷன் கார்டு இருந்தால் நல்லது. இல்லையேல், டிரைவிங் லைசென்ஸ், டெலிஃபோன் பில், பான்கார்டு, பென்ஷன் அடையாள அட்டை, மின்சார பில் போன்றவற்றையும் இணைக்கலாம்.

அடையாளத்தை இழக்காதீர்கள்!





வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரோ, முகவரியோ தவறாக வந்திருந்தால் அதைச் சரிசெய்ய இருக்கவே இருக்கிறது

படிவம் எட்டு

★ வாக்காளர் பட்டியலில் ஏற்கெனவே உள்ள உங்கள் பெயரை நீங்கள் நீக்க விரும்பினால், படிவம் 7-ஐ உபயோகிக்க வேண்டும். அதே போல் ஒரு குறிப்பிட்ட முகவரியில் இல்லாத நபர், அந்தப் பகுதியில் வாக்காளராக இருந்தால், அவரை நீக்க உங்களால் மனுச் செய்ய முடியும். அதற்கும் படிவம் 7-ஐத்தான் பூர்த்தி செய்து தரவேண்டும்.

★ வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரோ, முகவரியோ தவறாக வந்திருந்தால், அதைச் சரியானபடி திருத்திக் கொள்ள, படிவம் 8-ஐ பூர்த்தி செய்து தரவேண்டும்.

★ ராமசாமி தெருவிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் உள்ள குப்புசாமி தெருவுக்கு வீடு மாறி விட்டால், உங்கள் ஓட்டுச் சாவடியும் மாறி விடும். எனவே, படிவம் 8 A-வை பூர்த்தி செய்து கொடுத்து, முகவரியை மாற்றிக் கொள்ள வேண்டும்.

★ படிவம் 6, 8 மற்றும் 8A ஆகியவற்றில் கட்டாயம் புகைப்படம் ஒட்ட வேண்டும். இந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்து தரும்போது, கூடவே படிவம் 1 Aவையும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

★ படிவம் 1 A என்பது வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்கான விண்ணப்பம் ஆகும். படிவம் 7-உடன் இதை இணைக்க வேண்டியதில்லை.

★ படிவம் 6-ஐப் பூர்த்தி செய்தவுடன் உங்களை வாக்காளராகப் பதிவு செய்துவிட மாட்டார்கள். ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் ஒரு சரிபார்ப்பு அதிகாரி இருக்கிறார். அவர் உங்கள் முகவரிக்கு வந்து சரிபார்த்த பின்னரே மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

★ வாக்காளர் புகைப்பட அட்டையும் உடனே கிடைக்காது. வருடத்துக்கு இரண்டு முறை வழங்குவார்கள். உங்கள் தொகுதியில் இது எப்போது வழங்கப்படும் என்று பத்திரிகைகளில் அறிவிப்பு வரும். பின்னர் உரிய அதிகாரியைத் தொடர்பு கொண்டு உங்கள் பகுதியில் எந்த இடத்தில் கொடுக்கிறார்கள் என்று அறிந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ இப்போது வாக்காளர் பட்டியலில் உங்கள் புகைப்படம் இடம்பெறுகிறது. கள்ள ஓட்டைத் தடுப்பதற்கான ஏற்பாடு இது. நாம் ஏற்கெனவே கொடுத்துள்ள படிவம் 1 A-வில் உள்ள புகைப்படத்தை இதற்கும் பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால், வழக்கமான குளறுபடிகள் காரணமாக இதற்கும் தனியாகப் படிவம் 1 A கேட்கிறார்கள். எனவே பத்திரிகைகளில் இது தொடர்பான அறிவிப்பு வந்தால் உரிய அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்.

★ வாக்காளர் பட்டியலில், உங்கள் பெயர் இருக்கும் பக்கத்தின் நகல் ஒன்று வேண்டுமானால், இரண்டு ரூபாய் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

- கௌசி



வீராப்பு

சுந்தர்.சி கதாநாயகனா நடிச்சு வந்திருக்கிற ரெண்டாவது படம். முந்தைய படமான 'தலைநகரம்' மாதிரி இதிலும் ரௌடிதான் (பார்த்தப்பு, முத்திரை குத்திடப் போறாங்க). அப்பாவுக்கும் மகனுக்குமான வீராப்புதான் கதை. யாரை யார் ஜெயிச்சாங்கன்னு விலாவாரியா சொல்லியிருக்காங்க.

புலிப்பாண்டியா வந்து பொளந்து கட்றார் சுந்தர் சி. ரௌடி வேடம் அவருக்கு நல்லா பொருந்துது. யாருக்கும் அடங்காத உடம்பு, அப்பாவோட பிரம்புக்கு மட்டும் வளைஞ்சு கொடுக்கும்போது உச்சுக் கொட்ட வைக்கிறார். வேட்டிய உருவி அடிக்கும்போது விசில் பறக்குது. காதல் காட்சிகள்ல, குறிப்பா, நடனத்துல இன்னும் ஸ்பீடு வேணும்.

பிரகாஷ்ராஜ் பிரமாதராஜ். கணக்கு வராத மகனைக் கண்டிக்கும்போது பொறுப்பான தந்தையா மிளிர்றவர், கொடுமையான தண்டனைகள் தரும் போது திட்டமிட்டபடி ரசிகர்கள் மனசுல வன்மவாதியா நிறையறார். கோபிகாவுக்குக் காதல் செய்யவே நேரம் சரியா இருக்கு. டெல்லிகுமார் பொறுப்பா வாழ்ந்து காட்றார். விவேக், சந்தானம், லட்சுமணன்னு காமெடி மேளாவே நடத்தியிருக்காங்க. சந்தானத்தோட டயலாக் மாடுலேஷன் ஸோ ஸ்வீட். மூட நம்பிக்கைய புரட்டிப் போடுற விவேக்கோட பன்ச்சுக்கும் வலிமை அதிகம். இன்ஸ்பெக்டர் காட்டுராஜாவுக்கு இனி நல்ல காலம்தான். சந்தோஷி, சுந்தர்.சி தங்கையா வர்ற பெண்கள் ரெண்டு பேரும் குடும்பக் குத்துவிளக்கா ஜொலிக்கிறாங்க.

இசை, இமான். பாடல்கள் சுமார்தான். ஆனா, பின்னணியில பிரிச்சு மேயறார். கே.எஸ்.செல்வராஜோட ஒளிப்பதிவு ஓ.கே. மு.காசிவிஸ்வநாதன் எடிட்டிங்ல மிரட்டறார். அதுவும் கடைசி இருபது நிமிடங்கள் பயங்கர வேகம், விவேகம்.

டைரக்ஷன் பத்ரி. ஏற்கெனவே மலையாளம், தெலுங்குல வந்த கதையை, தமிழுக்கு ஏத்த மாதிரி மெருகேத்தியிருக்கார். வசனங்கள் பளிச். அவ்வளவு பயங்கரமா மோதிக்குற அப்பா - மகன், சடார்னு திருந்திச் சமாதானமாயிடறது நம்பும்படியா இல்ல. க்ளைமேக்ஸ் யோசிச்சு பண்ணியிருந்தாலும் வலிந்து திணிக்கப்பட்ட ஃபீலிங் வர்றதைத் தவிர்க்க முடியல. பொன்னம்பலம் பாத்திரம் மனசுல ஒட்டல. தொடர்ந்து 'அப்பா - மகன்' படங்களா வந்திட்டிருக்கிற இந்த சீஸன்ல வீராப்பு - சமாளிப்பு!

– அனாமிகா

'பார்த்திபன் கனவு' குறித்து இயக்குநர் சிம்புதேவன் விரிக்கும் சிந்தனை மடலின் தொடர்ச்சி...



இப்போதும் 'ஹாலிவுட்டில்' ஆண்டு தோறும் சரித்திரப் படங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தி மற்றும் மலையாளத்தில் அவ்வப்போது சரித்திரப் படங்கள் கண் சிமிட்டுகின்றன. ஆனால், தமிழில் சுத்தமாக நின்றுவிட்டன. என்ன காரணத்தினாலோ எழுபதுக்குப் பிறகு யாருமே முயற்சிக்கவில்லை. பார்க்கப் போனால்; மற்ற எல்லோரையும்விட நமது தமிழ்ப் பாரம்பரியம் நீண்டது சொல்லப்படாத விஷயங்கள் நிறைய உள்ளன.

ஏதோ ஒரு தயக்கம் சரித்திரப் படங்களுக்கான முயற்சியைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற படங்களை இப்போது எடுப்பதில் நிறைய சிரமங்கள் இருப்பது உண்மைதான். உதாரணமாக இம்சை அரசன் 23-ம் புலிகேசியை எடுத்த போது செம்மண் சாலையைத் தேடி நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் சென்றோம். சிறிய கிராமத்தில்கூட ஏதோ ஒரு பகுதியில் தார்ச் சாலைதான் காணப்படுகிறது! எப்படியோ கண்டுபிடித்து கேமராவை மண் சாலையில் இறக்கினால், கேமராவில் முதலில் விழுவது மின் கம்பமாக இருக்கும்!

சரித்திரப் படங்களுக்கான செலவுகளும்

மில்லியன் டாலர் கேள்வி!

அதிகம். எனக்குக் கிடைத்த தயாரிப்பாளரைப் போல் ஒருவர் முன் வர வேண்டும். கலை இயக்குநர் மிகச் சரியாக அமைய வேண்டும். புலிகேசிக்கு இந்த இரண்டு விஷயங்களுமே சரியாக அமைந்தன. கலை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி நிறைய சரித்திரப் படங்களுக்குப் பணியாற்றியவர். அவரது அனுபவம் பக்கபலமாக இருந்தது. எந்த ஒரு பொருளையும் வீணாக்காமல் அதை மீண்டும் பயன்படுத்தினார்.



உதாரணமாக ஒரு தூண் செய்யப் பயன்படுத்திய மரக்கட்டையை அடுத்த நாள் பல துண்டுகளாக்கி, படிக்கட்டுகளாக மாற்றுவார். இப்படி திட்டமிட்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்தால், நிச்சயம் நல்ல சரித்திர நாவல்களைத் திரைப்படங்களாக்க முடியும்.

நாவல்களை திரைப்படங்களாக ஆக்குவது என்றதும் என் நினைவுக்கு வருபவர் இயக்குநர் மகேந்திரன் அவர்கள்தான். தமிழில் அதிகமான நாவல்களைத் திரைப் படங்களாக்கியதும் அவர்தான். நாவலுக்கான தன்மையும் கெட்டுவிடாமல் திரைக்கதைக்கான செழுமையும் மாறாமல் கொடுக்கப்படும் திரைப்படம்தான் வெற்றி பெறும்.

நாவல், திரைக்கதை இரண்டிலும் ஞானமும் சரியான பார்வையும் இருந்தால்தான் இது சாத்தியம். அத்தகைய இயக்குநர்கள் இப்போது இருக்கிறார்களா என்பது சந்தேகம்தான். 'பார்த்திபன் கனவு' போன்ற செழுமையான நாவலுக்குத் திரை வடிவம் கொடுப்பது சவாலான விஷயம். ஒன்றுமில்லை, பாட்டி வடை சுட்டக் கதையை எடுத்துக் கொண்டாலே அதில் எத்தனை விஷயங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது?

அந்தப் பாட்டியின் வயதென்ன? அவர் கட்டியுள்ள புடைவையின் நிறமென்ன? எந்த மரத்தின் கீழ் அமரப் போகிறார்? கேமரா ஓடும்போது வாணலியில் வடை எந்த நிலையில் இருக்க வேண்டும்? இது போன்று பல கேள்விகளுக்கு விடையைத் தயார் செய்துகொள்ள வேண்டும். 'பாட்டி வடை சுட்டார்' என்ற ஒரு வரிக்கே இவ்வளவு விஷயங்களை கவனிக்க வேண்டியுள்ளது. பார்த்திபன் கனவுக்கு எவ்வளவு தூரம் யோசிக்க வேண்டியிருக்கும்?

சோழர்களின் ஆடைகள், அவர்களின் பேச்சுத் தமிழ், அப்போது பயன்படுத்தப்பட்ட படகு, பொருட்கள், வாள்... இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் ஆழ்ந்து இறங்கினால்தான் கதாசிரியர் நாவல் எழுதும்போது மனத்தில் எந்தக் காட்சியை நினைத்து எழுதினாரோ, அதோடு ஓரளவுக்கேனும் ஒத்துப்போகும் காட்சியைத் திரையில் கொண்டு வர முடியும்.

கோடம்பாக்கத்தில் உலாவரும் பல இயக்குநர்களுக்கும் ஒரு சிறந்த படத்தைக் கொடுக்க வேண்டும் என்ற கனவு இருக்கிறது.

ஒரு படம்... ஒரேயொரு படம் வெளியாகி வெற்றி பெற்றுவிட்டால் அடுத்தடுத்து பலர் முன் வருவார்கள். பல சரித்திர நாயகர்களைத் திரையில் பதிவு செய்யலாம். அந்த முதல் நபர் யார் என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி. அப்படி சரித்திரப் படங்கள் எடுக்கப்பட்டால் அதில் நடிப்பதற்கான நடிகர்கள் தற்சமயம் இருக்கிறார்களா? அடுத்த வாரம் அலசுவோம்... இப்போது பொன்னனும் வள்ளியும் காத்திருக்காங்க, மேலே போங்க...!

பாட்டி வடை சுட்டார் என்ற ஒரு வரிக்கே இவ்வளவு யோசிக்க வேண்டியுள்ளது. அப்படியானால் பார்த்திபன் கனவுக்கு...

பார்த்திபன்களே வாங்க! வாங்க!
போட்டிக்கு வந்த கனவுகள் பரிசீலனையில் உள்ளன. முடிவு மிக விரைவில்...

3. பல்லவ தூதர்கள்

அமரர் கல்கி

பொன்னனும் வள்ளியும் தங்கள் குடிசையின் கதவைப் பூட்டிக்கொண்டு உறையூரை நோக்கிக் கிளம்பினார்கள். அவர்கள் வசித்த தோணித் துறையிலிருந்து உறையூர் மேற்கே ஒரு காத தூரத்தில் இருந்தது. அந்தக் காலத்தில் அதாவது சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பு செந்தமிழ் நாட்டில் ரயில் பாதைகளும் ரயில் வண்டிகளும் இல்லை, மோட்டார் வண்டிகளும் தார் ரோடுகளும் இல்லை. இவையெல்லாம் அந்த நாளில் உலகில் எந்த நாட்டிலுமே கிடையாது; அரசர்களும் பிரபுக்களும் குதிரைகள் மீதும் யானைகள் மீதும் ஆரோகணித்துச் சென்றனர். குதிரை பூட்டிய ரதங்களிலும் சென்றனர். மற்ற சாதாரண மக்கள் மாட்டு வண்டிகளில் பிரயாணம் செய்தார்கள். இந்த வாகனங்களெல்லாம் போவதற்காக விஸ்தாரமான சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளிர்ந்த நிழல் தரும் மரங்கள் இருபுறமும் அடர்ந்து வளர்ந்து அழகான சாலைகளுக்குச் சோழவள நாடு, அந்தக் காலத்திலே பெயர் போனதாயிருந்தது. அந்தச் சாலைகளுக்குள்ளே காவேரி நதியின் தென் கரையோரமாகச் சென்ற ராஜபாட்டை மிகப் பிரசித்தி பெற்றிருந்தது.

இந்த ராஜபாட்டை வழியாகத்தான் பொன்னனும் வள்ளியும் சோழ நாட்டின் தலைநகரமான உறையூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

சோழநாடு அந்த நாளில் தன்னுடைய புராதனப் பெருமையை இழந்து ஒரு சிற்றரசாகத்தான் இருந்தது. தெற்கே பாண்டியர்களும் வடக்கே புதிதாகப் பெருமையடைந்திருந்த பல்லவர்களும் சோழ நாட்டை நெருக்கி அதன் பெருமையைக் குன்றச் செய்திருந்தார்கள். ஆனால், சோழ நாட்டின் வளத்தையும் வன்மையையும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த வளத்துக்குக் காரணமாயிருந்த காவேரி நதியையும் அவர்களால் கொள்ளை கொண்டு போக முடியவில்லை. உறையூர் ராஜபாட்டையின் இருபுறமும் பார்த்தால் சோழ நாட்டு நீர் வளத்தின் பெருமையை ஒருவாறு அறிந்து கொள்ளும்படியிருந்தது. ஒருபுறத்தில் கரையை முட்டி அலைமோதிக் கொண்டு கம்பீரமாய்ச் சென்ற காவேரியின் பிரவாகம், ஆற்றுக்கு அக்கரையில் நீல வானத்தைத் தொட்டுக் கொண்டிருந்த அடர்த்தியான தென்னை மரத் தோப்புகளின்



காட்சி, இந்தப்புறம் பார்த்தாலோ கண்ணுக்கெட்டிய தூரம் பசுமை, பசுமை, பசுமைதான். கழனிகளெல்லாம் பெரும்பாலும் நடவு ஆகியிருந்தன. இளம் நெற்பயிர்கள் மரகதப் பச்சை நிறம் மாறிக் கரும்பசுமையை அடைந்து கொண்டிருந்த காலம். குளுகுளு சப்தத்துடன் ஜலம் பாய்ந்து கொண்டிருந்த மடைகளில், ஒற்றைக் காலால் தவம் செய்துகொண்டிருந்த வெள்ளை நாரைகள் இளம் பயிர்களின் பசுமை நிறத்தை இன்னும் நன்றாய் எடுத்துக் காட்டின. நெல் வயல்களுக்கு மத்தியில் ஆங்காங்கே சில வாழைத் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும் கரும்புக் கொல்லைகளும் காணப்பட்டன.

இத்தகைய வளங் கொழிக்கும் அழகிய நாட்டின் அமைதியைக் குலைப்பதற்கு யுத்தம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. இதனால் சோழநாட்டுக் குடிகளின் உள்ளம் எவ்வளவு தூரம் பரபரப்பு அடைந்திருந்ததென்பதை பொன்னனும் வள்ளியும் உறையூர்ப் பிரயாணத்தின்போது நன்கு கண்டார்கள். பக்கத்துக் கழனிகளில் வேலை செய்துகொண்டிருந்த உழவர்களும் பயிர்களுக்குக் களை பிடுங்கிக் கொண்டிருந்த ஸ்திரீகளும், பொன்னனையும் வள்ளியையும் கண்டதும் கைவேலையைப் போட்டுவிட்டு ஓடோடி வந்தார்கள்.

''பொன்னா! என்ன சேதி?'' என்று சிலர் ஆவலுடன் கேட்டார்கள். ''சண்டை நிச்சயந்தானா?'' என்று சிலர் விசாரித்தார்கள். ''தூதர்கள் வந்த சமாசாரம் ஏதாவது தெரியுமா?'' என்று வினவினார்கள். பொன்னன் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாய் பதில் சொன்னான். ''சண்டையைப் பற்றிச் சந்தேகம் என்ன, நமது மகாராஜா ஒருநாளும் கப்பம் கட்டப் போவதில்லை. எல்லோரும் அவரவர்கள் வாளையும் வேலையும் தீட்டிக் கொண்டு வந்து சேருங்கள்!'' என்று சிலரிடம் சொன்னான். வேறு சிலரிடம் ''எனக்கு என்ன தெரியும்? உங்களுக்குத் தெரிந்ததுதான் எனக்கும் தெரியும்'' என்றான். அவர்கள், ''நன்றாயிருக்கிறது, பொன்னா! உனக்குத் தெரியாமலிருக்குமா? சோழ நாட்டுக்கே இப்போது முக்கிய மந்திரி நீதானே? உனக்குத் தெரியாத ராஜ ரகசியம் எது?'' என்றார்கள்.





அப்போது வள்ளி அடைந்த பெருமையைச் சொல்லி முடியாது.

ஆனால் வேறு சிலர், ''பொன்னா! மகாராஜா யுத்தத்துக்குப் போனால் நீயும் போவாயோ, இல்லையோ?'' என்று கேட்டபோது வள்ளிக்கு ரொம்ப எரிச்சலாயிருந்தது. அவர்களுக்கு, '' அது என் இஷ்டமா? மகாராஜாவின் இஷ்டம்!'' என்றான். அவர்கள் போன பிறகு, வள்ளியிடம், ''பார்த்தாயா, வள்ளி! நான் யுத்தத்துக்குப் போகாமலிருந்தால் நன்றாயிருக்குமா? நாலு பேர் சிரிக்க மாட்டார்களா?'' என்றான். அதற்கு வள்ளி, ''உன்னை யார் போக வேண்டாமென்று சொன்னார்கள்? மகாராஜா உத்தரவு கொடுத்தால் போ, என்னையும் அழைத்துக்கொண்டு போ என்றுதானே சொல்லுகிறேன்'' என்றாள்.

இப்படி வழியெல்லாம் பொன்னன் நின்று நின்று கேட்டவர்களுக்கு மறுமொழி சொல்லிக் கொண்டு போக வேண்டியதாயிருந்தது. உறையூர்க் கோட்டை வாசலை அணுகிய போது, அஸ்தமிக்கும் நேரம் ஆகிவிட்டது. அவர்கள் வந்து சேர்ந்த அதே சமயத்தில் கோட்டை வாசல் திறந்தது. உள்ளிருந்து சில குதிரை வீரர்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். முதலில் வந்த வீரன் கையில் சிங்கக் கொடியைப் பார்த்ததும், அவர்கள் தாம் மத்தியானம் உறையூருக்குச் சென்ற பல்லவ தூதர்கள் என்பது பொன்னனுக்குத் தெரிந்துவிட்டது. இருவரும் சிறிது ஒதுங்கி நின்றார்கள். கோட்டை வாசல் தாண்டியதும் குதிரைகள் காற்றிலும் கடிய வேகத்துடன் பறக்கத் தொடங்கின. அவற்றின் காற்குளம்பின் புழுதி மறையும் வரையில் அவை சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, பொன்னனும், வள்ளியும் கோட்டை வாசல் வழியாகப் புகுந்து சென்று நகருக்குள் பிரவேசித்தார்கள்.

நகரின் வீதிகளில் ஆங்காங்கே கும்பல் கும்பலாக ஜனங்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு கும்பலின் ஓரத்தில் பொன்னனும் வள்ளியும் போய் நின்றனர். பல்லவ தூதர்கள் வந்தபோது ராஜ சபையில் நடந்த சம்பவங்களை ஒருவன் வர்ணித்துக்கொண்டிருந்தான். ''ஆகா!





அந்தக் காட்சியை நான் என்னவென்று சொல்லப் போகிறேன்! மகாராஜா சிங்காதனத்தில் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். இளவரசரும், மந்திரி, சேனாதிபதி எல்லாரும் அவரவர்களின் இடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். எள் போட்டால் எள் விழுகிற சப்தம் கேட்கும்; அந்த மாதிரி நிசப்தம் சபையில் குடிகொண்டிருந்தது. 'தூதர்களை அழைத்து வாருங்கள்!' என்று மகாராஜா சொன்னார். அவருடைய குரலில் எவ்வளவு வேகம் ததும்பிற்று இன்றைக்கு? தூதர்கள் வந்தார்கள். அவர்களுடைய தலைவன் முன்னால் வந்து நின்று மகாராஜாவுக்கு வந்தனம் செலுத்தினான்.

"திரிலோக சக்கரவர்த்தி காஞ்சி மண்டலாதிபதி சத்ரு சம்ஹாரி நரசிம்ம வர்ம பல்லவராயருடைய தூதர்கள் நாங்கள்!"

''தூதரே! என்ன சேதி?'' என்று கேட்டார்.

அந்தக் குரலின் கம்பீரத்திலேயே தூதன் நடுங்கிப் போய்விட்டான். அவனுக்குப் பேசவே முடியவில்லை. தட்டுத் தடுமாறிக் கொண்டே 'திரிலோக சக்கரவர்த்தி காஞ்சி மண்டலாதிபதி சத்ரு சம்ஹாரி நரசிம்ம வர்ம பல்லவராயருடைய தூதர்கள் நாங்கள்...'' என்று அவன் ஆரம்பிக்கும்போது நம்முடைய அரண்மனை விதூஷகன் குறுக்கிட்டான். ''தூதரே! நிறுத்தும்! எந்தத் திரிலோகத்துக்குச் சக்கரவர்த்தி! அதல ஸுதல பாதாளமா? இந்திரலோக, சந்திரலோக, யமலோகமா?'' என்றான். சபையில் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். தூதன் பாடு திண்டாட்டமாய்ப் போய்விட்டது. அவனுடைய உடம்பு நடுங்கிற்று. நா குழறிற்று. மெதுவாகச் சமாளித்துக்கொண்டு ''தங்கள் பாட்டனார் காலம் முதல் ஆண்டுதோறும் கட்டி வந்த கப்பத்தைச் சென்ற ஆறு வருஷமாய் மகாராஜா கட்டவில்லையாம். அதற்கு முகாந்திரம் கேட்டு வரும்படி சக்கரவர்த்தியின் கட்டளை'' என்றான். ஆகா! அப்போது நமது மகாராஜாவின் தோற்றத்தைப் பார்க்க வேணுமே? 'தூதரே! உங்கள் சக்கரவர்த்தி கேட்டிருக்கும் முகாந்திரத்தைப் போர் முனையிலே தெரிவிப்பதாகப் போய்ச் சொல்லும்' என்றார். எனக்கு அப்போது உடல் சிலிர்த்துவிட்டது...''

இவ்விதம் வர்ணித்து வந்தவன் சற்றே நிறுத்தியதும், பல பேர் ஏக காலத்தில், ''அப்புறம் என்ன நடந்தது?'' என்று ஆவலுடன் கேட்டார்கள்.

அந்தத் தூதன் சற்று நேரம் திகைத்து நின்றான். பிறகு, 'அப்படியானால் யுத்தத்துக்குச் சித்தமாகும்படி சக்கரவர்த்தி தெரிவிக்கச் சொன்னார்கள். இதற்குள்ளே பல்லவ சைன்யம் காஞ்சியிலிருந்து கிளம்பியிருக்கும். போர்க்களமும் யுத்த ஆரம்ப தினமும் நீங்களே குறிப்பிடலாமென்று தெரியப்படுத்தச் சொன்னார்கள்' என்றான். அதற்கு நம் மகாராஜா, 'புரட்டாசிப் பௌர்ணமியில் வெண்ணாற்றங்கரையில் சந்திப்போம்' என்று விடையளித்தார். உடனே சபையோர் அனைவரும், 'வெற்றி வேல்! வீரவேல்!' என்று வீர கர்ஜனை புரிந்தார்கள்.

இதைக் கேட்டதும் அந்தக் கும்பலில் இருந்தவர்களும் ''வெற்றிவேல் வீரவேல்!'' என்று முழங்கினார்கள். பொன்னனும் உரத்த குரலில் அம்மாதிரி வீர முழக்கம் செய்துவிட்டு வள்ளியை அழைத்துக் கொண்டு மேலே சென்றான்.

இதற்குள் இருட்டிவிட்டது. வெண் மேகங்களால் திரையிடப்பட்ட சந்திரன் மங்கலாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வீதி மூலையிலும் நாட்டியிருந்த கல்தூணின் மேல் பெரிய அகல் விளக்குகள் இருந்தன. அவை ஒவ்வொன்றாய்க் கொளுத்தப்பட்டதும் புகை விட்டுக் கொண்டு எரிய ஆரம்பித்தன.

திடீரென்று எங்கேயோ உயரமான இடத்திலிருந்து பேரிகை முழக்கம் கேட்கத் தொடங்கியது. 'தம்ம்ம்' 'தம்ம்ம்' என்ற அந்தக் கம்பீரமான சப்தம் வானவெளியில் எட்டுத் திக்கிலும் பரவி, 'அதம்ம்ம்'

'அதம்ம்ம்' என்ற பிரதித் தொனியை உண்டாக்கிற்று. உறையூரின் மண்டபங் களும், மாட மாளிகைகளும், கோபுரங் களும், கோட்டை வாசல்களும் சேர்ந்து ஏககாலத்தில் 'அதம்ம்ம்' 'அதம்ம்ம்' என்று எதிரொலி செய்தன. சற்று நேரத்துக்கெல் லாம் அந்தச் சப்தம் 'யுத்தம்ம் யுத்தம்ம்' என்றே கேட்கத் தொடங்கிற்று.

இடி முழக்கம் போன்ற அந்தப் பேரிகை ஒலியைக் கேட்டதும் பொன்ன னுடைய உடம்பில் மயிர்க் கூச்சம் உண்டா யிற்று. அவனுடைய ரத்தம் கொதித்தது. நரம்புகள் எல்லாம் புடைத்துக் கொண்டன. வள்ளியோ, நடுங்கிப் போனாள்.

''இது என்ன இது? இம்மாதிரி ஓசை இதுவரையில் நான் கேட்டதே யில்லை!'' என் றாள்.

''யுத்த பேரிகை முழங்குகிறது'' என் றான் பொன்னன். அவனு டைய குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட வள்ளி, ''ஐயோ! உனக்கு என்ன?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை. வள்ளி! எனக்கு ஒன்றுமில்லை'' என்றான் பொன்னன். சற்றுப் பொறுத்து, ''வள்ளி! யுத்தத்துக்கு நான் கட்டாயம் போக வேண்டும்!'' என்றான்.

4. பாட்டனும் பேத்தியும்

உறையூர்க் கம்மாளத் தெருவில் ஒரு வீட்டு வாசலில் வந்து பொன்னனும் வள்ளியும் நின்றார்கள். கதவு சாத்தியிருந் தது. ''தாத்தா'' என்று வள்ளி கூப்பிட்டாள். சற்று நேரத்துக்கெல்லாம் கதவு திறந்தது. திறந்தவன் ஒரு கிழவன். ''வா, வள்ளி! வாருங்கள் மாப்பிள்ளை!'' என்று அவன் வந்தவர்களை வரவேற்றான். பிறகு, வீட்டுக்குள்ளே நோக்கி, ''கிழவி இங்கே வா! யார் வந்திருக்கிறது பார்!'' என்றான்.

மூன்று பேரும் வீட்டுக்குள் போனார் கள். ''யார் வந்திருக்கிறது?'' என்று கேட் டுக்கொண்டே அங்கு வந்த கிழவி, வள்ளியையும் பொன்னனையும் பார்த்ததும் பல்லில்லாத வாயி னால் புன்னகை புரிந்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். வள்ளியையும் கட்டிக் கொண்டு, ''சுகமாயிருக்கியா. கண்ணு! அவர் சுகமாயிருக் காரா?'' என்று கேட்டாள்.

பொன்னன், ''தாத்தா! உங்கள் பேத்தியைக் கொண்டு வந்து ஒப்புவித்து விட்டேன். நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வரு கிறேன்'' என்றான்.



''வந்ததும் வராததுமாய் எங்கே போகிறாய்?'' என்று கிழவன் கேட்டான்.

''மகாராஜாவைப் பார்க்கப் போகிறேன்'' என்றான்.

''மகாராஜா இப்போது அரண்மனை யில் இல்லை. மலைக்குப் போயிருக் கிறார். இங்கே வா காட்டுகிறேன்'' என்று கிழவன் அவர்களை வீட்டு முற்றத்துக்கு அழைத்துப் போனான். முற்றத்திலிருந்து அவன் காட்டிய திக்கை எல்லோரும் பார்த்தார்கள். உச்சிப் பிள்ளையார் கோயில் தீபம் தெரிந்தது. அங்கிருந்து தீவர்த்திகளுடன் சிலர் இறங்கி வருவது தெரிந்தது. இறங்கி வந்த தீவர்த்திகள் வழியில் ஓரிடத்தில் சிறிது நின்றன.

''அங்கே நின்று என்ன பார்க்கிறார்கள்?'' என்று வள்ளி கேட்டாள்.

''மகேந்திர சக்கரவர்த்தியின் சிலை அங்கே இருக்கிறது. மகா ராஜா, இளவரசருக்கு அதைக் காட்டுகிறார் என்று தோன்று கிறது'' என்றான் கிழவன்.

''அவர்கள்தான் இறங்கி வரு கிறார்களே, தாத்தா நான் அரண் மனை வாசலுக்குப் போகிறேன்.

இன்று ராத்திரி மகாராஜாவை எப்படியும் நான் பார்த்து விட வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே பொன்னன் வெளிக் கிளம்பினான். கிழவன் அவனோடு வாசல் வரை வந்து இரகசியம் பேசும் குரலில், ''பொன்னா! ஒரு முக்கியமான சமாசாரம் மகாராஜாவிடம் தெரிவிக்க வேணும். மாரப்பபூபதி விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாயிருக்கச் சொல்லு. இதை அந்தரங்கமாக அவரிடம் சொல்ல வேணும்!'' என்றான்.

''மாரப்ப பூபதியைப் பற்றி என்ன?'' என்று பொன்னன் கேட்டான்.

''அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன். மகாராஜாவின் காதில் எப்படியாவது இந்தச் சேதியைப் போட்டுவிடு'' என்றான் கிழவன்.

கிழவி விருந்தாளிகளுக்குச் சமையல் செய்வதற்காக உள்ளே போனாள். பாட்டனும் பேத்தியும் முற்றத்தில் உட்கார்ந்தார்கள்.

திடீரென்று வள்ளி, ''ஐயோ தாத்தா! இதெல்லாம் என்ன?'' என்று கேட்டாள்.

முற்றத்தில் ஒரு பக்கத்தில் உலைக்களம் இருந்தது. அதன் அருகில் கத்திகளும் வாள்களும் வேல்களும் அடுக்கியிருந்தன. அவைகளைப் பார்த்துவிட்டுத்தான் வள்ளி அவ்விதம் கூச்சல் போட்டாள்.

''என்னவா! வாளும், வேலும், சூலமுந்தான். நீ எங்கே பார்த்திருக்கப் போகிறாய்? முன்காலத்தில்...''

''இதெல்லாம் என்னத்துக்கு, தாத்தா?''

''என்னத்துக்காகவா? கோயிலில் வைத்து தூப தீபம் காட்டிக் கன்னத்தில் போட்டுக் கொள்வதற்காகத்தான்! கேள்வியைப் பார் கேள்வியை! தேங்காய்க் குலை சாய்ப்பது போல எதிராளிகளின் தலைகளை வெட்டிச் சாய்ப்பதற்கு வாள், பகைவர்களின் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாய்ப் போட்டுக் கொள்வதற்கு வேல், தெரிந்ததா!''

''ஐயையோ! பயமாயிருக்கிறதே!'' என்று வள்ளி கூவினாள்.

''இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்த நாட்டு ஆண் பிள்ளைகள்கூட உன்னைப் போலேதான் ஆகி விடுவார்கள். வாளையும் வேலையும் கொண்டு என்ன செய்கிறது என்று கேட்க ஆரம்பித்து விடுவார்கள் வள்ளி! இதைக் கேள். என்னுடைய பாட்டன், முப்பாட்டன் காலங்களில் எல்லாம் எப்படித் தெரியுமா? அப்போது கொல்லுப் பட்டறையில் எல்லாம் வாளும் வேலும் சூலமும் செய்த வண்ணமாயிருப்பார்களாம். ஒவ்வொரு பட்டணத்திலும் கம்மாளத் தெருதான் எப்போதும் 'ஜே ஜே' என்று இருக்குமாம். ராஜாக்களும், ராஜகுமாரர்களும் சேனாதி



பதிகளும் கம்மாளனைத் தேடி வந்து கொண்டிருப்பார்களாம். என் அப்பன் காலத்திலேயே இதெல்லாம் போய்விட்டது. வாழைக்கொல்லை அரிவாள்களும் வண்டிக்குக் கடையாணிகளும், வண்டி மாட்டுக்குத் தார்க் குச்சிகளும் செய்து கம்மாளன் வயிறு வளர்க்கும்படி ஆகி விட்டது. என் வயதில் இப்போதுதான் நான் வாளையும் வேலையும் கண்ணால் பார்க்கிறேன். ஆகா! இந்தக் கைகளிலே மட்டும் முன்னைப் போல் வலிவு இருந்தால்...? இருபது வருஷத்துக்கு முன்னாலே இந்த யுத்தம் வந்திருக்கக் கூடாதா?''

''சரியாய்ப் போச்சு, தாத்தா! இவருக்கு நீ புத்தி சொல்லித் திருத்துவாயாக்கும்

என்றல்லவா பார்த்தேன்! யுத்தத்துக்குப் போகணும் என்று இவர் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்...''

''பொன்னனா! அவன் எங்கே யுத்தத் துக்குப் போகப் போகிறான் வள்ளி? பொன்னனாவது உன்னை விட்டுவிட்டுப் போகவாவது! துடுப்புப் பிடித்த கை, வாளைப் பிடிக்குமா? பெண் மோகம் கொண்டவன் சண்டைக்குப் போவானா?''

''அப்படி ஒன்றும் சொல்ல வேண்டாம், தாத்தா! இவர் போகணும் போகணும் என்றுதான் துடித்துக் கொண்டிருக்கிறார். மகாராஜாதான் வரக்கூடாது என்கிறார். இளவரசருக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க இவர் இருக்க வேணுமாம்.''

''அடடா! உன்னுடைய அப்பனும் சித்தப்பன்மார்களும் மட்டும் இப்போது இருந்தால் ஒவ்வொருவன் கையிலும் ஒரு வாளையும் வேலையும் கொடுத்து அனுப்ப மாட்டேனா? எல்லாரையும் ஒரே நாளில் காவேரியம்மன் பலிகொண்டு விட வேண்டுமா?'' என்று சொல்லிக்கொண்டே கிழவன் பெருமூச்சு விட்டான்.

வள்ளிக்கு அந்தப் பயங்கரமான சம்பவம் ஞாபகம் வந்தது.

நாலு வருஷத்துக்கு முன்பு கிழவனை யும் கிழவியையும் தவிர, குடும்பத்தார் அனைவரும், ஆற்றுக்கு அக்கரையில் நடந்த ஒரு கல்யாணத்துக்காகப் படகில் ஏறிப் போய்க் கொண்டிருந்தார்கள். நடு ஆற்றில் திடீரென்று ஒரு சூறாவளிக் காற்று அடித்தது. படகு கவிழ்ந்து விட்டது. அச்சமயம் கரையில் இருந்த பொன்னன் உடனே நதியில் குதித்து நீந்திப் போய்த் தண்ணீரில் விழுந்தவர்களைக் காப்பாற்ற முயன்றான். தெய்வ யத்தனத்தினால் வள்ளியை மட்டுந்தான் அவனால் காப் பாற்ற முடிந்தது. மற்றவர்கள் எல்லாரும் நதிக்குப் பலியானார்கள்.

கிழவன் மேலும் சொன்னான். ''என் குலத்தை விளங்க வைக்க நீ ஒருத்திதான் இருக்கிறாய். உன் வயிற்றில் ஒரு குழந்தை பிறந்து விட்டால், பொன்னனை நானே கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன், யுத்தத் துக்குப் போ என்று''

''யுத்தம் என்னத்துக்காக நடக்கிறது, தாத்தா! அது தான் புரியவில்லை'' என்றாள் வள்ளி.

''யுத்தம் என்னத்துக் காகவா! மானம் ஒன்று இருக்கிறதே. அதற் காகத்தான்! எருதுக் கொடிக்குப் புலிக் கொடி தாழ்ந்து போகலாமா? தொண்டை நாட்டுக்குச் சோழ நாடு பணிந்து போகி றதா? இந்த அவமானத்தைப் போக்குவதற் காகத்தான்.

''எருதுக் கொடி யாருடையது?''

''இது தெரியாதா, உனக்கு? எருதுக் கொடி காஞ்சி பல்லவ ராஜாவினுடை யது.''

''சிங்கக் கொடி என்று சொல்லு.''

''இல்லை. எருதுக் கொடிதான்.''

''நான் இன்றைக்குப் பார்த்தேன் தாத்தா! தூதர்களின் கொடியில் சிங்கந்தான் போட் டிருந்தது.''

''ஆமாம்; எருதுக் கொடியைச் சிங்கக் கொடியாக மாற்றி விட்டார்கள். ஆனால், எருது பன்றியை ஜயித்து விட்டதால் சிங்க மாகி விடுமா'' என்றான் கிழவன்.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை, தாத்தா! விவரமாய்ச் சொல்லேன்'' என்றாள் வள்ளி.

''சரி, அடியிலிருந்து சொல்லுகிறேன் கேள்!'' என்று கிழவ[illegible]யை ஆரம்பித் தான்.

''**நீ** பிறந்த வருஷத்தில் இது நடந்தது. அப்போது காஞ்சியில் மகேந்திர சக்கர வர்த்தி ஆண்டு கொண்டிருந்தார். அவரு டைய வீர பராக்கிரமங்களைப் பற்றி நாடெங்கும் பிரமாதமாய்ப் பேசிக் கொண் டிருந்த காலம். இந்த உறையூருக்கும் அவர் ஒருமுறை வந்திருந்தார். அவர் விஜயத்தின் ஞாபகார்த்தமாகத்தான் நமது மலையிலே கூட அவருடைய சிலையை அமைத்திருக் கிறது. இப்படி இருக்கும் சமயத்தில், வடக்கே இருந்து வாதாபியின் அரசன் புலிகேசி என்பவன், பெரிய படை திரட்டிக் கொண்டு தென்னாட்டின் மேல்

படையெடுத்து வந்தான். சமுத்திரம் பொங்கி வருவதுபோல் வந்த அந்தச் சைன்யத்துடன் யுத்த களத்தில் நின்று போர் செய்ய மகேந்திர சக்கரவர்த்திக்குத் தைரியம் வரவில்லை. காஞ்சிக் கோட்டைக்குள் சைன்யத்துடன் பதுங்கிக் கொண்டார். கோட்டையைக் கொஞ்ச காலம் முற்றுகையிட்டுப் பார்த்தான் புலிகேசி. அதில் பயனில்லையென்று கண்டு தெற்குத் திக்கை நோக்கி வந்தான். நமது கொள்ளிடத்தின் அக்கரைக்கு வந்துவிட்டான். அப்பப்பா! அப்போது இந்த உறையூர் பட்ட பாட்டை என்னவென்று சொல்லுவேன்! நமது பார்த்திப மகாராஜா அப்போது பட்டத்துக்கு வந்து கொஞ்ச நாள்தான் ஆகியிருந்தது. புலிகேசியை எதிர்க்கப் பலமான ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தார். இதற்குள் வடக்கே புலிகேசியின் ராஜ்யத்துக்கே ஏதோ ஆபத்து வந்து விட்டது போலிருந்தது. புலிகேசி கொள்ளிடத்தைத் தாண்டவேயில்லை. திரும்பிப் போய்விட்டான். போகும்போது அந்தக் கிராதகனும் அவனுடைய ராட்சத சைன்யங்களும் செய்த அட்டூழியங்களுக்கு அளவேயில்லையாம். ஊர்களையெல்லாம் சூறையாடிக் கொண்டும் தீ வைத்துக் கொண்டும் போனார்களாம். அதிலிருந்து மகேந்திர சக்கரவர்த்தியினுடைய புகழ் மங்கிவிட்டது. 'சாளுக்கரின் பன்றிக் கொடிக்குப் பல்லவரின் ரிஷபக் கொடி பயந்துவிட்டது' என்று ஜனங்கள் பேசத் தொடங்கினார்கள். இந்த அவமானத்துக்குப் பிறகு மகேந்திர சக்கரவர்த்தி அதிக நாள் உயிரோடிருக்கவில்லை. அவருக்குப் பிறகு நரசிம்ம வர்ம சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்தார். இவர் பட்டத்துக்கு வந்ததிலிருந்து புலிகேசியைப் பழிக்குப் பழி வாங்கிப் பல்லவ குலத்துக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்க வேணுமென்று ஆயத்தங்கள் செய்து வந்தார். கடைசியில் ஆறு வருஷங்களுக்கு முன்பு பெரிய சைன்யத்தைத் திரட்டிக்கொண்டு வடக்கே போனார். புலிகேசியைப் போர்க்களத்தில் கொன்று வாதாபி நகரையும் தீ வைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கி விட்டுத் திரும்பி வந்தார். இந்தப் பெரிய வெற்றியின் ஞாபகார்த்தமாக பல்லவர்களின் ரிஷபக் கொடியை நரசிம்ம சக்கரவர்த்தி சிங்கக் கொடியாக மாற்றி விட்டார். அவர் திரும்பி வந்து இப்போது ஒரு மாதந்தான் ஆகிறது வள்ளி! அதற்குள்ளே...''

இத்தனை நேரமும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தவள், ''அப்பேர்ப்பட்ட சக்கரவர்த்தியுடன் நமது மகாராஜா எதற்காக யுத்தம் செய்யப் போகிறார் தாத்தா?'' என்று கேட்டாள்.

''அடி பைத்தியக்காரி...'' என்று கிழவன் மறுமொழி சொல்ல ஆரம்பித்தான்.

அப்போது வீதியில் குதிரை வரும் சப்தம் கேட்டது. அந்த வீட்டின் வாசலிலேதான் வந்து நின்றது.

''வீரபத்திர ஆச்சாரி!'' என்று யாரோ அதிகாரக் குரலில் கூப்பிட்டார்கள். உடனே கிழவன், ''அந்தச் சண்டாளன் மாரப்ப பூபதி வந்து விட்டான் வள்ளி. நீ அவன் கண்ணில் படக்கூடாது. சமையற்கட்டுக்குள் போ. அவன் தொலைந்ததும் உன்னைக் கூப்பிடுகிறேன்'' என்றான்.



(தொடரும்)

பிசிறில்லாத மொழிபெயர்ப்பு!

I, RAMASESHAN - ஆதவன்; மொழி பெயர்ப்பு - பத்மா நாராயணன், பக்கம் - 216, ரூ.200/-


ஆதவனின் என் பெயர் ராமசேஷன், கல்லூரி மாணவனது மனோவிகாரங்களையும், தூண்டில் போடும் சிந்தனைகளையும் ஒரு கதையாகப் பின்னுகிறது. ராமசேஷன் மனதில் குப்பைகள் அதிகம். இதன் காரணங்களை ஆசிரியர் தேடுகிறார். முதுகெலும்பற்ற தந்தை, ஆண்பிள்ளை என்கிற செல்லம், சக மாணவ-மாணவிகளால் ஏற்படும் மன அழுத்தம். ஆசிரியர் தமது கதைக்காக பாரதத்தின் சிறந்த மூலக் கூறாகக் கருதப்படும் மனைமாட்சியையே அசைத்துப் பார்க்கிறார். இதற்காக பாலியல் உந்துதலை சற்றுத் தாராளமாகவே விரவியிருக்கிறார். பிரேமா நாராயணன் தமிழ்த் தன்மையை நீக்காமல், வாக்கிய அமைப்புகளை மூலத்தில் இருப்பது போன்றே ஆங்கிலத்தில் தருவதால், அவருடைய மொழிபெயர்ப்புக்கு ஒரு பிரத்யேகத் தன்மை இருக்கிறது.



LOVE AND LOSS - ஜெயகாந்தன்; மொழிபெயர்ப்பு - டாக்டர் கே.எஸ்.சுப்ரமணியன், பக்கம் - 160, ரூ.150

'உன்னைப்போல் ஒருவன்' எனும் தமிழ் தலைப்பில் உள்ள கூர்மை, ஆங்கிலத்தின் Love and Loss (காதலும் இழப்பும்) என்பதில் இல்லை என்றாலும், மூலத்தின் கூறுகள் சற்றும் சிதையாமல் மொழி பெயர்ப்பு அமைந்துவிட்டது. நடுத்தர வர்க்கம் அல்லது சரித்திரப் புத்தகமே நாவலாசிரியர்களின் கையில் சிக்கியிருந்த போது, கட்டுமானப் பணியாளர்களை வைத்து யதார்த்தமான ஒரு நாவலை ஜெயகாந்தன் எழுதினார். தமிழ் ஆசிரியரின் உள்ளத்தில் தானும் சற்று அமர்ந்து தங்கம், தொரைக்கண்ணு, சிட்டி, மாணிக்கம், அலமேலு என்று அனைவரையுமே டாக்டர் சுப்பிரமணியம் கண்காணித்திருப்பது போல் ஆங்கிலம் சரளமான நடையில் அமைந்திருக்கிறது. நாவலை ஒரே வீச்சில் படித்துவிட்டு, மீண்டும் படிக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது ஆங்கில ஆக்கம்.









KRISHNA KRISHNA - இந்திரா பார்த்தசாரதி, பக்கம் - 248, ரூ.200/-

இந்திரா பார்த்தசாரதியின் 'கிருஷ்ண கிருஷ்ணா' தமிழ் மூலத்தைவிட சிறப்பாக





நம் நெஞ்சில் எதிரொலிக்கிறது. இந்த ஆங்கிலப் பெயர்ப்பில் ஆசிரியரின் ஜதி (rhythm) இணைந்திருப்பதனால் இது நேர்ந்திருக்கலாம். தமிழ் மூலத்தில் ஆங்காங்கே kill -joy, yours truly என்று பல ஆங்கிலச் சொற்கள் விரவிக் கிடக்கின்றன. அதனால் கிருஷ்ணா கிருஷ்ண மனத்துக்குள் முதலில் ஆங்கிலத்தில் கோக்கப்பட்டு, பின் தமிழில் எழுதப்பட்டதோ என்று தோன்றுகிறது.

மகாபாரதம் அனைத்தையும் சுருக்கி, ஆசிரியரின் அனுபவங்களையும் சேர்த்து, கண்ணன் கதையை முன் வைத்து எழுதப்பட்ட இந்நாவலில் இராதையும் வருகிறாள்... கிழவியாக. கண்ணன் தானே காலம் (காலோஸ்மி) என்றான். அந்தக் காலம் மூப்பைத் தருகிறது. காலம் தரும் முதுமைக் கோலமே இங்கு ஜரா எனும் வேடனாக உருவம் பெறுகிறது. மனிதர்கள் இறந்து போகிறார்கள். பூமியில் நிலைத்தவர்கள் யாருமில்லை என்றாலும், அவர்கள் செய்த நன்மையும் தீமையும் நிலைத்து விடுகின்றன. கண்ணனும் ஜராவின் அம்பை ஒரு காரணமாக நமக்குக் காட்டிவிட்டுக் கதையில் மறைந்து போகிறான்.


STAR - CROSSED - அசோகமித்திரன்; மொழி பெயர்ப்பு - வி.ராம்நாராயண், பக்கம் - *144*, ரூ.*150/-*

அசோகமித்திரன் என்றால் வெள்ளித் திரைதான் மனத்தில் தோன்றும். 'கரைந்த நிழல்கள்' நூலின் பிசிறில்லாத மொழிபெயர்ப்பு, Star - Crossed அசோகமித்திரனின் எழுத்துப் பாணி, வி.ராம் நாராயணனின் . வேலையை மிகவும் எளிதாக்கிவிட்டது. சிறு சிறு வாக்கியங்கள் என்பதால் சுறுசுறுப்பாக, மூலமே ஆங்கிலம் என்பதுபோல் அமைந்திருக்கிறது. தமிழுலக வெள்ளித் திரையின் வேதனைகளை, வெறுப்புகளை அசோகமித்திரன் தமிழில் உயிர்ப்புடன் எழுதி வைத்தாரென்றால், 'இந்திய சினிமாவைப் பற்றிய கச்சிதமான நாவல் வேண்டுமா, Star-Crossed-ஐ எடுத்துக் கொள்ளுங்கள்' என்னுமளவு நன்கு வாய்த்திருக்கிறது.



– பிரேமா நந்தகுமார்

அனைத்து புத்தகங்களும்
வெளியீடு :
நியூ ஹரைஸன் மீடியா (பி)லிட்,
33/15, எல்டாம்ஸ் சாலை,
சென்னை - 18





பிரமாண்ட சோகம்!



''அந்தப் பேச்சாளரை ஏன் கட்சியிலிருந்து நீக்கிட்டாங்க?''

''தலைமை எதிர்பார்க்கற அளவுக்கு அவர் கன்னியக் குறைவாய் பேசலையாம்.''

– விலாஜி



''எதிரி மன்னனுடன் போர் அடுத்த மாதம்தானே தொடங்குகிறது... அதற்குள் ஏன் மன்னா அவன் நாட்டுக்குச் சென்று அங்கிருந்து ஓடி வருகிறீர்கள்?''

''இது சோதனை ஓட்டம் அமைச்சரே...''

– கே.ஆனந்தன்



''அடுத்து ஒரு சோகக் காட்சி... ஆனா பிரம்மாண்டமா எடுக்கறோம்!''

''என்ன சார் சொல்றீங்க?''

''கல்யாண ஸீன் ஷூட் பண்ணப் போறோம்யா!''

– தஞ்சை ராகவ்.மகேஷ்



''அரசே... எதிரி மன்னன் பெரும் படையுடன் வந்துகொண்டிருக்கிறானாம்...''

''அதற்கேன் அமைச்சரே ஏதோ மகாராணியே வருவதுபோல இப்படி பயப்படுகிறீர்கள்?''

– கே.ஆனந்தன்

ஜீவாவோடு கம்பேர் பண்ணாதீங்க!

‘‘என்னோட ஒவ்வொரு படத்தையுமே முதல் படம் மாதிரிதான் பயபக்தியோடு பண்றேன். எல்லா படத்துக்கும் ஒரே மாதிரியான உழைப்பைத்தான் தர்றேன். சில காரணங்களுக்காக சில படங்கள் ஓடுது; சில காரணங்களுக்காக சில படங்கள் ஓடறதில்ல. எதுவுமே நம்ம கைல இல்ல; ரசிகர்கள்கிட்டதான் இருக்கு. அவங்களுக்குப் பிடிச்ச மாதிரி படம் எடுத்துட்டா போதும். இப்போ நான் நடிச்சிட்டிருக்குற 'புலி வருது' படம்கூட ரசிகர்கள் ஆராதிக்கற மாதிரியான படம்தான். கதாநாயகனோட ஒரு கனவைச் சுத்தி நடக்கற கதை. 'கனவு கனவுதான் அது நிஜமல்ல'ங்கறதுதான் படத்தோட மையக்கரு. நல்ல நகைச்சுவைப் படமா ரெடியாயிட்டிருக்கு. நானும் கருணாஸும் வித்தியாசமா பல விஷயங்கள ட்ரை பண்ணியிருக்கோம். வி.வி.குமார்னு புது டைரக்டர். ஒவ்வொரு சீனையும் பரபரப்பாக நகர்த்துறார்.


தம்பி ஜீவாவோட என்னை கம்பேர் பண்றது தப்பு. நான் என் வழில

ஜெயம் ரவியை மட்டும்தான் இயக்குவேனா?

–எம்.ராஜா

‘‘தெரிந்தோ தெரியாமலோ இப்படித்தான் பலரும் என்னைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். ஆனால், அது உண்மையில்லை. எல்லா ஹீரோக்களையும் வைத்துப் படம் பண்ணத் தயாராகவே இருக்கிறேன். அதேபோல் எங்களது சொந்த நிறுவனமான ஜெயம் கம்பெனிக்கு மட்டும்தான் படம் பண்ணுவேன் என்பதும் சரியான கருத்தல்ல. இப்போது நான் இயக்கும் 'சந்தோஷ் சுப்ரமணியம்' படத்தைத் 'திருட்டுப் பயலே' தயாரிப்பாளர் அகோரம்தான் தயாரிக்கிறார். இதில் ஜெயம் ரவிதான் நாயகன். ஜெனீலியா ஹீரோயின். தெலுங்கில் சூப்பர் ஹிட்டான 'பொம்மரிலு'வைத் தமிழுக்குக் கொண்டு வருகிறோம். அப்பா - மகன் உறவை இந்தப் படத்தைவிடச் சிறப்பாக வேறு எதிலும் சித்திரித்ததில்லை.

என்னையும் பலர் சினிமாவில் நடிக்க அழைக்கிறார்கள். எனக்கு அதில் விருப்பமில்லை. இயக்கம்தான் என் தொழில். அதைச் சிரத்தையாகச் செய்தாலே போதும். எங்களது சொந்த நிறுவனங்கள் மூலம் வேறு இயக்குநர்களைக் கொண்டு படமெடுக்கும் திட்டம் வைத்திருக்கிறோம். இப்போதைய எங்களின் தேவை நல்ல கதைகள்தான்!’’






ஜித்தன் ரமேஷ்

போறேன்; அவர் பாதைல அவர் போறார். ரெண்டு பேருக்குமே நல்ல படங்களைக் கொடுக்கணும்ங்கறதுதான் லட்சியம். ஓட்டப்பந்தயத்துல ரெண்டு பேரும் முன்னே பின்னே வரலாம். வெற்றிக்குத் தொடர்ந்து முயற்சி பண்ணணும். அதுதான் முக்கியம்!''




''இதுதாண்டா போலீஸ், எவனா இருந்தா எனக்கென்ன போன்ற படங்களைத் தமிழ் ரசிகர்கள் மறந்திருக்க வாய்ப்பில்லை. அடிப்படையில தெலுங்கு நடிகரா நான் இருந்தாலும் இந்தப் படங்கள்ல நடிச்சதன் மூலம் ஏராளமான தமிழ் ரசிகர்கள் எனக்குக் கிடைச்சாங்க. நீண்ட இடைவேளைக்குப் பிறகு மறுபடியும் 'உடம்பு எப்படியிருக்கு'ங்கற படம் மூலமா அவங்களைத் திருப்திபடுத்த வரேன். முந்தைய படங்கள் மாதிரி இதுவும் தெலுங்கிலிருந்து தமிழுக்கு வருது. இராணுவ வீரரா, நாட்டுக்காக உழைக்கும் நம்பிக்கை நாயகனா நடிச்சிருக்கேன். என் மனைவி ஜீவிதாதான் இந்தப் படத்தை டைரக்ட் பண்றாங்க. ஏற்கெனவே தமிழல வந்த 'சேது' படத்தை, நான் நடிக்கத் தெலுங்குல, 'சேவி'ங்கற பேர்ல அவங்க டைரக்ட் பண்ணி வெளியிட, சூப்பர்ஹிட்டாச்சு. 'உடம்பு எப்படியிருக்கு' படத்தையும் வெற்றி பெற வைக்கணும்ங்கற வெறில வேலை செங்சுட்டிருக்காங்க. என்னோட பலமே என் மனைவியும் ரசிகர்களும்தான் ''



மறுபடியும் தமிழுக்கு வர்றேன்!

நாங்களும் கம்யூனிஸ்ட்தான்!



கம்யூனிஸ்ட்களை உங்களில் எத்தனை பேருக்குப் பிடிக்கும்? அட என்னங்க! விலைவாசி உயர்வென்றால் போராடுவதற்கு வேறு நாதி! கம்யூனிஸ்ட்கள் இல்லையென்றால் நமது ஜனநாயகம் கலகலத்துப் போய்விடாதா! வஞ்சகம் இல்லாமல் வாஞ்சையோடு அவர்களைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகிற ரகமா நீங்கள்! அப்படி என்றால் சிறுநீரகமாகிய எங்களையும் நிச்சயம் நேசிக்கிறீர்கள் என்று அர்த்தம். கம்யூனிஸ்ட்களில் இடதுசாரி, வலதுசாரி என இரண்டு பிரிவினர் உண்டு. ஆனால், அவர்களின் நோக்கம் ஒன்றுதான். நாங்களும்கூட இடது, வலது என இடுப்புக்குழியின் இருபுறங்களிலும் இடம் பெற்றிருக்கிறோம். ஏற்றத் தாழ்வு இல்லாத மனித சமூகம் வேண்டும் என்பது கம்யூனிஸ்டுகளின் நோக்கம்; மனித உடலில் உள்ள தண்ணீரின் அளவை ஏற்றத் தாழ்வின்றி எப்போதும் சமமாக வைத்திருக்க வேண்டும் என்பதுதான் எங்களின் முக்கிய நோக்கம்!

சமதர்ம சமூகம் கிடைக்கப் பொதுவாழ்வைச் சுத்திகரிக்க வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்ட்கள் தங்களை முன் மாதிரியாக முதலில் வருத்திக் கொள்கிறார்கள். மனித உடல் நோய்நொடி இன்றி இயங்க இருபத்து நான்கு மணி நேரமும் இடைவிடாமல் இரத்தச் சுத்தி கரிப்பு செய்கிறோம் நாங்கள்! கம்யூனிஸ்ட்களுக்கு சிவப்பு நிறம்தான் ஆன்மா; எங்களுக்கும் சிவப்பு நிற ரத்தமே ஆன்மா. கம்யூனிஸ்ட்கள் தொழிலாளர் வர்க்கமென்றால், நாங்கள் மனித உடலின் தொழிலாளர் வர்க்கம். கடைசிவரை பொறுமையாகக் காத்திருந்து, முடியாத கட்டம் வரும்போது வேலை நிறுத்தம் செய்கிற கம்யூனிஸ்ட்களின் குணத்தை எங்களிடமும் பார்க்கலாம். 'போதும் மிஸ்டர் கிட்னி காம்ரேட்! விட்டால் எங்களையும் கம்யூனிஸ்ட் ஆக்கிவிடுவீர்கள் போலிருக்கிறதே' என்று செல்லமாக நீங்கள் கடிந்துகொள்வது காதில் விழுகிறது. இதோ எனது தோற்றத்தைப் பற்றி, எளிமையாகச் சொல்லிவிடுகிறேன்.

இதயத்திலிருந்து தொடங்கும் அயோட்டா எனும் இரத்தக் குழாயின் இருபுறமும் அவரை விதை வடிவில்



2

சீக்ரெட் ஆஃப் சிறுநீரகம்

அமைந்திருக்கிறோம். வயிற்றின் பின் பகுதியில், விலா எலும்புக்குக் கீழே உங்களது கைகளை ஒருகணம் வையுங்கள். இப்போது உங்கள் கைகள் தொட்டுக்கொண்டிருக்கும் இடத்தில்தான் எங்களின் இரட்டை தர்பார். எங்கள் இருவரில் வலப்புறத்தில் இருக்கும் சிறுநீரகம் சற்றுத் தாழ்ந்த நிலையில் இருக்கும். வலப்புறம் கல்லீரல் (Liver) அமைந்துள்ளதால் இறைவனே ஏற்படுத்திக் கொடுத்த இறக்கம் இது. எங்கள் ஒவ்வொருவருக்கும் தலா எவ்வளவு எடை? சுமார் 150 கிராம் என்பதுதான் சரியான விடை. 11.செ.மீ, உயரம், 3 செ.மீ நீளம், 5 செ.மீ பருமன். பார்க்க அவரை விதையைப் போல என்று மருத்துவர்கள் பரம்பரையாக வர்ணித்து வந்தாலும், இரண்டு செந்நிறக் காளான்களைப் பக்கவாட்டில் சாய்த்துப் பிடித்திருப்பதைப் போன்ற தோற்றம் என்பதே சரி.

உலகின் புகழ்பெற்ற தலைவர்கள் பலர் ஸ்டைலுக்காக தொப்பி அணிந்திருந்ததை வரலாறு சொல்லும். சர்ச்சில், ரீகன், ஏன் நம்ம எம்.ஜி.ஆரின் தொப்பி அவ்வளவு அழகு! இதைவிட அழகானது நாங்கள் அணிந்திருக்கும் அட்ரினல் தொப்பி. எங்களுக்கு மகுடம் சூட்டியதுபோல மஞ்சள் நிறத்தில் இருப்பதுதான் அட்ரீனல் (Adrenal) சுரப்பி. இதை ஏதோ ஸ்டைலுக்காகப் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்காதீர்கள். ஒருவர் ஆணா இல்லை பெண்ணா என்பதைத் தீர்மானிக்கும் ஸ்டீராய்டு ஹார்மோன்கள் உற்பத்தியாவது இந்த அட்ரீனல் சுரப்பியிலிருந்துதான்.

அடுத்து எங்கள் இருவரையும் விலையுயர்ந்த குஷன் சோபாவில் உட்கார வைத்ததுபோல, எங்களைச் சுற்றிப் போர்த்தப்பட்டிருக்கும் ஜவ்வின் பெயர் என்ன தெரியுமா? ஜெராட்பேசியா (Gerat - Fascia). இந்த ஜவ்வை,





பகத்சிங்

ராஜ துரோக குற்றத்துக்குத் தூக்குத் தண்டனை! பகத் சிங், ராஜகுரு, சுகதேவ் என்ற மூன்று இளைஞர்களும் லண்டனில் ப்ரிவி கவுன்சிலிடம் மனு செய்து, தண்டனைக் குறைப்பு வேண்டியுள்ளனர். அப்போது இந்தியாவிலிருந்து சில ஆங்கிலேய விஷமிகள், "பகத்சிங் தூக்குக்குப் பயந்து லண்டனுக்கு அப்பீல் செய்துள்ளான்!" என்று கேலி பேசினார்கள்.

"நான் தூக்குத் தண்டனைக்குப் பயந்தவனல்ல... இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிராகச் சுதந்தரப் போராட்டம் வலுவடைந்து வருவதை லண்டனிலுள்ள ஆங்கிலேயர்களும் அறியட்டும் என்றே மனு செய்திருக்கிறோம்..." என்று பதில் கூறினார் பகத்சிங். "எங்கள் பாரதம் சுயராஜ்யம் பெற, எங்கள் உயிர்களைப் பலியிட என்றுமே நாங்கள் தயார். நான் இறைவனிடம் பிரார்த்திப்பது யாதெனில், தாய்நாடு பாரதம் சுதந்தரம் அடைந்து மகிழும் சமயத்தில் நான் மீண்டும் இங்கேயே பிறந்து என் சேவைகளைத் தொடர வேண்டும் என்பதுதான்..." என்றார் பகத்சிங்.



வைரவிழா சிந்தனை...

கொழுப்புப் படலம் வலைபோலச் சுற்றிச் சூழ்ந்திருக்கும். நீங்கள் ஓடும்போதோ, நடக்கும்போதோ, குதிக்கும்போதோ என்னை ஆடவிடாமல் பாதுகாப்பாகப் பிடித்துக்கொள்ளும் பாடிகாட்ஸ்தான் இந்த ஜெராட்பேசியா ஜவ்வும் கொழுப்பு வலையும். வெளிப்புறத்தில் என்னைப் பாதுகாக்க இந்த இரண்டு தடியர்கள் போதாதென்று பொடியர்களும் அதிகமுண்டு. என்னைச் சுற்றிச் சூழ்ந்து நிறைய நரம்புகள். இந்த நரம்புகளுக்கு இடையில் லிம் நோட் (Lymph node) என்று பெயர் சூட்டிக்கொண்ட சிறுசிறு கழலைக் கட்டிகள் சூழ்ந்துகொண்டு என்னைத் தூக்கிப் பிடித்திருக்கிறார்கள்.

இத்தனைபேர் வெளிப்புறத்தில் எனக்கு ஆதரவு தந்தாலும் என் உள்ளே நீங்கள் காலடி வைத்து எட்டிப் பார்க்க விரும்பினால் அதற்கு, ஒரே ஒரு நுழைவு வாயில்தான்! அதன் பெயர் அயிலம் (hilum). இதயத்திலிருந்து நேரடியாக அயோர்ட்டா இரத்தக் குழாயின் மூலம் பயணப்பட்டு வரும் இருபது சதவிகித இரத்தம், இந்த அயிலம் வழியாகத்தான் என் உள்ளே புதுவெள்ளம் போல பாய்ந்து வருகிறது. ஒரு நிமிடத்துக்கு இருபது சதவிகித இரத்தம் என்றால் ஒரு நாளைக்கு 180 லிட்டர் ரத்தம் என்னுள்ளே பாய்கிறது! ஆமாம் நம்புங்கள்; வேறு எந்த உறுப்புக்கும் இவ்வளவு அதிகமான இரத்தம் வருவதில்லை. இரத்தம் மட்டுமா என்னுள்ளே வருகிறது! அட்ரீனல் ஹார்மோன்கள், லிம்பாட்டிக் திரவம் அப்புறம் முக்கியமாக மின்சார சிக்னல் (Electric Signal) என்று, கேள்விகள் கேட்காமல் உள்ளே உரிமையோடு வருகிற வஸ்தாது வஸ்துக்களை ஒரு பட்டியலே போடலாம்.


அய்யோ! உங்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதே எனக்குள் நிறைய இரத்தத்தை அனுப்பி வைத்துவிட்டது இதயம்! இரத்தத்தை நான் எப்படி சுத்திகரிக்கிறேன் என்பதை உள்ளே வந்து பாருங்கள். பாவம் ராம்...! அவருக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உந்துதலைத் தர வேண்டிய இக்கட்டில் வேறு இயங்கிக் கொண்டிருக்கிறேன்.

(பேசுவேன்)

அருள்வாக்கு

‘மனிதர்களுக்குச் சேவை செய்வதே பகவானுக்குச் செய்கிற பூஜை. தனியாக பகவத் தியானம், பூஜை எதுவும் வேண்டாம்’ என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கோயில்கள் முதலிய வழிபாட்டு இடங்கள் வேண்டியதில்லை என்றும், அவற்றை வைத்திய சாலைகளாகவும் பள்ளிக்கூடங்களாகவும் மாற்றிவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள். மனிதர்களுக்கு ஆறுதல் தருவது, நோய்ப் பிணி போக்குவது, கல்வியறிவு தருவது எல்லாம் பரம உத்தமப் பணிதான். அதில் பகவான் நிச்சயமாகப் ப்ரீதி அடைகிறான் என்பதும் ரொம்ப உண்மைதான். ஆனால், யோசித்துப் பார்க்கும்போது ‘மனித சேவையே பகவத் சேவை’ என்பதையே திருப்பி வைத்துச் சொல்வதும் ரொம்ப உண்மை என்று தெரிகிறது. அதாவது பகவத் சேவை செய்வதும் மனிதர்களின் நன்மைக்காகத்தான் என்று தெரிகிறது. அதுவே மற்ற சமூக சேவைகளைவிட மனிதனுக்கு நிரந்தர நலனைத் தருவதுமாகும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



நிரந்தர நலன்!

மேஷம்: மனமகிழ்ச்சி உண்டாகும். நீண்டநாள் கவலைகள் விலகும். சுபச் செலவு கைகூடும். உடல் ஆரோக்கியம் சீராகும். வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

ரிஷபம்: திருமண காரியம் கைகூடும். மனத்துக்கு இனிய சம்பவங்கள் நடக்கும். வீடு,மனை வாங்க நல்ல காலம். கொடுக்கல், வாங்கல் நல்ல பலனை அளிக்கும். வேலைப் பளு அதிகரிக்கும். சனி/ராகு/கேது வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

மிதுனம்: உடல் ஆரோக்கியம் பாதிக்காது. மறைமுக எதிர்ப்பு/தொல்லைகள் இருக்கும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். புதிய தொழில் துவங்கினால், நல்ல பலன் கிட்டும். குரு வழிபாடு செய்துவர, நற்பலன் மிகுதி ஆகும்.

கடகம்: நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். கொடுக்கல், வாங்கல் கவனம் செலுத்தவும். மறைமுக எதிர்ப்பு/தொல்லை இருக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

சிம்மம்: வீடு மாற்றம், தொழில் மாற்றம் உண்டாகும். கல்வியில் முன்னேற்றம் கிட்டும். மனச்சலனம் தீரும். கணவர், நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். பொறுப்பான பதவி வந்து சேரும். ராகு/சனி/குரு/சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

கன்னி: மனக் குழப்பம் தீரும். கல்வியில் முன்னேற்றம் காண்பிக்கும். எதிர்ப்பு/தொல்லை விலகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். வீடு மாற்றம் ஏற்படும். சனி/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

துலாம்: வீடு/மனை மூலம் ஆதாயம் கிட்டும். புதிய தொழில் துவங்க சிறப்பான வாரம்.



இந்த வருசமாவது வெள்ளாம நல்லா இருக்குமான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்க சாமி!

நடக்குமென்பார்; நடக்கும்!



வராத நிலுவை வசூலாகும். கல்வி வளம் மேலோங்கும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. ராகு/கேது வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: வேலைப்பளு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும்.சிலருக்குப் பதவி உயர்வு தேடி வரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய வேலைவாய்ப்புத் தேடி வரும்.ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்து வர, நற்பலன் மிகுதி ஆகும்.

தனுசு: நீண்ட நாளைய கஷ்டங்கள் தீரும். உடல்நிலை நன்றாக இருக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். உயர் பதவிகள் தேடி வரும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். குரு வழிபாடு செய்து வர, நற்பலன் கிட்டும்.

மகரம்: வீடு/மனை வழியில் ஆதாயம் கிட்டும். பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் கவனமாகச் செயல்படவும். வழக்கு இழுபறியாக நேரிடும். வியாபாரத்தில் அபிவிருத்தி இருக்கும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

கும்பம்: மனக்குழப்பம் தீரும். வேலைப்பளு அதிகரிக்கும். நீண்ட நாள் வராத பணம் கைக்கு வந்து சேரும். நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். ராகு/கேது/சனி/குரு வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

பரத்வாஜ் பதில்கள்

கிருஷ்ணமூர்த்தி, நவிமும்பை

என் மூத்த மகனுக்குக் குழந்தை பாக்கியம் உண்டா? எப்போது குழந்தை பிறக்கும்?

தம்பதிக்கு காலசக்கர தசைகள் சரிவர நடக்காததால் மகப்பேறு பாக்கியம் தள்ளிப்போய் உள்ளது. 2007ல் மகப்பேறு பாக்கியத்துக்கு உறுதியாக வாய்ப்பு உள்ளது.

என் இரண்டாவது மகனுக்குத் தொழில், திருமண வாழ்க்கை எப்படி அமையும்?

சனி தசை ராகுவுக்கு நடக்கிறது. நல்ல இல்லற வாழ்வு அமையும். நல்ல படித்த, பண்பான பெண் அமைவாள். திருமணம் ஆன பிறகு நல்ல முன்னேற்றம் கிட்டும்.

மீனம்: தடை விலகித் திருமணம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு/மனை வாங்க ஏற்ற காலம். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி கிட்டும். கணவன் -மனைவி உறவு நன்றாக இருக்கும்.

5.8.07 முதல் 11.8.07 வரை



பெண்கள் விற்பனைக்கு!

மருதன்

நஷீர் முகமது அவஸ்தையில் நெளிந்து கொண்டிருந்தார். பொட்டுத் தூக்கமில்லை. பசியில்லை. நிம்மதியில்லை. வீட்டைவிட்டு வெளியில் வர முடியவில்லை. வீட்டில் அடைந்து கிடப்பதும் சாத்தியமில்லை. மனைவியிடம், மகளிடம் பேசிப் பல நாட்களாகின்றன. மகள்... ஆ... அவளை நினைத்தாலே அடிவயிற்றில் ஏதோ பிசைகிறதே! கறுப்புப் பர்தாவை தலைக்கு மேலே போர்த்தியபடி மலியா கடந்து செல்லும்போது, அவள் கண்களைச் சந்திப்பதை மிகக் கவனமாகத் தவிர்த்துக் கொண்டிருக்கிறார் நஷீர் முகமது.

வீட்டு வாசலில் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பழுப்பு நிற ஆட்டை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் நஷீர். ம்மேமம! சன்னமாகக் குரல் எழுப்பிக் கத்தியது அந்த ஆடு. ஒருவேளை இந்த ஆட்டை வாங்காமல் இருந்திருந்தால் நிம்மதியாக இருந்திருக்க முடியுமோ...

காலை காஃபி முதல் ராத்திரி சப்பாத்தி வரை அத்தனைக்கும் கடன் வாங்கித்தான் பிழைப்பு நடத்த முடிகிறது. வேலையே இல்லை. யாராவது சிரித்துப் பேசிவிட்டால், அவரிடம் இளித்தபடி கைநீட்டிவிடுவது. அன்றைய சப்பாத்திக்குக் கவலையில்லை. ஆனால் என்ன, வட்டி குட்டி போடும். அந்தக் குட்டிக்கு வட்டி போடுவார்கள். மீளா துயரம். என்ன செய்ய?

ஆடு வாங்கலாம் என்று ஒருநாள் துணிந்து முடிவு செய்தார் நஷீர். பைஜாமா குர்தா அணிந்த அந்த உயரமான நபரிடம் சென்று பேசினார். ஊரில் பெரிய புள்ளி. நிறைய பேருக்குக் கடன் கொடுத்திருக்கிறார். ரட்சகன். நஷீரை உட்கார வைத்து ஆயிரம் கேள்விகள் கேட்டார். ஜிப்பாவுக்குத் திருப்தியில்லை. போய் வா என்று சொல்வதற்கு முன்னால் கட்டக் கடைசியாக ஒரு கேள்வியை வீசினார். வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

மென்று விழுங்கிப் பதிலளித்தார் நஷீர். இரண்டு மகள்கள். ஜிப்பாவின் முகம் பிரகாசமடைந்தது. பெயர் என்ன? வயது என்ன? மூத்தவளுக்குப் பதினாறு. இளையவளுக்குப் பத்து. ஜிப்பா நஷீரின் கையைப் பிடித்துக் குலுக்கினார். ஒரு நிமிடம் பொறு. நீ கேட்ட பணத்தை அளிக்கிறேன்.

கொஞ்சம் புத்திசாலியாக இருந்தால் நஷீர் புரிந்துகொண்டிருப்பார். கருங்கியிருந்த அந்த ஜிப்பாவின் முகம் ஏன் திடீரென்று மலர்ந்தது என்று யோசித்திருப்பார். நஷீருக்கு எழுதவோ, படிக்கவோ

தெரியாது. நாட்டு நிலவரம் தெரியாது. அவர் குடியிருக்கும் ஜலலாபாத் பற்றித் தெரியாது. ஆப்கானிஸ்தானைத் தெரியாது.

சந்தோஷமாக பணம் வாங்கிக்கொண்டு சந்தைக்குச் சென்று இதோ, வீட்டு வாசலில் இப்போது அவர் கட்டிப் போட்டிருக்கும் அந்த ஆட்டை வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்.

முதல் சில மாதங்கள் உருப்படியாகத் தவணைத் தொகை செலுத்தினார். அப்புறம் முடியவில்லை. ஒரு மாதம் தள்ளிப் போனது. பிறகு, இரண்டு மாதங்கள். அப்படியே நான்கு மாதங்கள். மறைந்து மறைந்து வாழ்க்கையை நகர்த்தி வந்தார் நஷீர். வீட்டில் யாருக்கும் தெரியாது. எதற்கு அவர்களைக் கஷ்டப்படுத்துவானேன். விட்டுவிட்டார்.

ஆனால், ஜிப்பா ஆசாமி விடவில்லை. நேராக வீட்டுக்கே வந்துவிட்டார். சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டிருந்த நஷீரை இழுத்து வந்து உட்கார வைத்தார். அடிப்பார் அல்லது கத்துவார் என்று தான் நஷீர் நினைத்தார். ஆனால், ஜிப்பா இரண்டையும் செய்யவில்லை.

பேசினார். இதோ பார், நான் உன்னை மிரட்டப் போவதில்லை. நீ ஓர் அன்னக் காவடி. உன்னிடம் தவணை பெற முடியாது என்று எனக்குத் தெரியும். நேராக விஷயத்துக்கு வருகிறேன். உன் மூத்த மகளை (அவள் பெயர் என்ன சொன்னாய்? சரி, ஏதோவென்று) எனக்கு விற்றுவிடு. என் மகனுக்கு ஒரு பெண் தேவைப் படுகிறாள். நீ நயாபைசா கொடுக்க வேண்டாம். கூடுதலாக, உனக்கு ஒன்பது ஆடுகள் தருகிறேன். இத்தோடு சேர்த்துப் பத்து ஆடுகள் பிழைத்துப்போ.

மரியாதையா எழுந்து வெளியே போ என்று நரம்பு முறுக்கேற கத்த முடியாது. காலில் விழுந்து கதற முடியாது. வேறு வழியில்லை. மலியா, என் அன்பு மகளே, போய்வா.

பல்லாயிரக்கணக்கான நஷீர்களால் ஆன தேசம் ஆப்கானிஸ்தான். பல்லாயிரக் கணக்கான ஜிப்பா ஆசாமிகள், பல்லாயிரக் கணக்கான மலியாக்கள். கடனை அடைக்க முடியவில்லையா, உன் பெண்ணை விற்று விடு. அவ்வளவுதான். ஆப்கனில் நடக்கும் ஐந்து திருமணங்களில் இரண்டு மேற்படி முறையில்தான் நடக்கின்றன.

"கடனை அடைக்க முடியவில்லையா, உன் பெண்ணை விற்றுவிடு"

ஆப்கனில் நடக்கும் ஐந்து திருமணங்களில் இரண்டு, மேற்படி முறையில்தான் நடக்கின்றன.


அதிகாரபூர்வமாக இன்று தாலிபன்கள் ஆட்சியில் இல்லை. ஆனாலும், ஆப்கன் இன்னும் மாறவில்லை. குறிப்பாக, ஆப்கன் பெண்கள். பெண் கொடுத்து ஆடு வாங்கலாம். மாடு வாங்கலாம். ஒழுகும் மேற்கூரையைச் சரி செய்யலாம். சில மூட்டை தானியங்கள் வாங்கலாம். பழைய கடன் பாக்கியை ஃபைசல் செய்யலாம். வட்டி அடைக்கலாம். ஏதாவதொரு சண்டையில் யாரையாவது சாகடித்து விட்டீர்களா? பிரச்னையில்லை. கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்துக்கு உங்கள் வீட்டுப் பெண்ணை தானமாக அளித்து




விடலாம். பெண்களை அதிகம் நேசிக்கும் தேசம் ஆப்கன்.

இந்தக் கட்டுரையை நீங்கள் வாசித்து முடிப்பதற்குள் மலியாவுக்குத் திருமணம் நடந்து முடிந்திருக்கும். ○


சி.ஐ.டி. விஷ்வா
துப்பறியும்
இறந்தவளைத் தேடு!
கமிஷனர் தொடர்ந்தார்...
கொலைகாரன் மூர்த்தி உயிருடன்தான் இருக்கணும்னு முக்கியமான ஒரு நபருக்குச் சந்தேகம்...
அப்போ...
... தண்ணி லாரில நசுங்கியது...?
கண்டு பிடிக்கணும்...
அது தன் கணவர்தானா இல்லையான்னு அவன் மனைவி ஐடெண்டிஃபை பண்ணியிருப் பாங்களே...?
ஐ விட்னஸ், பி.எம். ரிப்போர்ட் எல்லாம் க்ளியரா இருக்கே.... எந்த'பாய்ன்ட்'ல சந்தேகம் சொல்லுங்க!
விநோத்தை கேட்டுடுங்க மிஸ்டர் விஷ்வா!



வணக்கம், கொலை செய்யப்பட்ட வேணுவின் தம்பி நான். சம்பவம் நடந்தப்ப வெளிநாட்டிலிருந்தேன். உடனே வர முடியலை.
ஒரு இளைஞன் வந்து...
என்ன இருந்தாலும் மூர்த்தியால ஆபத்து வரும்னு சொன்னேன். என் அண்ணன் அதை ஏத்துக்கலை...
மூர்த்தியும் செத்துட்டான்னதும் ஓர் ஆறுதல்தான். ஆனால்...


... தற்செயலா அருணாவைப் பார்த்தேன்- சுமங்கலி கோலத்ல...
...வீடு தேடிப் போனேன்... அப்பவே காலி பண்ணிட்டு அவள் வடநாட்டுக்குப் போயிட்டதா சொன்னாங்க...
பொய் சொல்லிட்டு சென்னையிலேயே இருக்க வேண்டிய அவசியம்?
ரெண்டாவது கல்யாணம் பண்ணியிருக்கலாமில்லையா?


மோசமான புருஷன்னாலும் அவன் மேல் அவளுக்கு உயிர்...
மூர்த்தி ஏதோ சதித் திட்டத்தில் இறங்கி, அது தெரியப் போய்தான் அண்ணனைக் கொலை செய்திருக்கான். அவன் உயிரோடு இருக்கும் பட்சத்தில் நாட்டுக்கே ஆபத்துதான்!
தீர்மானத்துக்கு வருமுன், ஒரு கொலையும் ஒரு விபத்தும் பண்ணிப் பார்க்கணும் போலிருக்கே!
தொடரும்.

வாரம் ஒரு பாசுரம் 43

சுஜாதா



மிஞ்சிய புகழ்!

உலப்பு என்றால் முடிவு. புரைப்பு என்றால் உவமை, ஒப்பிடுதல். இவ்விரண்டு சொற்களையும் நம்மாழ்வார் திருவாய்மொழியில் நளினமாகப் பயன்படுத்துகிறார்.

'உரைக்க வல்லேன் அல்லேன்; உன்
உலப்பு இல் கீர்த்திவெள்ளத்தின்
கரைக்கண் என்று செல்வன், நான்?
காதல் மையல் ஏறினேன்;
புரைப்பு இலாத பரம்பரனே!
பொய் இலாத பரஞ்சுடரே!
இரைத்து நல்ல மேன்மக்கள்
ஏத்த, யானும் ஏத்தினேன்'

'என்'னால் சொல்ல முடியவில்லை. உன் முடிவில்லாத கீர்த்தி வெள்ளத்தின் எல்லையை என்னால் என்றைக்கு அடைய முடியும்? உன் மேல் காதல் மயக்கமுற்றேன். ஒப்பில்லாத தெய்வமே! பொய் இல்லாத தெய்வச்சுடரே! தேவர்கள் உன்னைப் புகழ நானும் புகழ்ந்தேன்.

'ஏத்துதல்' என்ற சொல்லை தோத்திரம் செய்தல் என்ற பொருளில் ஆழ்வார் பலவிதங்களில் பயன்படுத்துகிறார். 'யானும் ஏத்தி ஏழ் உலகும் முற்றும் ஏத்தி பின்னையும் தானும் ஏத்திலும் தன்னை ஏத்த ஏத்த எங்கு எய்தும்...' என்னும்போது 'உன்'னை நானும் புகழ்ந்து, உலகம் முழுவதும் புகழ்ந்து, அதற்கு மேலும் புகழ்ந்தாலும் உன்னை எப்படி எய்த முடியும்? என்று வியப்படைகிறார்.

எத்தனை வார்த்தைகளில் எத்தனை பேர் புகழ்ந்தாலும் இந்த உலகமே புகழ்ந்தாலும் அவனுடைய புகழ் கொஞ்சம் மிஞ்சியிருக்கும். உலகின் புகழ் வார்த்தைகள் அத்தனையுமே போதாது.

கடவுளை மனிதனால் முற்றும் புகழ முடிந்தால், அது கடவுள் அல்ல என்பதே இதன் நோக்கம்.

(படிக்கலாம்)



வித்தியாசத்தின் விளைநிலம்!

இன்றும் தம்முடைய குருநாதரின் மீது மாறாத பாசம் கொண்ட பார்த்திபனைக் காணும்போது பெருமையாக இருக்கிறது.

- இதயா ஏகராஜ், கல்லக்குடி

பார்த்திபன் தொடரில் எழுத்தாளரின் ஆளுமை இயல்பாகவே ஊடாடியது. எதையும் ரசனையாக அவர் சொல்லி வந்திருப்பது வாசகர்களைக் கட்டிப்போட்டது.

- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்

வித்தியாசத்தின் விளைநிலமான ஜிகினாவை 16 வாரங்களாகப் பார்த்தேன்; படித்தேன்; ரசித்தேன். நிகழ்வுகளை மனதில் பதியுமாறு கூறி இருந்த நடையழகு... அருமை.

- என்.சண்முகம், திருவண்ணாமலை

பதினாறு வாரங்களாக மின்னிய ஜிகினாவில் சினிமாவுக்குள் இருக்கும் விஷயங்களைத் தமது அனுபவங்கள் மூலம் அழகாய்ச் சொல்லியிருந்தார்.

- ஆர்.ராஜலட்சுமி, வண்டிமேடு

பார்த்திபன் தமது உள்ளக் கிடங்கிலிருந்த சோகங்கள், மன நிறைவுகள், நன்றி உணர்வுகளைப் பதினாறு வாரங்களாகத் தமக்கேயுரிய பாணியில் மின்னச் செய்திருந்தார்.

- சங்கர், திருப்பரங்குன்றம்

நேற்று வரை

இன்னும் அதிகமாகக் காதலிப்பதைத் தவிர காதலை குணப்படுத்த வேறு வழி இல்லை.

– ஹென்றி டேவிட் தோரோ

மகேந்திரன் கை, கால் அலம்பிவிட்டு உள்ளே நுழைய, பவித்ரா சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். டவல் எடுத்து துடைத்துவிட்டு உட்கார்ந்தான்.

''நீ சாப்டியா பவி?''

''ஆச்சுங்க... அம்மா வந்தாங்க. உங்கள கேட்டதா சொல்லச் சொன்னாங்க.''

''உடம்பு பரவால்லையாமா?''

''அதெல்லாம் ஓ.கே. மனசுதான் சரியில்லையாம்.''

''என்னவாம்?''

''வேறென்ன? பேரனோ, பேத்தியோ வேணுமாம்''

''சொல்ல வேண்டியதுதானே...''

''எத்தனவாட்டிங்க சொல்றது? கல்யாணமாயி ஒரு வருஷம்தானேம்மா ஆகுது... இன்னும் கொஞ்சநாள் போகட்டும்னு சொல்லிச் சொல்லி என் வாய் வலிச்சது தான் மிச்சம். சரி அதை விடுங்க, ஆபீஸ்ல என்ன விசேஷம்?''

''விசேஷம்னா?''

''என்னங்க நீங்க... அது நடந்தது பவி, இது நடந்தது பவின்னு தினமும் சொல்லுவீங்கல்ல... அதைக் கேட்டேன்.''

''அதுவா... இன்னைக்கு ஒரு போன் பவி...''

''என்ன போனுங்க... ஏதாச்சும் ராங் காலா?''

''இல்ல... சித்ராகிட்டருந்து போன்.''

''எந்த சித்ரா?''

''என் அத்தை பொண்ணும்மா.''

''ஓ... நீங்ககூட கல்யாணத்துக்கு முன்னாடி உயிருக்குயிரா காதலிச்சதா சொன்னீங்களே... உங்க ரெண்டு பேருக்கும்தானே கல்யாணமாக வேண்டியது... ஏதோ பெரியவங்க பிரச்னையால காதலும் உறவும் முறிஞ்சு போச்சுன்னு சொன்னீங்க... கரெக்ட்தானே?''

''கரெக்ட்... ஞாபகம் வச்சிருக்கியே.''

''ஃபர்ஸ்ட் நைட்ல சொன்னதை எந்தப் பொண்ணும் அவ்வளவு ஈஸியா மறந்துட மாட்டா... சரி, என்னவாம் சித்ராவுக்கு...?''

''அவ நாளைக்குக் காலைல சென்னை வர்றாளாம், ஏதோ எக்ஸாம் விஷயமா. என்னை, உன்னைல்லாம் பாக்கணுமாம். வீட்ல வந்து ஒரு நாள் தங்கணுமாம்... என்னென்னவோ பேசினா.''

''சண்டைதானே உங்க ரெண்டு பேருக்



கும்... எப்படிப் பேசினா?''

''பெத்தவங்க பேச்சைக் கேட்டுக்கிட்டு என்னை உதறிட்டான்னு நானும், அப்பா - அம்மா சொல் கேட்டு நான் விலகிட்டதா அவளும் நினைச்சுக் கிட்டு இருந்திருக்கோம். ஆனா, போன்ல மனசு விட்டுப் பேசினா. அப்பத்தான் புரிஞ்சது ரெண்டு பேர் மேலயும் தப்பில்ல... குடும்பங்கள் செஞ்ச சூழ்ச்சின்னு...''

''இப்ப ஏண்டா என்னைக் கல்யாணம் பண்ணோம்னு தோணு தாங்க?''


''ச்சே ச்சே... என்ன பவி பேசறே...? நீ கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும். முன்னாள் காதலி பத்தி இந்தளவு உன்கிட்ட பேசறேன்னா, உன் விசாலமான மனசுதான் காரணம். என்னை சந்தேகப்படாத, ப்ளீஸ்.''

''ஐயையோ... நான் சந்தேகப்பட லைங்க... ச்சும்மா விளையாட்டுக்குக் கேட் டேன்... சரி, சித்ராவ காலைல போய் கூட்டிட்டு வாங்க... எங்க கோயம்பேடா, எக்மோரா?''

மு.மாறன்

காதல்!

காதல் பொன்மொழிக் கதை-2



''ரெண்டும் இல்ல... சென்ட்ரல்.''

''அப்புறம், எனக்கொரு உதவி செய்வீங் களா?''

''என்ன பவி, சொல்லு?''

''சித்ராவுக்குப் பிடிச்ச, பிடிக்காத விஷ யங்கள் எல்லாத்தையும் ஒண்ணுவிடாம என்கிட்ட சொல்லுங்க.''

''எதுக்கு இப்ப இது?''

''வந்து ஒரு நாள் முழுக்கத் தங்கப் போறா... அவளைப் பத்தித் தெரிஞ்சிக் கணும்னு எனக்கு ஆசை இருக்காதா?''

''இருக்கும்தான், சொல்றேன்.''

மறுநாள் காலை வீட்டுக்கு வந்த சித்ராவை வாசலிலேயே காத்திருந்து வர வேற்றாள் பவித்ரா.

''வாவ்! பவித்ரா, யூ லுக் ஸோ ஸ்மார்ட்!''

''அதை நான் சொல்லணும்ங்க சித்ரா!''

இருவரும் தோழிகள்போல பேசிக் கொண்டதைப் பார்த்து மகேந்திரனுக்கு ஆச்சர்யம் தாளவில்லை.

''என்ன இது, வாங்க போங்கன்னுட்டு, மகி சொல்ல மாட்டீங்களா?''

''சரி, வா சித்ரா!'' உரிமையோடு உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்தாள்.

"பேசிட்டிருங்க, குடிக்கக் கொண்டு வரேன்" ஐந்தே நிமிடத்தில் திரும்ப வந்து,

"இந்தா சித்ரா, உனக்குப் பிடிச்ச லெமன் டீ."

"ஐயையோ, எனக்கு லெமன் டீ பிடிக்காதே... காஃபி கொடுத்துடுங்களேன், ப்ளீஸ் பவி..."

சட்டென்று மகேந்திரனைப் பார்த்த பவித்ரா, "ஓகே" என்று கிச்சன் புகுந்து காஃபி தயாரிக்க ஆரம்பித்தாள்.

டைனிங் ஹாலில் சாப்பிட அமர்ந்த போதும் இப்படித்தான் நிகழ்ந்தது. சித்ராவுக்குப் பிடிக்குமென்று பவித்ரா ரவா கிச்சடி செய்து வைத்திருக்க, மகேந்திரனுக்காக வைத்திருந்த இட்லி, வடையைத்தான் சித்ரா விரும்பிச் சாப்பிட்டாள்.

"அப்போ கிச்சடி?" என்றாள் பவி.

"ஸாரிம்மா, எனக்குப் பிடிக்காது."

இப்பவும் பவித்ரா மகேந்திரனைப் பார்க்க, அவன் தர்மசங்கடமாக நெளிந்தான். என்ன நினைத்தானோ, எழுந்து விட்டான்.

"சரி பவி, ஆபீஸுக்கு நேரமாச்சு... நான் கிளம்பறேன். நீ சித்ராவ பார்த்துக்க."

அவன் சென்ற பிறகு வேலையெல்லாம் முடித்துவிட்டு சித்ராவிடம் வந்த பவித்ரா, சட்டென்று கேட்டுவிட்டாள்.

"ஏன் சித்ரா, நீ வர்றன்னு தெரிஞ்சதும் அவர்கிட்ட உனக்கு எதெல்லாம் பிடிக்கும்னு கேட்டுக் கேட்டு செஞ்சிட்டிருக்கேன். ஏன் பிடிக்கல, பிடிக்கலன்னு சட்னு மறுத்துடற?"

"உலகத்துலயே எனக்குப் பிடிச்ச விஷயமா இருந்தது மகிதாங்க சித்ரா. அவரே கிடைக்கலன்னு ஆனதும் என் பிடிச்ச விஷயங்கள்லாம் பிடிக்காதவையா மாறிடுச்சு."

"............"

"என்ன அமைதியாயிட்டீங்க? ஏதாச்சும் நான் தப்பா சொல்லிட்டேனா?"

"ச்சே ச்சே அதில்ல... உனக்குப் பிடிச்ச நிறைய விஷயங்கள் பண்ணிட்டேன். முருங்கக்கா சாம்பார் வச்சிட்டேன், பாஸந்தி பண்ணிருக்கேன், இதயம் படத்தோட டிவிடி கூட வாங்கி வச்சிருக்கேன்."

சித்ரா அவளையே பார்த்தாள். இப்படியொரு அன்பா!

"சரி பவி, உங்களுக்குப் பிடிச்சதையே பண்றேன் கிளம்பற வரைக்கும், போதுமா?"

"தேங்க்ஸ்.. ஆமா, எப்படி இவரைப் போய் லவ் பண்ணீங்க? பார்ட்டி சரியான முசுடு இல்ல."

"அப்படியா இருக்கார் இப்போ? அப்பல்லாம் சரியான கிண்டல் பேர்வழி. வாய் கொடைக்கானல் வரைக்கும் நீளும். என்னைப் பத்தி பேசுவாரா உங்ககிட்ட?"

"எப்பவும் பேச மாட்டார். எப்பவாச்சும். ஆனா உள் மனசுல உன் மேல ரொம்ப அன்பு வச்சிருக்கார்."

"உங்கள மாதிரி வொய்ஃப் கிடைக்க மகி கொடுத்து வச்சிருக்கணும்."

"மகி கிடைக்காததுல உனக்கு வருத்தமில்லையா?"

"நேத்து வரைக்கும் இருந்தது. இப்போ இல்ல."

"ஏன்?"

"நீங்க என்னைவிட அவருக்குப் பொருத்தமா இருக்கீங்க. கணவனோட காதலியையும் காதலிக்கிற அபூர்வ பிறவி."

"ரொம்ப புகழாதம்மா. இதுல சின்ன சுயநலமும் இருக்கு."

"எப்படி?"

"நான் அவர்கிட்ட உன்ன வெறுத்துப் பேசினா, உன்கிட்ட பேசறதையோ, பழகறதையோ ரகசியமா வச்சுக்க நினைக்கலாம். வெளிப்படையா நானே இருந்துட்டா, எதுக்கும் இடம் கொடுக்க வேணாம் பாரு."

"அப்ப என்கிட்ட பேசறதுல நடிப்பும் கலந்திருக்காங்க பவி?"

"ஐய்யோ... நான் வேடிக்கையா பேசி



"ரொம்ப புகழாதம்மா... அதுல ஒரு சின்ன சுயநலமும் இருக்கு!"

“நீங்க என்னைவிட அவருக்குப் பொருத்தமா இருக்கீங்க. கணவனோட காதலியையும் காதலிக்கிற அபூர்வ பிறவி!”



னேன். நீ தப்பா எடுத்துக்காத.''

''மகி உங்களை நல்லா பார்த்துக்கறாரா?''

''ரொம்ப ரொம்ப...''

''என் மேல உள்ள வெறுப்புலதான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. இப்பத்தான் அவருக்குத் தெரியுது என் மேல தப்பு இல்லன்னு... இனி உங்க மேல அன்பு குறைஞ்சா என்ன பண்ணுவீங்க.''

''என் அன்பால அவரை அரவணைப்பேன்.''

''சரி, நான் ஏன் சென்னை வந்தேன் தெரியுமா?''

''ஏன் சித்ரா? எக்ஸாம் எழுதத்தானே.''

''இல்ல பவி, உண்மையைச் சொல்லக் கூடாதுன்னுதான் நினைச்சேன். ஆனா என் மேல் இவ்ளோ பிரியமா இருக்குற உங்ககிட்ட பொய் சொல்லத் தோணல.''

''பீடிகை வேணாம். எதுக்கு வந்தீங்க?''

''மகிதான் வரச் சொன்னார்.''

''அவரா? எதுக்கு?''

''நேத்து நான் போன் பண்ணதெல்லாம் உண்மை. ஆனா சென்னை வரேன்னு சொல்லல. அவர்தான் 'உன்னை நேர்ல பார்த்து சாரி கேக்கணும். என் வீட்டுக்கே வா. நான் பவித்ராகிட்ட எக்ஸாம்னு பேசி சமாளிச்சுக்கறேன்னாரு. நானும் அவரைப் பார்க்கத் துடிச்சிட்டிருந்தேன். கிளம்பி வந்துட்டேன். என்னை மன்னிச்சுடுங்க பவி. தப்பான எண்ணத்தோட வரல. ஜஸ்ட் பார்க்கத்தான் வந்தேன். ஒரு நாள் தங்கிட்டுப் போகச் சொன்னார் மகி. ஆனா உங்க அன்பான மனசுக்கு முன்னால உறுத்தலோட ஒரு நிமிஷம்கூட என்னால இனி இருக்க முடியாது. நீங்க அவர்கிட்ட சொல்லிடுங்க, நான் புறப்படுறேன்.''

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் சித்ரா கிளம்பிவிட்டாள். பவித்ராவுக்கு எதுவும் புரியவில்லை. சித்ரா வந்ததும் போனதும் கனவு மாதிரி இருந்தது.

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த பவித்ரா, செல் ஃபோனை எடுத்தாள்... மறுமுனையில் மகேந்திரன்...

''என்னங்க நான்தான்...''

''சொல்லு பவி... சித்ரா என்ன பண்றா..?''

''ஏன் இப்படிப் பண்ணீங்க?''

''என்ன செஞ்சேன்?''

''சித்ரா போயிட்டாங்க...'' என்று தொடங்கி பவித்ரா அனைத்தையும் சொன்னாள். மகேந்திரனிடம் பேச்சில்லை.

''என்ன மௌனமாயிட்டீங்க?''

''ஸாரிம்மா...''

''நானும் சராசரிப் பொண்ணுதான். என் புருஷன் எனக்கு மட்டும்னு நினைக்கறவதான். ஆரம்பத்துல உங்க மேல கோபம் கோபமா வந்துச்சு. இப்ப கொஞ்சம் குறைஞ்சிருக்கு. சித்ரா மேல உள்ள காதலால நீங்க பண்ணிட்டீங்க. எனக்கு யாரோ ஒரு ராமோ, சோமோ இருந்து நான் இப்படிப் பண்ணியிருந்தா நீங்க சும்மா இருப்பீங்களா?''

''............''

''ஆனா நான் இப்பவும் சும்மாத்தான் இருக்கேன். ஏன்னா சித்ரா உங்களயும் நீங்க சித்ராவையும் லவ் பண்றதவிட அதிகமா நான் உங்கள நேசிக்கிறேன். அதை நீங்க புரிஞ்சுக்கிட்டா போதும். இனிமேயாவது என்கிட்டே எதையும் மறைக்காம இருங்க, என்ன?''

''........''

''சித்ராவுக்கு போன் பண்ணிப் பேசுங்க. குற்ற உணர்ச்சியோட கிளம்பிப் போயிருக்கா. அதை இல்லாமப் பண்ணுங்க. என்னைக்குமே அவ உங்களுக்கு நல்ல தோழியா இருக்கணும்னுதான் நான் விரும்பறேன், வெச்சிடறேன்.''

மகேந்திரனுக்கு கரகரவென்று கண்ணீர் சுரந்தது. ●

உலகப் புகழ்பெற்ற செஸ் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த், மெட்ராஸ் மேனேஜ்மெண்ட் அசோஸியேஷனில் தமது வெற்றி ரகசியத்தைச் சுவையுடன் பகிர்ந்துகொண்டார். அந்தச் சொற்பொழிவின் சில முக்கிய பகுதிகள்...



''உலக ஜூனியர் சாம்பியன்ஷிப், கிராண்ட் மாஸ்டர் பட்டங்களை வென்றபிறகு என் இலக்கு என்னவென்றே எனக்குத் தெரியவில்லை. மலை ஏறும்போது சிகரத்தை நோக்கி வேகமாக ஏறுவதும், அதனை அடைந்த பிறகு அடுத்து ஏற வேண்டிய சிகரம் எது என்று அண்ணாந்து பார்ப்பதற்கு பதிலாக, கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்துத் திருப்திபடுவதும் மனித இயல்பு. எனக்கும் அதுதான் நிகழ்ந்தது. ஆட்ட முடிவுகள் எனக்குத் திருப்தி தரவில்லை.

மீண்டும் எழுந்தேன். 1991-ல் கார்போவை வென்றது ஒரு மைல்கல். உலகின் மிகச் சிறந்த செஸ் வீரர்கள் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள். கார்போவை வென்ற போது, சோவியத் நாட்டின் கிராண்ட்மாஸ்டர்களையே நம்மால் ஜெயிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டது. உலகமே என்னைத் திரும்பிப் பார்த்தது. அது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது. மற்றவர்கள் நம்மை விமர்சனம் செய்தால், அவர்கள் நம்மை மதிக்கிறார்கள் என்றும் நான் புரிந்துகொண்டேன். அதுவரை நான் கற்ற அத்தனை நுட்பங்களையும் பயன்படுத்தி 2000-ஆம் ஆண்டில் உலக சாம்பியன் ஆனேன்.

என்றாலும் அதன் பிறகு சிறிது கணக்கம் ஏற்பட்டு விட்டது. 2001-ல் பங்கேற்ற போட்டியில் எடுத்த எடுப்பிலேயே இரண்டு தோல்விகள். மூன்றாவது ஆட்டத்தில் எப்படியாவது தோல்வியைத் தவிர்க்க வேண்டும் என்ற எனது முயற்சி பலிக்கவில்லை. அடுத்த ஆட்டத்தை மிகவும் பொறுமையாக ஆடிய போதிலும், மீண்டும் தோல்விதான். என் வாழ்நாளில் நான் அடைந்த மிக மோசமான தோல்வி அது. தோல்வியின் காரணம் என்னவென்று ஆராய்ந்தேன். நான் நன்றாகவே பயிற்சி செய்தேன்; கட்டுப்பாட்டுடன்தான் ஆடினேன்.

போதுமென்றா

அனுபவித்து ஆடிய ஆட்டங்கள் மிகுந்த திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தன. இதனாலேயே வெற்றி தேடி வந்தது!



ஆனாலும் என்னிடம் பொ(வெ)றி இல்லை என்பது புரிந்தது. தோல்வியைத் தவிர்க்க வேண்டும் என்று நான் வகுத்த வியூகங்கள் சரியில்லை. நான் ரிஸ்க் எடுத்து சில முடிவுகளை எடுக்கத் தயங்கியது புரிந்தது. வெற்றி, புதிய அணுகுமுறைகளை, வழிமுறைகளை கடைபிடிக்கும் துணிச்சலைக் கொடுக்காது. ஆனால், தோல்வி அப்படி இல்லை. நமது அணுகுமுறையை மாற்றலாமா எனச் சிந்திக்க வைக்கும். புது வியூகங்களைச் செயல்படுத்த துணிச்சலைக் கொடுக்கும்.

அடுத்த சில மாதங்களுக்கு புதிய ஆட்ட முறைகள் என் மனத்தை ஆக்கிரமித்தன. அதன் பின் துபாயில் துரித கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் பங்கேற்றேன். இரண்டாவது சுற்றிலேயே தோல்வி அடைந்தேன். அதிரடியாக ஆடி வெற்றி பெறும் துரித செஸ் ஆட்டம் எனது பலம் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், அந்தத் தோல்வி கன்னத்தில் ஓங்கி அறைந்தாற்போல இருந்தது. ஆனாலும் ஆட்ட விதிமுறைகள்படி அத்துடன் வெளியேறி, மற்றவர்கள் ஆடுவதை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம் அல்லது டோர்னமெண்ட்டில் இறுதிவரை தொடர்ந்து ஆடலாம். நான் இரண்டாவதைத் தேர்ந்தெடுத்தேன். இதுவரை நான் ஆடிய முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் ஆட முடிவு செய்தேன். கவனம் செலுத்தி ஆடுவது மட்டுமே என் வேலை; வெற்றி, தோல்வி பற்றிக் கவலைப்படக் கூடாது என்ற பாலிசியுடன் ஆடியபோது, ஆட்டத்தில் அதிரடியாக ஒரு வேகம் இருந்தது. சரியான கணக்கீடுகள் இருந்தன. அனுபவித்து ஆடிய ஆட்டங்கள் மிகுந்த திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தன. இதனாலேயே அடுத்து பராகுவேயில் நடந்த துரித செஸ்ஸிலும் என்னை வெற்றி தேடி வந்தது.

- சவால்களை சந்தோஷத்துடன் எதிர்கொள்ள வேண்டும். மற்றவர்கள் எப்படி ஆடுகிறார்கள் என்று பார்த்து, அதைப்போன்று ஆடுவதற்கு பதிலாக நான் விஸ்வநாதன் ஆனந்த் போலத்தான் விளையாட வேண்டும்.
- வழக்கமான முறைகளையே மீண்டும் மீண்டும் பின்பற்றுவதைவிட, புதிய வியூகங்கள் ஆட்டத்துக்கு வலு சேர்க்கும்.
- அடிக்கடி சுய ஆய்வு செய்துகொள்ள வேண்டும். சரி எது, தவறு எங்கே, என்ன மாற்றங்கள் தேவை என்று கேள்விகளை எழுப்பி விடை காண வேண்டும். மாற்றங்களை ஏற்கும் மனப்பக்குவம் இல்லாவிட்டாலோ, இருப்பதே போதும் என்ற திருப்தி ஏற்பட்டு விட்டாலோ அது வீழ்ச்சிக்கு அறிகுறி.
- வெற்றி, தோல்வியை எப்படி எதிர்கொள்வது என்று மற்றவர்கள் சொல்லிக் கொடுத்துத் தெரிந்துகொள்ள முடியாது. உள்ளே கனன்று கொண்டிருக்கும் ஆர்வத்தால் மட்டுமே அது சாத்தியம்.

தமிழில்: **மௌலி**

னம் வேண்டாம்!

உயிரூட்டும் குருக்ஷேத்ரம்

ஹஸ்தினாபுரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள குருக்ஷேத்ரத்தை எதற்காக பாரதப் போருக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கு விடை கூறத் தொடங்கினார் ராமநாதன்.

''குருக்ஷேத்ரம் சரஸ்வதி நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்கு முனிவர்கள் வாழ்ந்தனர். பிரம்மனும் அவரது சீடர்களும் உலக நன்மைக்காக இங்கு வேள்விகளை வளர்த்தனர். வசிஷ்டரும், விஸ்வாமித்திரரும் இங்கு அதிக தவ வலிமை பெற்றனர். அதே சமயம் கடுமையான, மிக உக்கிரமான போர் நிகழ்ந்ததும் இங்குதான்!

தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸம்வேதா யுயுத்ஸவா

மாமஹா: பாண்டவச்சைவ இம்குர்வத சஞ்சய

- என்கிறது பகவத் கீதை. ஆக, மகாபாரத யுத்தத்துக்கு முன்பே குருக்ஷேத்ரம் பிரபலமாக இருந்திருக்கிறது.

அது எப்படி?

ஒருநாள் குரு என்ற மன்னர், குருவனத்துக்கு வேட்டையாட வந்தார். வேட்டையாடியபடியே வனத்துக்குள் சென்றுவிட்டார். ஒரு கட்டத்தில் மெய்க்காப்பாளர்களை விட்டுப் பிரிந்து விட்டார். மாலை தொடங்கி இருள் சூழ்ந்தபோது, அவருக்கு மயக்க உணர்வு ஏற்பட்டது. தட்டுத் தடுமாறி தமது அரண்மனைக்கு வந்து சேர்ந்த மன்னர் அங்கிருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்தார். சற்று நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது.

பண்டிதர்கள் வந்து பார்த்தனர். அரசரின் சில விரல்களில் மட்டும் உயிர் இருப்பதைக் கண்டனர்! பின்னர் மன்னரின் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்துவிட்டு, அரசியிடம், ''மன்னர் விடியற்காலையில் உயிர் பெற்று விடுவார். இவரது முன்னோர் ஒருவர் பெற்ற ஒரு சாபத்தின் காரணமாக இன்று இரவு மட்டும் இவர் மடியும்படி நேர்ந்தது'' என்றனர்.

அனைவருக்கும் ஒரே வியப்பு. அரசரின் சில விரல்களில் மட்டும் எப்படி உயிர்ப்பு இருக்கிறது?

காலையில் கண் விழித்து உயிர் பெற்ற மன்னரிடம் நடந்ததைச் சொன்னார்கள். உயிர்ப்புடன் இருந்த விரல்களை உற்றுப் பார்த்தார் குரு. அவருக்கு நினைவு வந்துவிட்டது:

''முந்தைய தினம்.



சூரிய அஸ்தமனமாகும் வேளையில், வேட்டையாடிக் கொண்டிருந்தபோது நம் அம்புகள் தீர்ந்து போயின. எய்யப்பட்டு தரையில் விழுந்து கிடந்த மூன்று அம்புகளைத் தரையிலிருந்து எடுத்தோம். அப்போது இந்த மூன்று விரல்களில் மட்டும் சிறிது மண் புகுந்துவிட்டது. அந்த மூன்று விரல்களில்தான் நேற்று உயிர்ப்பு இருந்ததாகச் சொல்கிறார்கள்!'' என்றார் குரு.

அப்படியானால் அந்த மண்ணுக்கு இவ்வளவு மகிமையா?

வித்வான்களை அனுப்பித் தமது யூகத்தைச் சொன்னார். ''உண்மைதான். எந்த விரல்களில் குருக்ஷேத்ரத்தின் மண் படிந்திருந்ததோ, அவை உயிர் பெற்றுவிட்டன''

அப்பொழுது அரசருக்குத் தோன்றியது. 'எந்த மண்ணுக்கு, உயிரற்ற உடலுக்கு உயிரைத் திரும்ப அளிக்கும் சக்தி இருக்கிறதோ, அது பெரிய அளவில் தானியங்களை உற்பத்தி செய்யவும் உதவுமே!'



மண்!

அருண் சரண்யா

2

மீண்டும் ஒருமுறை குருக்ஷேத்ரத்துக்குச் சென்ற மன்னர், அங்கு விவசாயம் செய்யத் தீர்மானித்தார். அவர் செய்ய எண்ணியது இதுவரை யாருமே இந்தப் பிரபஞ்சத்தில் செய்திராத விவசாயம். அதற்கேற்ப தெய்வ அருளும் அவருக்குக் கிடைத்தது.

மன்னர் தமது தேரில் ஏறி குருக்ஷேத்ரத்தை அடைந்தார். அவர் அங்கு தரையிறங்கிய மறு நொடியே அவரைச் சுமந்து வந்த தேர், ஒரு கலப்பையாக மாறியது.

கண்களை மூடிக் கொண்ட மன்னர், சிவபெருமானிடமிருந்து காளையையும், எமதர்மனிடமிருந்து எருமையையும் யாசித்தார். இரண்டு விலங்குகளும் அவரிடம் அனுப்பப்பட்டன. மன்னர் அவற்றை ஏரில் பூட்டி உழத் தயாரானார்.

அப்போது அங்கு வந்த தேவேந்திரன் ''நீங்கள் இங்கு எதைப் பயிர் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நான் தவம், சத்யம், பொறுமை, தயை போன்ற நற்குணங்களைப் பயிர் செய்யப் போகிறேன். அதற்காக அதற்கேற்ற நிலத்தைத் தயார் செய்கிறேன்'' என்றார்.

இந்திரனுக்கு வியப்பேற்பட்டது. ''உங்களுக்கு இதற்கான விதை எங்கிருந்து கிடைக்கும்?'' என்றார்.

''அது என்னிடமிருக்கிறது'' என்றார் குரு. இதைக் கேட்ட இந்திரன் புன்னகையுடன் நகர்ந்தார்.

நிலம் பயிரிடுவதற்குத் தயாரானதும் திருமால் அரசர் முன் தோன்றினார். ''எங்கே உன்னிடமுள்ள விதைகள்?'' என்றார்.

திருமாலின் சக்கரத்தைத் தன் கரத்தில் எடுத்த மன்னர், அதனால் தமது வலது கையைத் துண்டு துண்டாக்கி ஒவ்வொன்றையும் விதையாகக் கருதிப் பயிரிடத் தொடங்கினார்!

மகிழ்ந்த மாதவன் ''மன்னா, உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்!'' என்றார்.

''திருமாலே, நான் உழும் நிலம் முழுவதும் புண்ணியத் தலமாய் தர்மக்ஷேத்ரம் என்று பெயர் பெற வேண்டும். இங்கு இறப்பவர்கள் பாவ புண்ணியங்களை மீறி சொர்க்கம் செல்ல வேண்டும்'' என்றார்.

''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லி பகவான் மறைந்தார். அப்பொழுதிலிருந்து

இந்த இடம் குரு அரசரின் பெயரால் 'தர்ம க்ஷேத்ரம்' என்று பெயர் பெற்றது.

ஆனால், பாரத யுத்தத்துக்கென இந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு-அதுவும் பல விஷயங்களில் வேறுபட்டிருந்த பாண்டவர்களும் கௌரவர்களும் - எப்படி ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர்?

ஹஸ்தினாபுரத்திலிருந்து நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தள்ளியிருக்கும் இந்த இடத்தை எதற்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

போர் தவிர்க்க முடியாத ஒன்று என்ற நிலை ஏற்பட்டு விட்டது. போர்க்களம் எது என்ற அடுத்த கேள்வி எழுந்தது.

இது ஒரு 'மகா'பாரதப் போர் என்பதை இரு தரப்பினரும் உணர்ந்திருந்தனர். மிக மிக விசாலமான வெட்டவெளிப் பிரதேசத்தில்தான் போர் நடக்க வேண்டும்.

சுமார் இரண்டு லட்சம் பேர் போரில் பங்கு பெறுவார்கள். இவர்களுக்கான தண்ணீர் போன்ற வசதிகள் நிறைந்த இடமாக அந்தப் போர்க்களம் இருக்க வேண்டும்.

இரு தரப்பினரும் நிறைய யோசித்தார்கள். பாரதமெங்கும் தங்கள் ஒற்றர்களை அனுப்பினார்கள்.

ஆங்காங்கே சில விசாலமான இடங்கள் இல்லாமல் இல்லை. ஆனால், ஓர் பேரழிவுப் போர் தங்கள் மண்ணில் நடப்பதை அந்த இடங்களுக்குரிய மன்னர்கள் விரும்பவில்லை. அனுமதி அளிக்க முன்வந்த சில மன்னர்களின் பகுதியிலோ பிற வசதிகள் இல்லை.

தவிர, வேறு சில நாடுகளில் போர் நடைபெற்றால், அந்த நாட்டு மன்னன் ஒரு தரப்புக்குச் சாதகமாகச் சில உதவிகளைச் செய்யக்கூடும் என்ற சந்தேகம்.

ஆக, கூட்டிக் கழித்துப் பார்த்தபோது 'குருக்ஷேத்ரம்தான் போருக்கு ஏற்ற இடம்' என்பதே ஒருமித்த தேர்வாக இருந்தது.

அன்றைய குருக்ஷேத்ரம் ஒரு நகரம் அல்ல. நாடும் அல்ல. சரஸ்வதி, திருஷத்வதி ஆகிய இரண்டு பெரும் நதிகளுக்கு நடுவே அமைந்த பகுதி அது. 48 கோசப் பரப்பு. பாண்டவர் - கௌரவரின் முன்னோர்களுக்குச் சொந்தமான பூமி, குருக்ஷேத்ரப் பகுதியில் பரவிக் கிடந்தது. ஆக அங்கு போர் நடத்த எந்த ஒரு மன்னனின் அனுமதியும் தேவைப்படவில்லை.

தவிர, குருக்ஷேத்ரப் பகுதியில் வசித்த மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே அவர்களை வேறிடங்களுக்கு அனுப்புவது பெரிய பணியல்ல. தவிர, சலசலத்து ஓடிவரும் சரஸ்வதி நதி, அத்தனை போர் வீரர்களின் தாகத்தையும் தணிக்கவல்லதாக இருந்தது!''

விளக்கி முடிந்தபோது, ராமநாதனின் முகத்தில் சின்னதாகக் களைப்பு தெரிந்தாலும் அதையும் மீறி ஒரு திருப்தி புலப்பட்டது.

(பயணிப்போம்)



லால் பகதூர் சாஸ்திரி

பதினேழு வயதில் காந்திஜியால் ஈர்க்கப்பட்டவர், உடனே படிப்பை உதறி, தேசியப் போராட்டத்தில் இணைந்தார். உடனே சிறைவாசம்!

1925ல் லாலா லஜ்பதிராய் தோற்றுவித்த மக்கள் தொண்டர் சங்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டு, தீவிரமான சமூகப் பணிகள் பல ஆற்றியவர். சில ஆண்டுகளிலேயே அதன் தலைவராகவும் ஆனார்!

தாம் கரம் பிடித்த பெண்ணுக்கும் (லலிதா) சுதந்தர வேட்கையை ஊட்டி, பல போராட்டங்களை - ஒத்துழையாமை இயக்கத்தை உ.பி.யில் நடத்தி, சிறை சென்றவர். சுதந்தர இந்தியாவில் நேருவுக்குப் பின் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரி, தம் வாழ்நாள் முழுவதும் எளிமை, தியாகம், தேச நலன் என்பதையே உயிர் மூச்சாகக் கொண்டிருந்தவர்.



வைரவிழா சிந்தனை...

புள்ளியாய்ச் சிறைபட்ட பிரியம்!



உடல் முழுக்க
நனையவில்லையெனினும்
சிலிர்க்க வைக்கிறது ஒரு துளி மழை

நூலிழை பிடித்து
மலையேற்றம் சாத்தியமில்லை
எனினும் என் விரல் பற்றி
விடை தருகிறாய்
அடுத்த விநாடியில்
உச்சியில் இருக்கிறேன்

புள்ளியிலிருந்து துவங்குகின்றன
கோடுகள் செவ்வகங்கள்
வட்டங்கள் கோளங்களென்று
பல வடிவங்களும்

உருவங்கள் நிறைவடைந்த பின்
பார்த்தேன் உள்ளே
புள்ளியாய்ச் சிறைபட்டுள்ளது
பிரியம்

க.அம்சப்ரியா

"ஹலோ வாசகர்களே! ஆண்டு மலரைக் கொடுத்துட்டு ரிசல்ட்டை எதிர் பார்த்து படபடப்பா காத்துட்டு இருக்கோம். சொல்லுங்க உங்க கருத்துகளை."

"என் பெயர் ராம் ஆதிநாராயணன். கல்கியின் தீவிர வாசகர். திருச்சி, கும்பகோணம் வரைக்கும் வந்த 'உங்கள் ஊரில் கல்கி குழு' எங்க ஊருக்கும் வரும்னு ஆவலோடு இருந்தோம். ஆனா ஏமாற்றமாயிடுச்சு" என்றார் இந்த தஞ்சாவூர்க்காரர்.

"மீண்டும் உங்கள் ஊரில் கல்கி திட்டம் செயல்படுத்தப்படும்போது தஞ்சைக்கு வருவோம்" என்று கூறிவிட்டு இதழ் குறித்துக் கேட்டோம்.

"கிளைச்சாலை பகுதி ரொம்ப அருமை. ஓர் உதவி இயக்குநரோட சுக துக்கங்களை சரியா பதிவு பண்ணியிருக்கீங்க. கவிதைக்கு ஒரு பக்கம்தான் ஒதுக்கறீங்க. அதிலும் ஒரேயொரு கவிதைதான் போடறீங்க. அது சிறப்பா இருக்கு. ஒரு வாரம் இந்த மாதிரி போட்டா, இன்னொரு வாரம் சிறுசிறு கவிதைகள் நாலஞ்சு போடலாம். இதன் மூலமா வளரும் கவிஞர்கள், வாசக கவிஞர்களை ஊக்கப்படுத்தலாம்" என்றார்.

அடுத்து பேசியவர் முப்பத்து மூன்று வருடங்களாக கல்கியை வாசிக்கும் பி.எல்.பரமசிவம், மதுரைக்காரர்.

"புத்தகம் படிக்கிறது எனக்கு சுவாசிக்கிற மாதிரி. தினமும் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அதையெல்லாம் முடிச்சுட்டு கொஞ்ச நேரமாவது புத்தகம் படிச்சாத்தான் அந்த நாள் திருப்தியா

✱ ஜி.சுந்தரமூர்த்தி



✱ பி.எல்.பரமசிவம்





✱ ராம்.ஆதிநாராயணன்



கழிஞ்சதா நினைப்பேன். எல்லா வாரப் பத்திரிகைகளையும் விரும்பிப் படிக்கிறவன். பல ஆசிரியர்களை நேர்ல சந்திச்சுப் பேசியிருக்கேன். கல்கி ஆசிரியரையும் சந்திச்சிருக்கேன்'' என்றார்.


இந்த வார கல்கியில் இவரை மிகவும் கவர்ந்தது கிரேஸி பகுதியில் இடம்பெற்ற பதில்கள். ''ஒவ்வொரு வாரமுமே அவர் பதில்களை விரும்பிப் படிப்பேன். அறிவு சார்ந்த நகைச்சுவை கிரேஸி ஸாரின் ஸ்பெஷாலிட்டி. கல்கியைப் பற்றி பொதுவா சொல்லணும்னா எளிமை, தரம், நிறைவு'' என்றார்.

''**சி**றுகதைகள், ஒரு பக்கக் கதைகளை இன்னும் அதிகம் எதிர்பார்க்கிறோம்'' என்றவர் திருமயம் பெ.பாண்டியன். இவரது மனைவி கவிதாவும் கல்கியின் அன்பு வாசகிதான்.

''மலிவான விஷயங்கள் கல்கியில் இருக்காது. அது சினிமாவாக இருந்தாலும் சரி, அரசியலாக இருந்தாலும் சரி, தவறு செய்தவர்களின் செயல்பாட்டைச் சுட்டிக்காட்டுவதில் தனித் தன்மையைக் கடைபிடிக்கும். சம்பந்தப் பட்ட நபரே படித்தாலும் அந்த எழுத்தை மதிப்பார்னு தோணுது. கல்கியில் வருகிற விமர்சனங்கள் அப்படி இருக்கும்'' என்றார் கவிதா பாண்டியன்.

''தராசு பதில்களைப் படிக்கும்போது ஒரு விஷயம் குறித்த புதிய பார்வையும் பிடிபடாத கோணமும் கிடைக்கும். சிறு நீரகம் பற்றி ஆரம்பிச்சிருக்கற புதிய தொடர், அவசியமான, அனைவரும் தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம்'' என்றார்.

புதிய பார்வை- பிடிபடாத கோணம்!




* பாண்டியன் - கவிதா

''**பா**ர்த்திபன் கனவுக்கான வடிவமைப்பும் படங்களும் அருமையா இருக்கு. ரஜினியின் சிவாஜி படம் சக்கைப் போடு போட்டுட்டு இருக்கற இந்நேரத்துல எம்.ஜி.ஆரோட 'உலகம் சுற்றும் வாலிபன்' படம் எங்க ஊர் தியேட்டர்ல போட்டாங்க. அதுக்கும் ஹவுஸ்புல். அந்த மாதிரிதான் எவ்வளவு புதிய விஷயங்கள் வந்தாலும் பழமையை ரசிக்கவும் சுவைக்கவும் ஒரு கூட்டம் இருக்கு'' என்றவர் அரியலூர் ஜி.சுந்தரமூர்த்தி.

''வாசகர் பங்கேற்பு இன்னும் தேவை. அதேபோல மசாலா விஷயங்களை இன்னும் கூட்டுங்க. போட்டிகளை எதிர்பார்க்கிறோம். அதோட முடிவுகளை சீக்கிரம் எதிர்பார்க்கிறோம்'' என்றார்.

உங்கள் எதிர்பார்ப்புகளை கூடிய வகையில் நிறைவேற்றுவோம். நன்றி வாசகர்களே! ○





சசிகுமார்

பேசத் துவங்கிய உடனேயே அசத்துகிறார் சுப்பிரமணியன். ''பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னாடி எங்க வீட்டுத் தோட்டத்துல நாலு பப்பாளிச் செடி நட்டேன். இப்ப அது ஏழு ஏக்கர் பப்பாளித் தோட்டமா மாறிக் கிடக்குது!''என்கிறார். நாமக்கல்

லட்ச ரூபாய்

–பரவசம் தரும் பப்பாளி சாகுபடி

மாவட்டம், ஒருவந்தூர் புதூர் கிராம விவசாயி இவர்.

சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்படும் 'ரெட் லேடி' ரக பப்பாளி விதைகளே, இங்கு பப்பாளிச் செடிகளாக வளர்ந்து பலன் தருகின்றன. சிறிய பாலிதீன் பைகளில், பைக்கு ஒரு விதையாக ஊன்றி வைத்து, அதனை நாற்பது நாள் நாற்றுச் செடியாக வளர்க்க வேண்டும். அரை அடி உயரத்துக்கு வந்ததும் அந்த நாற்பது நாட்களுக்குள் தோட்டத்தினை நான்கு முறை நன்கு உழவு செய்து, ஒரு ஏக்கருக்குப் பத்து டிராக்டர் தொழு உரம் இட வேண்டும்; கிடங்கு வெட்ட வேண்டும். நாலாபுறமும் ஒவ்வொரு செடிக்கும் ஒன்பது அடி இடைவெளி விட்டு, நாற்பது நாள் பப்பாளிச் செடியினை தோட்டத்தில் ஒரு நாளின் மாலைப் பொழுதில் நட வேண்டும்!

அதிலிருந்து பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை, ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு செடிக்கு ஐந்து லிட்டர் தண்ணீர்

ஊற்றி, மாதம் ஒருமுறை களையெடுக்க வேண்டும். மூன்று மாதம் கழித்து ஒவ்வொரு செடிக்கும் உரம். தோட்டத்தில் நட்ட ஆறு மாதத்தில் பூ பூக்கத் துவங்கும். காய் காய்க்கும். பலன் தரத் துவங்கிய ஆறாவது மாதத்திலிருந்து தொடர்ந்து இரண்டு வருடத்துக்கு அது பாட்டுக்குக் காய்த்துக் கொண்டேயிருக்கும். பப்பாளி பூ பூக்கவோ, காய் காய்க்கவோ பருவங்கள் ஏதுமில்லை. எந்நாளும் விளைச்சல்தான். பப்பாளிக் காய் மீது மெலிதாகச் சிவப்புக் கோடுகள் தெரிந்த உடன் அதனைப் பறித்து விடுகிறார்கள்.

''அந்தக் காயைப் பறித்தவுடன் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே காகிதம் சுற்றி அடுக்கி வைத்து, அவற்றை அப்போதே வெளியூர்களுக்கு அனுப்பி வைத்து விடு

லாபம்!




* சுப்பிரமணியன்

வோம். செங்காய்களாக இருக்கும் நிலையில் பறித்து அனுப்பி வைத்தால் தான் மார்க்கெட்டுக்குச் சென்றடையும் போது பழமாகி விற்பனைக்கு உதவியாக இருக்கும். மரத்திலேயே பழுக்க விட்டுப் பறித்து அனுப்பினால், வெளியூர்களுக்குப் போய்ச் சேரும்போது அவை அழுகி வீணாகிப் போய் விடும்'' என்கிறார் சசிகுமார் - விவசாயி சுப்பிரமணியனின் மகன்.


''ஒரு ஏக்கருக்கு எழுநூறு பப்பாளிச் செடி. இரண்டரை வருட சாகுபடி. தண்ணீர் இதற்குக் குறைவாகவே பாய்ச்ச வேண்டும். மழைக் காலங்களில் கிடங்குகளின் பள்ளங்களில் தேங்கி நிற்கும் நீரை வடிகால்கள் வழியாக வெளியேற்ற வேண்டும். பப்பாளி நன்கு வளர்வதற்கு வளமான மண், நீர் இரண்டும் அவசியம் தேவை. இரண்டரை வருடங்களில் ஒரு ஏக்கருக்குச் செலவு எழுபத்தைந்தாயிரம் ஆகும். எல்லாச் செலவுகளும் போக இரண்டரை வருடங்களில் ஒரு ஏக்கருக்கு லட்ச ரூபாய் நிகர லாப வருவாய் பெற்றுத் தரக் கூடியது பப்பாளிச் சாகுபடி'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் எஸ்.சுப்ரமணியன்.

– **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதைகள்



1. கல் - கந்தகப் பூக்கள் ஸ்ரீபதி, சிவகாசி
2. பாம்பு - விஜயா ராஜு, புது டெல்லி
3. சரணாலயம் - டாக்டர் ஸ்ரீரா, சென்னை
4. அழுத விழிகள் - என். சொக்கன், பெங்களூரு
5. அம்மா, அப்பா, மாதங்கி - ஜார்ஜினா கந்தசாமி, சென்னை
6. காட்டாமணக்கு - எஸ்.சஞ்சய் ராமசாமி, புனல்வாசல்
7. துருப்புச் சீட்டு - கிருஷ்ணா, திருச்சி
8. ஏற்றம் - ஷிவாஸ், புது டெல்லி
9. குற்ற உணர்வு - சுபமி, மதுரை
10. பூக்காலம் - ஜி.ஆர்.சுரேந்தர்நாத், சென்னை



* பி.சாய்நாத்

மீடியா வானின் த்ருவ நட்சத்திரம்!

ஆசிரியர் பக்கம்

ஜர்னலிஸம் துறையில் நுழையும் இளைஞர்களின் கனவுகள் வண்ணமயமாக இருக்கின்றன. தொலைக் காட்சித் தொகுப்பாளர், எஃப்.எம். நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்று ஒளி-ஒலியில் மின்ன ஆசை. அங்கிருந்து ஓர் எட்டு எட்டி பெரிய திரைக்கு மாறும் ஆசை. ப்ரின்ட் மீடியா என்றால் அச்சில் பெயர் பளிச்சிட பிரபலங்களைப் பேட்டி கண்டு எழுதும் ஆசை. அந்தச் சந்திப்புகள் மூலம் சமூக அந்தஸ்தையும் செல்வாக்கையும் வளர்த்துக்கொள்ளும் ஆவல்... என்று பல்வேறு கிளைக் கனவுகளுடன் வரும் இளைஞர்கள், பத்திரிகைத் துறையானது ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்கிற பிரதான நோக்கத்தைத் தவறவிடுகின்றனர். நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் இயங்கிவரும் நிறுவனங்கள் கூட ஜனநாயகப் பொறுப்பைக் கிளை நோக்கமாக்கிவிட்டுக் கேளிக்கையையே முக்கியமாக ஏற்றுவிட்டன. இதன் விளைவாக மீடியா என்றாலே பரபரப்புப் பத்திரிகை இயல் என்பதாக ஓர் அர்த்தம் (அனர்த்தம்?) கற்பிக்கப் பட்டுவிட்டது.

இத்தகைய சூழலில் பி.சாய்நாத், மாக்ஸாய்ஸாய் விருது பெற்றிருக்கிறார். பத்திரிகைத் துறையில் நுழைய விரும்புவோருக்கும் நுழைந்துவிட்டவர்களுக்கும் ஒரு த்ருவ நட்சத்திரம் இதன் மூலம் அடையாளம் காட்டப் பட்டிருக்கிறது.

முதல் பக்கச் செய்தியாக என்றும் இடம்பெறாது என்று தெரிந்தும்...

பரபரப்பான போஸ்டர் செய்தியாகி விற்பனையைக் கூட்டாது என்று தெரிந்தும்...

அசௌகரியமான சூழலில் செய்தி சேகரிக்க நாள் கணக்கில் உழைக்க வேண்டும் என்று தெரிந்தும்...

எழுதும் விஷயத்துக்கு அனைத்துத் தரப்பினரின் பாராட்டுகளும் வந்து குவியாது என்பது தெரிந்தும்...

தோலுரித்துக் காட்டப்படும் அவலங்களும் பரிதாபங்களும் பெரிய அளவில் விரைந்து மாறிவிட மாட்டா என்பது நன்றாகவே தெரிந்தும்...

யாரைப் பற்றி எழுதுகிறோமோ, அவர்கள் நம் எழுத்தைப் படிக்கக்கூட போவதில்லை என்று தெரிந்தும்...

இந்திய கிராம மக்களின் கஷ்டங்களையும் போராட்டங்களையும் சளைக்காமல் பதிவு செய்து வந்திருக்கிறார் பி.சாய்நாத். 'இதழியல் தவம்' என்று அவரது பணியை அழைப்பது நிச்சயமாக மிகையில்லை.

அவரது அர்ப்பணிப்புக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம்தான் மாக்ஸாய்ஸாய் விருது. விருதுப் பணம் மொத்தமும் கிராம மக்கள் குறித்து ஆய்ந்து எழுதவே பயனாகும் என்று தெரிவித்ததுடன், தாம் பணியாற்றும் தி ஹிந்து நாளிதழுக்கும் அந்த விருது உரியது என்று சொல்லியிருக்கிறார் பி.சாய்நாத்.


விருதுக்கு வாழ்த்து; பெருந்தன்மைக்கு வணக்கம்!

MILKY WAY CELL TECH

மில்கி வே செல் டெக்

SALES & SERVICE





Our Special

- Service for All Mobile Phones
- Exchange All Type of Mobile
- Easy Installment

SUNDAY ALSO OPEN

Softwares, Phone Backup, Ringtones, MP3
Song / Themes, Smart Movies, Antivirus

மில்கிவே செல் டெக்

MILKY WAY CELL TECH

NOKIA | SAMSUNG | LG | Sony Ericsson | MOTOROLA | dishtv | TATA Sky
dopod | Airtel | fly | i-mate | BlackBerry | O2 | i-pod | All Accessories

TL Network Services (Group of Milky Way)
Authorised Service franchise for Dish TV (Dish Care)

No.94 Habibullah Road, T.Nagar, Chennai - 17
Tel: 28342020, 28342929 Fax: 42125090 Mobile: 9840066110-8.
milkyway.celltech@yahoo.com

"SERVICE IS OUR WAY OF LIFE"

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.



எதைப் படிப்பது என்பதை

நீங்கள் தேர்வு செய்யுங்கள்

பணப் பிரச்சனைக்கு

நாங்கள் தீர்வு தருகிறோம்

TMB கல்விக் கடன்

ரூ. 15 இலட்சம் வரை

- அனைத்து பட்டப்படிப்புகளுக்கும்
- குறைந்த வட்டி
- சுலபத் தவணை வசதி
- எளிய விதிமுறைகள்
- விரைவான பரிசீலனை

*நிபந்தனைக்கு உட்பட்டது

கூடுதல் வட்டி தரும் டெபாசிட் திட்டத்தை பற்றி அறிய
"TMB55" என டைப் செய்து "667733" என்ற எண்ணுக்கு SMS செய்க

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.

Customer Oriented & Committed to Excellence

பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி-628 002 இணையதளம் www.tmb.in

ESTD. 1921